Vol.5, Issue 6 | Annual Subscription ₹480

@NewsRotary
/RotaryNewsIndia

# ரோட்டரி நியூஸ்

இந்தியா
www.rotarynewsonline.org

நவம்பர் 2022



Rotary

ADVT.



Rotary
IMAGINE ROTARY
Come, Meet & Greet
These eminent speakers
@
VISAKHA VISTA
New horizon
Rotary Institute - 2022
Zone 4,5,6,7
STEPHANIE A. URCHICK
ROTARY INTERNATIONAL PRESIDENT
2024-25
JENNIFER E. JONES
ROTARY INTERNATIONAL PRESIDENT
2022-23
SUNIL GAVASKAR
Ex Cricketer
Padmabhushan Krishna Ella
C.M.D. Bharath Biotech
REGISTER HERE
rotaryinstitute2022.com
BEYOND POSSIBLE
ONE SOLDIER, FOURTEEN PEAKS - MY LIFE IN THE DEATH ZONE
NIMSDAI PURJA
9th to 11th December, 2022 Radisson Blu Resort Visakhapatnam, Andhra Pradesh
CONTACT
PDG Ch. Kishore Kumar
Chairman | +919849487870
PDG Dr. E.K. SAGADHEVAN
Chairman - Promotion | +919994477725
Email
rotaryinstitute2022@gmail.com

# உள்ளே


12
காஷ்மீர் எல்லைப் பகுதி கிராம மக்கள் வாழ்வில் ஒளியேற்றும் மும்பை ரோட்டரி

20
TRFஐ இந்தியா கொண்டாடுகிறது

24
ரோட்டரிக்கு நிதி சேர்த்த பேடாவும், பம்பரமும்!

30
முகப்பேர் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியை மாற்றி வரும் ரோட்டரி

36
80,000 பெண் குழந்தைகளுக்கான “மெகா” மேம்பாட்டுத் திட்டம்

46
மும்பையின் துப்புரவுத் தொழிலாளர்களின் போதைக்கு எதிரான போராட்டம்

51
முக்ரோவில் ஒரு மருத்துவ முகாம்

52
சம்பல்புரி புடவையின் மந்திர நெசவு

56
கேரள உணவு வகைகளின் சுவையும் மணமும்

62
RC கொச்சி ஈஸ்டின் 50 ஆண்டுகளைக் குறிக்க ஒரு ஆதரவு சிகிச்சை மையம்

68
இளைஞர்களுக்கான புத்தக உலகம்

70
பிலாஸ்பூரில் ஒரு ரோட்டரி பசுமைப் பாதை

72
இளவயதில் பசுமையைக் கற்றுக்கொடுங்கள்




## எலிசபெத் அரசிக்குச் சிறப்பான அஞ்சலி

*ரோட்டரி நியூஸின் அக்டோபர் இதழில் ராணி இரண்டாம் எலிசபெத் பற்றிய உங்கள் கட்டுரையை ரசித்தேன். மற்ற ரோட்டரி இதழ்களில் நான் அவரை பற்றிய வேறு எந்த கட்டுரையையும் காணவில்லை என்பதால் அது சற்று அசாதாரணமாக இருந்தது.*

*சிறிய ஐரோப்பிய கழிவறைகள் குறித்து புகார் கூறிய ஸ்ரீனிவாஸ் ராகவனை நான் பாராட்டுகிறேன். இது மிகவும் உண்மை. ஒரு நாடு எவ்வளவு செல்வச் செழிப்புடன் இருக்கிறதோ, அந்த அளவுக்கு அவர்களின் கழிப்பறைகள் சிறியதாக இருக்கும், இதில் நார்டிக் நாடுகளில் ஒன்று முதன்மையாக வெற்றி பெறும். ஏன் யாரும் புகார் செய்யவில்லை என்று நான் எப்போதும் ஆச்சரியப்பட்டிருக்கிறேன்!*

PRIP *கல்யாண் பானர்ஜி*
RC *வாபி* — D 3060

*அக்டோபர் இதழ்* 1953*ல் அரசி இரண்டாம் எலிசபெத்தின் அழகிய முடிசூட்டு விழாப் புகைப்படத்துடன் சிறப்பாக அமைந்திருந்தது. தன் சிறந்த பண்புகளுக்காக எல்லாராலும் வியக்கப்பட்டவர் இந்த அரசி. அரசி இரண்டாம் எலிசபெத்தின் தலைமைப் பண்புகளை விவரித்து, உலகத்*




*தலைவர்களுக்கு அவர் மாதிரியாக இருந்ததைக் குறிப்பிட்டு ஆசிரியர் சிறப்பாக எழுதியிருந்ததைக் கண்டு மகிழ்ந்தேன். சமீபத்தில் இஸ்ரேல்,* UK, *நியூயார்க்கில் இளம்பிள்ளைவாதம் காணப்பட்டிருப் பதைப்பற்றிய* RI *தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸின் செய்தியைப் படித்து ஏமாற்றமடைந்தோம்.*

RID *மகேஷ் கோட்பாகி* UN*ன் பங்கையும் அதன் தொடக்கத்திலிருந்து ரோட்டரியின் சுறுசுறுப்பான பங்கேற்பையும் விளக்குகிறார்.* RID A S *வெங்கடேஷ், மிகப் பெரிய திட்டங்களை ஒரு ரோட்டரி ஆண்டில் முழுக்க நிறைவு செய்ய இயலாது என்பதால், தொலைநோக்கில் சிந்திப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறார். உலகத் தலைவர்கள், குறிப்பாக நம் இந்தியத் தலைவர்களின் ஈர்ப்பான புகைப்படங்களுடன் அரசியைப் பற்றிய அட்டைப்படக் கட்டுரை சிறப்பாக அமைந்திருந்தது. கருப்பை வாய்ப் புற்றுநோய், புணே ரோட்டரியன்கள் பிங்கோரி கிராமத்தை மாற்றி அமைத்தது, மாற்றுத் திறனாளிகளின் உரிமைகளுக்காகப் போரிடுதல், பிரிட்டிஷ் அரச குடும்பத்தின் ரோட்டரி இணைப்பு, தில்லியில் புற்று நோய்க்கான மிதிவண்டிப் பேரணி, தலைவர் ஜோன்ஸ் புணேயில் ஒரு கதிர்வீச்சு மையத்தைத் தொடங்கிவைத்தல்பற்றிய மற்ற கட்டுரைகள் அனைத்தும் நன்கு அமைந்திருந்தன.*

*ஃபிலிப் முலப்பொனெ* M T
RC *திருவனந்தபுரம் சப்அர்பன்* — D 3211

UK*ன் மிக நீண்ட ஆட்சியாளர் அரசி இரண்டாம் எலிசபெத்தின் நளினம், கண்ணியம், அர்ப்பணிப்புணர்வு ஆகியவை அனைவராலும் பாராட்டப் பட்டன. ஆப்பிரிக்கா, ஆசியாவில் காலனி ஆதிக்கம் விலகுதல், காமன்வெல்த் வளர்தல் உள்ளிட்ட மிகப் பெரிய மாற்றங்களின் காலகட்டத்தில் அவர் நம்பிக்கை அளிக்கும்வகையில்*

RI தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ் தன்னுடைய செய்தியில், வாழ்க்கையில் முக்கிய இலக்குகளை எட்டுவதற்கு நாம் வசதி யற்ற வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று அவர் சரியாகச் சொல்கிறார். இலங்கையில் UNICEF உடன் இணைந்து நிதி திரட்டி, பொருளாதார நெருக்கடியால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்கள், குழந்தைகளுக்கு உதவ நிதி திரட்டும் ரோட்டரியின் நல்ல பணி பாராட்டத்தக்கது. துன்பத்தில் இருக்கும் நம் அண்டை நாட்டுக்கு உதவ ரோட்டரியன் களுக்கு மிகச் சிறந்த வாய்ப்பு இது.

DRFC தாக்ஷாயினி (உங்களுடைய சிறந்த கதைகளைச் சொல்லுங் கள்) RID 3232ல் 26% பெண் உறுப்பினர்கள் (1,500) இருப்பதாகவும், இந்த ஆண்டு இந்த மாவட்டம் மேலும் 1,000 பேரைச் சேர்க்கும், ஐந்து மகளிர் மட்டும் சங்கங் களையும் தொடங்கும் என்று சொல்வது பாராட்ட வேண்டியது. இந்த மாவட்டம் உலக அளவில் TRF வழங்கலில் மூன்றாவது இடத்தில் உள்ளது, இந்த ஆண்டு $2.15 மில்லியன் இலக்கு அமைத்துள்ளது, இதுவும் பாராட்டவேண்டியது.

S முனியாண்டி
RC திண்டுக்கல் ஃபோர்ட் — D 3000

பள்ளி செல்வது ஆடம் பரமானால்... என்ற தலைப்பில் ரஷீதா பகத் எழுதியுள்ள அட்டைப் படக் கட்டுரை மிகச் சிறப்பாக இருந்தது. களைகளுக்கு நீர் ஊற்றாதீர்கள்.. என்ற அவருடைய கட்டுரை சிறப்பாக இருந்தது. முந்தைய 10 ஆண்டுகளில் 1.2 மில்லியன் உறுப் பினர்கள் ரோட்டரியில் சேர்ந்தார்கள். ஆனால், அதே எண்ணிக்கை யிலானோர் விலகினார்கள் என்று RI தலைவர் ஜோன்ஸ் சரியாகச் சுட்டிக் காண்பிக்கிறார். நாம் நம் உறுப்பினர்களை

*இருந்தார். இனி வரும் ஆண்டுகளில் அரசியின் மரபு பெரிய அளவில் தெரியும் என்று ரஷீதா பகத் சுட்டிக்காண்பிப்பது மிகச் சிறப்பு.*

KMK *மூர்த்தி*
RC *செகந்திராபாத்* — D 3150

*அரசி இரண்டாம் எலிசபெத்தின் மறைவு உலகைத் துயரத்தில் ஆழ்த்தியுள்ள நேரத்தில் அவரைப்பற்றிய நன்கு எழுதப்பட்ட கட்டுரையுடன் வந்த சிறப்பான அக்டோபர் இதழுக்கு நன்றி. ரோட்டரியன் இதழ்களின் கடிதங்கள் பத்தி தனக்கு எப்போதும் ஆர்வம் ஊட்டுவதாக* RI *முன்னாள் தலைவர் ஹ்யூஜ்* M *ஆர்ச்சர் ஒருமுறை கூறினார். ரோட்டரி நியூஸை பொறுத்தவரை எங்களில் பலரும் அப்படிதான் எண்ணுகிறோம். கடிதங்கள் பத்திக்கு இரண்டு முழுப் பக்கங்களை வழங்கும் ஆசிரியர் குழுவுக்கு எங்கள் நன்றி. இந்த இதழ் ரோட்டரியின் சிறந்த கதையை, செய்திகளைப் பல வழிகளில் விவரிக்கும்போது, அதன் வாசகர்களுடைய கருத்துகள், பார்வைகள் மிக முக்கியம். நம் இதழில் வெளியாகும் பலவிதமான உள்ளடக்கங்களைப்பற்றிய விமர்சனங்கள், வலுவான கருத்துகள், மிகுந்த பாராட்டுகளின் கலவையால், மக்கள் எதைப் படிக்கிறார்கள் என்று நமக்குப் புரியத் தொடங்குகிறது.*

R *ஸ்ரீனிவாசன்*
RC *மதுரை மிட்-டவுன்* — D 3000

*இரண்டாம் எலிசபெத் மகாராணியை பற்றிய கட்டுரை அருமை. பிரிட்டிஷ் ராயல்டியின் ரோட்டரி இணைப்பு என்ற கட்டுரை ஊக்கமளிக்கும் வகையில் இருந்தது.*

NCERT*யின் அங்கீகாரம், ரோட்டரி எந்த வகையான கூட்டாண்மையை முன்னணியில் கொண்டு வர முடியும் என்பதற்கு சான்றாகும். சக்கர நாற்காலியில் இருந்து ஊனமுற்றோர் உரிமைகளுக்காகப் போராட்டம் என்ற கட்டுரை, மாற்றுத் திறனாளிகளின் தேவைகளைப் பற்றிய பச்சாதாபத்தையும் புரிதலையும் காட்டும் பல தலைமுறையினருக்கான செய்தியாகும். அகமதாபாத் இன்டராக்டர்களின் பணி மாணவர்களிடையே தலைமைத்துவ வளர்ச்சிக்கு ஒரு எடுத்துக்காட்டு. "நாங்கள் செயல்படுபவர்கள் மட்டுமல்ல, நோக்கம் மற்றும் செல்வாக்கு உள்ளவர்களும் கூட." என்ற* RI *தலைவரின் அறிக்கை எனக்கு மிகவும் பிடித்திருந்தது.*

*விவேக் கண்டேல்வால்,*
RC *தியோனார்* — D 3141

## ரோட்டரி நியூஸின் அழகிய மாற்றம்

*ஒவ்வொரு மாதமும் ரோட்டரி நியூஸ் படித்து நான் மிகவும் மகிழ்கிறேன், நீங்கள் அதை முழுக்க மாற்றியுள்ளீர்கள், இது ஓர் அழகிய மாற்றமாக உள்ளது. ஹிந்து பிஸினஸ் லைனில் உங்கள் கட்டுரைகளை நான் தொடர்ந்து படித்துவந்தேன். அக்டோபர் இதழில் சந்தியா ராவ் எழுதிய மலைகளில் இலக்கியத் திருவிழா என்ற கட்டுரையைப் பதிப்பித்தற்கு என் நன்றியைத் தெரிவிக்கிறேன். கீதா ஸ்ரீனிவாசன் உள்ளிட்ட பல ரோட்டரியன்கள் இதில் பங்கேற்றதை அறிந்து மகிழ்ந்தேன். எங்களுடைய புகழ் பெற்ற நூலகக் கட்டடம் நம் இதழில் வெளி யாகியிருப்பதை அறிந்து எங்கள் சங்க உறுப்பினர்கள் மகிழ்ச்சியாக உணர்ந்தோம். அடுத்த ஆண்டு இலக்கியத் திருவிழாவில் கலந்து கொள்ளுங்கள், எங்கள் துடிப்பான ஆசிரியரை நாங்கள் விரும்பி வரவேற்கிறோம்! ரோட்டரி நியூஸை அழகாக மாற்றி அமைத்த உங்களுக்கு நன்றி.*

R *தேசிங்குராஜன்*
RC *உதகமண்டலம்* — D 3203

எப்படி நடத்துகிறோம், அவர்களுடைய வசதி, தேவைகளை எப்படிக் கவனித்துக் கொள்கிறோம், அவர்களுடை எப்படி ஊடாடுகிறோம் என்பன வற்றில் நாம் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். இல்லா விட்டால், அவர்கள் ரோட்டரியிலிருந்து விலகி விடுவார்கள்.

டேனியல் சிட்டிலப்பிள்ளி,
RC கலூர் — D 3201

செப்டம்பர் இதழில் RI தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ், மற்ற ரோட்டரி தலைவர்களுடைய ஊக்கம் அளிக்கும் பொன்மொழிகள் நிறைந்திருந்தன. ஒவ்வொரு பாடமும் வளர்வதற்கான ஒரு வாய்ப்பு; ஒரு புதிய, பசுமையான ரோட்டரியை கற்பனை செய்யுங்கள்; களைகளுக்கு நீர் ஊற்றாதீர்கள், பூக்களில் கவனம் செலுத்துங்கள், இன்னும் பல.

பியூஷ் தோஷி
RC பேளூர் — D 3291

**அட்டையில்:** DGE *அருண் பார்கவாவின் மனைவி சீமா குப்வாராவில் ஒரு இராணுவ நல்லெண்ண பள்ளியில் பள்ளி மாணவர்களுடன்.*

தங்கள் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன. மேலும் உங்கள் சங்கத்தின் நல திட்டங்கள் புகைப்படங்களுடன் **rushbhagat@gmail.com** அல்லது **rotarynewsmagazine@gmail.com** என்ற மின்னஞ்சலிற்கு அனுப்பலாம். **WHATSAPP** செய்திகள் ஏற்றுக்கொள்ள படமாட்டாது. மேலும் ரோட்டரி செய்திகளை எங்கள் **www.rotarynewsonline.org** என்னும் இணைய தளத்தில் **Rotary News Plus** என்னும் இதழில் காணலாம்.

# இதயத்திலிருந்து நம் ரோட்டரி கதைகளைப் பகிர்வோம்

ரோட்டரியைக் கற்பனை செய்யுங்கள் என்பதைக் கேட்கும்போது அது ஒரு பெரிய வேலையைப்போல் தோன்றலாம், ஆனால், அதன் மிக முக்கியமான அம்சம் மிகச் சிறியது, தனிப்பட்டதும் கூட.

சில காலம் முன்புவரை ரோட்டரி உறுப்பினர்கள் தங்களுடைய சேவையை அமைதியாகச் செய்யும்படி எதிர்பார்க்கப்பட்டது. அதன் பின்னணியில் இருக்கும் எண்ணத்தை நான் பாராட்டினேன்: பணிவு என்பது ஒரு சிறந்த பண்பு, நாம் அதைப் பிற வழிகளில் தொடர்ந்து வளர்க்க வேண்டும்.

ஆனால், ரோட்டரியை நமக்குள் வைத்துக்கொள்வதற்கு ஒரு விலை உண்டு. நம் ரோட்டரி கணங்களைப் பகிர்ந்துகொள்வதன்மூலம் நாம் பிறருக்குத் தாராளமாக உதவுகிறோம், ரோட்டரியின் தாக்கத்தைப் புரிந்து கொள்ள அவர்களுக்கு ஒரு வாய்ப்பை அளிக்கிறோம்.

மக்கள் ரோட்டரியை உணரும்படி செய்வது எப்படி? இதற்கு மிகச் சிறந்த வழி, நம் ரோட்டரி கணங்களைப் பகிர்வதுதான். நம் அனைவரிடமும் அப்படிப்பட்ட கணங்கள் உண்டு, சாதாரணமானவர்கள் நோக்கத்துடன் இணைந்து அசாதாரணமான ஒன்றை உருவாக்கிய கணங்கள் அவை.

சிலருக்கு, அவர்கள் முதன்முறை ஒரு கூட்டத்துக்குச் செல்லும்போது அந்த ரோட்டரி கணங்கள் உருவாகின்றன. வேறு சிலருக்கு, அப்படிப்பட்ட ஒரு கணத்தைக் கண்டறியச் சில ஆண்டுகள் ஆகலாம், ஒருவேளை, நாம் சேவை புரியும் ஒருவருடைய கண்களில் மகிழ்ச்சியைக் காணும்போது அவர்கள் அதை உணரலாம். அல்லது, இன்னோர் உறுப்பினரின் சொற்கள் அவர்கள் மனத்தை நெகிழ வைக்கலாம்.

நிக் மற்றும் நான் இந்தப் பயணத்தைப் பகிர்ந்து கொள்ளும் போது, நீங்கள் செய்யும் பணியை, அதனால் மாறும் வாழ்க்கைகளை எண்ணி நாங்கள் வியக்கிறோம். இந்த ஆண்டுமுழுவதும், இந்தப் பயணங்களை எங்களுக்குப் பொருள் உள்ளவையாக ஆக்கும் காட்சிகள், கதைகளை நான் உங்களுடன் பகிர்ந்து கொள்ளப்போகிறேன்.

உங்கள் ரோட்டரி உலகில் நீங்களும் இதைச் செய்வீர்கள் என்று நான் நம்புகிறேன். இதை நீங்கள் கூட்டங்களில் அல்லது சமூக ஊடகத்தில் பகிர்ந்துகொள்ளலாம். உள்ளூர் ஊடகத்தின் வழியாக அதைப் புகழ் பெறச் செய்யலாம். உங்கள் கதைகளை நண்பர்களிடம் சொன்னால் கூட அதனால் தாக்கம் உண்டாகும்.

*நவம்பர் மாதம் இன்ட்டராக்டின் 60வது ஆண்டாகும்! நம் இன்ட்டராக்ட் உறுப்பினர்கள், அவர்களை ஆதரிக்கும் மக்களுக்கு என்னுடைய அன்பான வாழ்த்துகள். உங்கள் பணிகள் அனைத்துக்கும் நன்றி.*

ரோட்டரியின் செய்தி, இன்னும் மேம்பட்ட உலகுக்கான நம் கனவுகளுக்கு நமக்குத் தூதர்கள் தேவை. மிகச் சிறந்த தூதர்கள், நம் உறுப்பினர்கள்தான். நீங்கள் கதைகளைப் பகிரப் பகிர, அவற்றை இதயத்திலிருந்து பகிரப் பகிர, இன்னும் பலரை நம்முடன் இணைந்து செயல்படவும் தொடர்ந்து இணைந்திருக்கவும் நீங்கள் ஊக்குவிக்கிறீர்கள்.

இதற்கு ஒரு சிறு எடுத்துக் காட்டாக, இனி வரும் மாதங்களில் நான் இந்தப் பத்தியைச் சில ரோட்டரி உறுப்பினர்களிடம் ஒப்படைக்கவுள்ளேன். அவர்கள் நம் அமைப்பில் பன்முகத்தன்மை, சமநிலை, உள்ளடக்குதலுடன் தொடர்புடைய தங்களுடைய தனிப்பட்ட கதைகளைப் பகிர்ந்து கொள்வார்கள். ரோட்டரியின் வருங் காலத்தில் DEIன் முக்கியத்துவத்தை உணர்கிற ஒரு வழியாக அவற்றை அனுபவித்த மக்களிடமிருந்து இந்தக் கதைகளை நாம் நேரடியாகக் கேட்பது முக்கியம்.

நாம் செய்கிற அனைத்திலும், மக்கள் ரோட்டரியைப்பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பது நம் வருங்காலத்தை வடிவமைக்கும்.

**ஜெனிஃபர் ஜோன்ஸ்**
RI தலைவர்


கௌலா ஜமில்



# இதுதான் சிறந்த சேவை!

உக்ரைன் மீதான ரஷிய படைகளின் தாக்குதல் தொடர்கிறது. போர் முடிவதற்கான அறிகுறிகள் ஏதும் இல்லை. இரு தரப்பிலும் ஏராளமான உயிர்கள் பலியாகியுள்ளன. வன்முறையால் நாடு சீரழிந்து வருகிறது. உலகில் வன்முறையும் மோதல்களும் மீண்டும் தலைதூக்கியுள்ளன. உலகில் அமைதியை நிலைநாட்டுவதுதான் ரோட்டரியின் முக்கிய குறிக்கோளாகும். ஐ.நா. சாசனத்தில் கையெழுத்திட்ட நாள் முதலே அதனுடன் இணைந்து அமைதியை நிலைநாட்ட ரோட்டரி செயலாற்றி வருகிறது என்பது அனைவரும் அறிந்ததே. இந்தச் சூழலில் இந்தியா-பாகிஸ்தான் எல்லைக் கட்டுப்பாட்டு கோடு அருகே குப்வாராவில் உள்ள கிராம மக்களின் வாழ்வில் ஒளியேற்றி வரும் மும்பை ரோட்டேரியன்கள் பற்றிய கதை இந்த இதழின் அட்டைப்படக் கட்டுரையாக இடம்பெற்றுள்ளது.

இந்திய ராணுவத்தின் மூத்த அதிகாரி ஒருவரின் வேண்டுகோளின் பேரில் மும்பையைச் சேர்ந்த ரோட்டேரியன்களின் மாயாஜால வேலைகளை கற்பனை செய்து பாருங்கள். RID 3141ன் DGE அருண் பார்கவா தலைமையில் ரோட்டரி குழுவினர் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டிலிருந்து 10 கிமீ. தொலைவில் உள்ள குப்வாராவில் ஒரு குக்கிராமத்துக்குச் சென்றனர். அங்குள்ள கிராம மக்களின் தேவைகளை கேட்டறிந்தனர். அவர்களுக்கு அடிப்படைக் கல்வி, சுகாதார வசதிகளை செய்து கொடுத்ததுடன், பெண்களுக்கு திறன் வளர்ப்பு பயிற்சியும் அளித்துள்ளனர். ஈத் பண்டிகையை ஒட்டிய காலத்தில் இது நிகழ்ந்ததால் DGE தலைமையிலான ரோட்டரி குழுவினர் அங்குள்ள இமாமுடன் சேர்ந்து தொழுகையிலும் ஈடுபட்டனர். இமாம் மற்றும் பஞ்சாயத்துத் தலைவரின் வேண்டுகோளை ஏற்று ரூ.8 லட்சம் மதிப்பில் இரண்டு மோட்டார் சைக்கிள் ஆம்புலன்ஸ் வாகனத்துக்கும் உடனடியாக ஏற்பாடு செய்தனர். இது அவ்விருவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. மும்பை ரோட்டேரியன்கள் வெகு தொலைவில் உள்ள காஷ்மீர் வந்து ஈத் பண்டிகையில் பங்கேற்று பரிசுகளையும் வழங்கியதை கண்டு அவர்கள் நெகிழ்ந்துபோனார்கள்.

இந்தியாவிலிருந்து அன்னியப்பட்டவர்கள்போல் உணர்ந்த கிராம மக்கள், இப்போது நாம் இந்தியர்கள் தான் என்ற உணர்வை பெற்றனர். மும்பை ரோட்டேரியன் களுடன் சேர்ந்து அவர்கள் நமது தேசிய கீதமான ஜன கன மனவை பாடினர். சிலர், தங்கள் வாழ்வில் முதல் முறையாக தேசிய கீதத்தை பாடியது குறிப்பிடத்தக்கது.

மேலே கூறப்பட்டது ஒரு ஆரம்பம்தான். அட்டைபடக் கட்டுரையை நீங்கள் முழுவதுமாக படித்தால் ராணுவத்தின் நல்லெண்ண பள்ளிகளில் ஏழைக் குழந்தைகள் படிப்பதற்கு எப்படி ஆதரவு அளித்தனர் என்பதையும். காஷ்மீரிலிருந்து செவிலியர்களை மும்பைக்கு அழைத்து வந்து தனியார் மருத்துவமனைகளில் சிறப்பு பயிற்சி அளித்ததன் மூலம் குழந்தைகளின் இறப்பு விகிதம் எப்படி அதிரடியாக குறைந்தது என்பதையும் தெரிந்துகொள்ள முடியும். இதுதான் சிறந்த சேவை.

இந்த முயற்சியிலும் பெண்களுக்கு அதிகாரமளித்தல், பெண்களின் மேம்பாடு பெருமைக்குரிய இடத்தை பெற்றுள்ளது. ராணுவத்தினர் மூலம் பெண்களுக்கு கைவினைப் பொருள்கள் மற்றும் உணவுப் பொருள்கள் தயாரிப்பதில் சிறப்பு பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. கிராமப்புற மக்களின் தயாரிப்புகளை சந்தைப் படுத்துவதற்கான வாய்ப்புகளும் ஏற்படுத்தித் தரப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் ராணுவத்தின் கரம் வலுப்படுவதுடன் காஷ்மீர் கிராம மக்களின் வாழ்வை மேம்படுத்தி அவற்றின் மூலம் அவர்களின் மனதை வெல்லும் இந்திய அரசின் முயற்சியும் வெற்றிபெறும்.

நீண்டகால பிரச்னைகளுக்கு எளிதான தீர்வுகள் இல்லை. அவற்றுக்கு மெல்ல மெல்ல, ஆனால் நிச்சயமாக தீர்வுகாணப்பட வேண்டும். இதில் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவெனில், இதற்கான முயற்சியில் ராணுவத்துக்கு தன்னார்வ துறையைச் சேர்ந்த ஒரு சிவில் பங்குதாரர் தேவைப்பட்டபோது, அதன் மூத்த அதிகாரிகள் ரோட்டரியின் உதவியை நாடியதுதான்.

நீங்கள் மேல்சட்டை (கோட்) அல்லது புடவையின் மேல் அணியும் ரோட்டரி சின்னத்துக்கு சிரம் தாழ்ந்த வணக்கம்!

ரஷீதா பகத்

**ஆளுநர் குழு**

RID 2981 செல்வநாதன் V
RID 2982 சரவணன் P
RID 3000 ஜெரால்ட் I
RID 3011 அசோக் கண்டூர்
RID 3012 Dr லலித் கன்னா
RID 3020 பாஸ்கர் ராம் V
RID 3030 Dr ஆனந்த் ஜுன்ஜுனுவாலா
RID 3040 ஜினேன்தர ஜெயின்
RID 3053 ராஜேஷ்குமார் சூரா
RID 3054 பல்வந்த் S சிரானா
RID 3060 ஸ்ரீகாந்த் இந்தானி
RID 3070 Dr துஷ்யந்த் சௌத்ரி
RID 3080 கல்டா V P
RID 3090 குல்பர் சிங் சௌத்ரி ரெடோல்
RID 3100 தினேஷ் குமார் சர்மா
RID 3110 பவன் அகர்வால்
RID 3120 அனில் அகர்வால்
RID 3131 Dr அனில் லால்சந்த் பார்மர்
RID 3132 ருக்மேஷ் ஜகோட்டியா
RID 3141 சந்தீப் அகர்வல்லா
RID 3142 கைலாஷ் ஜித்தானி
RID 3150 டல்லா ராஜசேகர் ரெட்டி
RID 3160 வொமினா நாக சதீஷ்பாபு
RID 3170 வெங்கடேஷ் H டேஷ்பாண்டே
RID 3181 N பிரகாஷ் காரன்த்
RID 3182 Dr ஜெயகௌரி ஹடிகல்
RID 3190 ஜிதேந்திரா அனேஜா
RID 3201 ராஜ்மோகன் நாயர் S
RID 3203 இளங்குமரன் B
RID 3204 ப்ரமோத் நாயனார் V V
RID 3211 பாபுமோன் K
RID 3212 முத்து V R
RID 3231 பழனி J K N
RID 3232 Dr நந்தகுமார் N
RID 3240 குஷாநாவா பாபி
RID 3250 சஞ்ஜீவ்குமார் தாகூர்
RID 3261 ஷஷங்க் ரஸ்டோகி
RID 3262 பிரவுதத்தா சுபதி
RID 3291 அஜய்குமார் லா



துகார் டவர்ஸ், 3-வது தளம், மார்ஷல் சாலை, எழும்பூர், சென்னை-8. முகவரியில் இயங்கும் ரோட்டரி நியூஸ் டிரஸ்டுக்காக, P T பிரபாகரால், “ராசி கிராபிக்ஸ் P Ltd., 40, பீட்டர்ஸ் சாலை, ராயப்பேட்டை, சென்னை-14” என்ற முகவரியில் அச்சிடப் பட்டு வெளியிடப்படுகிறது.

**ஆசிரியர்:** ரஷீதா பகத்.



ரோட்டரி மாத இதழில், பங்களிப்பாளர்கள் தெரிவிக்கும் கருத்துக்கள் ஆசிரியர் அல்லது ரோட்டரி நியூஸ் டிரஸ்டின் (RNT) அறங்காவலர்கள், RI ஆகியோரின் கருத்துக்கள் அல்ல. தலையங்கம்/விளம் பரத்தில் வெளியிடப்படும் கருத்துக் களினால் ஏற்படும் இழப்புகளுக்கு எந்த பொறுப்பும் ஏற்க முடியாது. கட்டுரை களை திருத்தவோ / சுருக்கவோ ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு. இதழில் வெளியாகும் கட்டுரைகளை RNT அனுமதியுடன் மட்டும் மறுபதிப்பு செய்யலாம்.


இணையதளம்



# போலியோவை ஒழிப்போம்



முதல் உலக போலியோ தினம் (அக் 24) ரோட்டரி மற்றும் அதன் கூட்டாளியான GPEI ஆகியவற்றால் குறிக்கப்பட்டு மூன்று தசாப்தங்களுக்கும் மேலாகி விட்டது.

**போலியோ இல்லாத தேசமாக இந்தியாவின் பயணம்:** இந்தியாவில் போலியோ ஒழிப்பு அக்டோபர் 2, 1994 அன்று தொடங்கியது, முதல் பல்ஸ் போலியோ நோய்த்தடுப்புத் திட்டம், மூன்று வயது வரையிலான ஒரு மில்லியன் குழந்தைகளை இலக்காகக் கொண்டு, செயல்படுத்தப்பட்டது. உலகளாவிய போலியோ நோயாளிகளில் 60 சதவிகிதம் பேர் இந்தியாவில் இருந்தனர். அடுத்த சில ஆண்டுகளில், தேசிய போலியோ கண்காணிப்புத் திட்டம் அனைத்து குழந்தைகளை கண்காணிக்கவும் தடுப்பூசி போடவும் தொடங்கப்பட்டது. வகை 1 அல்லது வகை 3 போலியோ வைரஸைச் சமாளிக்க மோனோவலன்ட் மற்றும் பைவலன்ட் வாய்வழி போலியோ தடுப்பூசிகள் (mOPV மற்றும் bOPV) அறிமுகப்படுத்தப்பட்டன. ரோட்டரி மற்றும் GPEI ஆகியவற்றின் ஒருங்கிணைந்த முயற்சியால், மார்ச் 24, 2014 அன்று WHO இந்தியாவை போலியோ இல்லாத தேசமாக அறிவித்தது.

தேசிய நோய்த்தடுப்பு தினம் 1995 முதல் 2017 வரை அனுசரிக்கப்பட்டு ஆண்டுக்கு இரண்டு முறை குழந்தைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டது, அதன் பிறகு ஒவ்வொரு ஆண்டும் ஒருமுறை நடத்தப்படுகிறது. கூடுதலாக, துணை தேசிய நோய்த் தடுப்பு தினத்தில் பல சுற்றுகள் அதிக ஆபத்துள்ள மாநிலங்கள் மற்றும் பகுதிகளில் நடத்தப்படுகின்றன. அரசாங்கம் அதிக விழிப்புணர்வைக் கடைப்பிடித்து, தொடர்ச்சியாக தடுப்பூசி செலுத்தி, நாட்டில் ஏதேனும் போலியோ தொற்று ஏற்பட்டால் அதற்குப் பதிலளிப்பதற்காக விரைவான பதிலளிப்புக் குழுக் களையும் உருவாக்கியுள்ளது.

உலகம் கிட்டத்தட்ட போலி யோவை ஒழித்துவிட்ட நிலையில், பாகிஸ்தான் மற்றும் நியூயார்க் போன்ற இடங்களில் வன போலியோ வைரஸ் கவலையை ஏற்படுத்துகிறது. சமீபத்தில், ஆப்கானிஸ்தான் (2), பாகிஸ்தான் (19) மற்றும் மொசாம்பிக் (6) போன்ற நாடுகளில் இருந்து 27க்கும் மேற்பட்ட போலியோ வைரஸ் தோற்று மீண்டும் தோன்றியுள்ளன. பல ஆண்டுகளாக கண்டறியப்படாத இடங்களில் போலியோ வைரஸ் மற்றும் போலியோவைக் கண்டறிவது, குறிப்பாக இறுதிக் கட்டத்தில் இந்த நோயை ஒழிப்பது எளிதானது அல்ல என்பதை நிரூபிக்கிறது.

**ரோட்டரியின் பங்கு**

RI தலைவர் ஜெனிபர் ஜோன்ஸ் செப்டம்பர் 24 அன்று உலகளவில் போலியோவை ஒழிப்பதில் ரோட்டரியின் உறுதிப்பாட்டை எடுத் துரைக்க 150 மில்லியன் அமெரிக்க டாலர் உறுதிமொழியை அறிவித்தார். உலகளவில் போலியோவை ஒழிப்பதற்கான ரோட்டரியின் போராட்டம் தொடர்கிறது.

மகேஷ் கோட்பாகி
RI இயக்குனர், 2021–23

# களின் செய்திகள்

## உங்கள் பெருந்தன்மையை பெரிதாக்குங்கள்



நவம்பர் மாதம், சங்கங்கள் மற்றும் மாவட்டங்களால் அறக்கட்டளை மாதமாக கொண்டாடப்படுகிறது. பல ஆண்டுகளாக ரோட்டரி அறக்கட்டளை மூலம் ரோட்டேரியன்கள் ஆற்றிய பணிகள் பல மடங்கு பெருகி, நாம் வாழும் சமூகங்களின் மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இது ரோட்டரியின் வெளிமுகம் மற்றும் நம் தர அடையாளத்திற்கு பங்களிக்கிறது. முக்கியமாக, நமது உள் முன்னுரிமையான உறுப்பினர் வளர்ச்சிக்கும் திறம்பட பங்களிக்கிறது.

இதில் இரண்டு கூறுகள் உள்ளன. ஒன்று, ஏழு கவனம் செலுத்தும் பகுதிகளில் சமூகத்தின் தேவையை மதிப்பிடுதல், அடையாளம் காணுதல், திட்ட மிடுதல் மற்றும் சேவைத் திட்டங்களைச் செயல் படுத்துவது ஆகும். இரண்டாவது பகுதி, TRF மூலம் தங்கள் வளங்களை பகிர்ந்து கொள்ள விரும்பும் ரோட்டேரியன்களின் தாராளமான பங்களிப்புகள். இந்த இரண்டு அம்சங்களும் நுணுக்கமாக பின்னிப் பிணைந்துள்ளன. நம் பிராந்தி யத்தில் உள்ள சங்கங்கள் மற்றும் மாவட்டங்களால் மேற்கொள்ளப்படும் சில முன்னோடியான திட்டங்களில் பங்கேற்கும் அதிர்ஷ்டம் எனக்கு கிடைத்துள்ளது.

ரோட்டரியின் மாயாஜாலத்தை உண்மையாக அனுபவிக்க நமது ரோட்டரி குடும்பத்தில் உள்ள ஒவ்வொரு உறுப்பினரும் இதில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். துரதிர்ஷ்டவசமாக, நம் பிராந்தியத்தின் நான்கில் ஒரு ரோட்டேரியன் மட்டுமே TRFக்கு பங்களிக்கிறார்கள். நம் அனைவராலும் பகிர்ந்து கொள்ள முடியும். நமக்குத் தேவைப் பகிர்ந்து கொள்ள இதயம் மட்டுமே. பணம் வெறும் ஒரு உருப்பெருக்கி கருவி. ஒரு கஞ்சனிடம் அதிகம் கஞ்சத் தனமாக இருக்க உதவும், தாராள மனப்பான்மை கொண்டவர் தாராளமாக இருக்க உதவும். பணம் உங்கள் விருப்பத்தை மட்டுமே வலியுறுத்து கிறது. நாம் எதை விரும்புகிறோம் என்பதை நாம்தான் தீர்மானிக்க வேண்டும்.

பல சமயங்களில், ஒருவர் பங்களிக்க வேண்டாம் என்று முடிவு செய்வதற்கு காரணம் ஆதாரங்களின் பற்றாக்குறை அல்ல, மாறாக TRF பற்றிய விழிப்புணர்வு இல்லாதது. எனவே, TRFன் செயல்பாடுகள், உலகம் முழுவதும் மற்றும் நமது சொந்த சமூகங்களில் அது ஏற்படுத்திய தாக்கம் பற்றி மேலும் அறிய முயற்சிப்போம். உங்கள் பணப் பையைத் திறக்கும்படி நான் கேட்கவில்லை. நாம் இதயத்தைத் திறப்போம், மீதமுள்ளவை தன்னைத் தானே கவனித்துக் கொள்ளும்! உங்கள் பெருந்தன்மை பெருகட்டும்.

A S வெங்கடேஷ்
RI இயக்குனர், 2021–23


**அறங்காவலர் குழுவினர்**

| | |
|---|---|
| A S வெங்கடேஷ் | RID 3232 |
| RI இயக்குனர் மற்றும் RNT தலைவர் | |
| Dr மகேஷ் கோட்பாகி | RID 3131 |
| RI இயக்குனர் | |
| Dr பரத் பாண்ட்யா | RID 3141 |
| TRF அறங்காவலர் | |
| ராஜேந்திர K சாபூ | RID 3080 |
| கல்யாண் பானர்ஜி | RID 3060 |
| சேகர் மேத்தா | RID 3291 |
| பாண்டுரங்க செட்டி | RID 3190 |
| அசோக் மஹாஜன் | RID 3141 |
| PT பிரபாகர் | RID 3232 |
| Dr மனோஜ் D தேசாய் | RID 3060 |
| C பாஸ்கர் | RID 3000 |
| கமல் சங்வி | RID 3250 |
| குலாம் A வாஹன்வதி | RID 3141 |

**RI இயக்குனர் தேர்வு**

| | |
|---|---|
| அனிருதா ராய் சௌத்ரி | RID 3291 |
| TN சுப்ரமணியன் | RID 3141 |

**செயற்குழு உறுப்பினர்கள் (2022–23)**

| | |
|---|---|
| Dr துஷ்யந்த் சௌத்ரி | RID 3070 |
| தலைவர், ஆளுநர் குழு | |
| வெங்கடேஷ் H தேஷ்பாண்டே | RID 3170 |
| செயலாளர், ஆளுநர் குழு | |
| Dr N நந்தகுமார் | RID 3232 |
| பொருளாளர், ஆளுநர் குழு | |
| தினேஷ்குமார் சர்மா | RID 3100 |
| ஆலோசகர், ஆளுநர் குழு | |



**ஆசிரியர்**
ரஷீதா பகத்


**துணை ஆசிரியர்**
ஜெய்ஸ்ரீ பத்மநாபன்

**நிர்வாகம் மற்றும் விளம்பர மேலாளர்**
K விஸ்வநாதன்

ரோட்டரி நியூஸ், துகார் டவர்ஸ்,
3-வது தளம், 34, மார்ஷல் சாலை,
எழும்பூர், சென்னை-8, இந்தியா
தொலைபேசி: 044 42145666
*rotarynews@rosaonline.org*
*www.rotarynewsonline.org*

இதழ்

# மரங்கள் சேர்ந்து காடாகும்



2017–18ல் நான் RI தலைவராகப் பணியாற்றியபோது ரோட்டரி சங்கங்களுக்கு நான் வழங்கிய சவால் உங்களில் பலருக்கு நினைவிருக்கும்: சுற்றுச்சூழலுக்கு உதவுவதற்கு ஒவ்வோர் உறுப்பினரும் ஒரு மரம் நடுதல். உங்களுடைய ஒத்துழைப்பால் 4 மில்லியனுக்கும் மேற்பட்ட மரங்கள் நடப்பட்டதாக நாம் மதிப்பிடுகிறோம், இது ஒரு பெரிய காடுதான்.

இந்த மாதம் நாம் ரோட்டரி அறக்கட்டளையைக் கொண்டாடுகிற நேரத்தில், அறக்கட்டளைத் திட்டங்கள் ஒவ்வொன்றும் ஒரு மரத்தை நடுவது போல்தான் என்பதை நினைவில் கொள்வோம். நம்பிக்கை, நலன் மற்றும் அமைதியை நாம் மரக்கன்றாக நடுகிறோம், வருங்காலத்தில் முதலீடு செய்கிறோம், பின்னர் ஒருநாள் அது இன்னும் மிகப் பெரிய ஒன்றாக வளரும்.

அப்படி ஒரு மரத்தை ரோட்டரி இலங்கையில் நட்டது. அங்கு ஆண்டுதோறும் பிறவி இதய நோயுடன் பிறக்கும் 2,000க்கும் மேற்பட்ட குழந்தைகள் இப்போது திருத்த அறுவைச் சிகிச்சையைப் பெறலாம். 17 ரோட்டரி மாவட்டங்களை மாவட்ட நியமிக்கப்பட்ட நிதிக்குப் பங்களிக்க ஒன்றுதிரட்டினார்கள். பின்னர், அறக்கட்டளை இதற்கு இணையான நிதியை வழங்கியது. இதனால், மொத்தம் $365,000 பன்னாட்டு நல்கை இலங்கையில் முதல் மனித இதய வால்வ் திசு வங்கியை அமைக்கப் பயன்படுத்தப்பட்டது. இதற்கான கட்டடம், ஊழியர்கள், பொருட்களை அரசு வழங்கியது.

உயிர் காக்கும் இந்த வளாகத்தை நான் 2017ல் பார்த்தேன், அது என்னால் மறக்க இயலாத ஓர் அனுபவம். ஆனால், நம்முடைய ஏழு கவனப் பகுதிகளிலும் இன்னும் பல மிகச் சிறந்த “மரங்கள்” நடப்பட்டிருப்பதை நான் பார்த்துள்ளேன். 1985ல் நாம் போலியோபிளஸ்ஸை நட்டோம், அது மனித வரலாற்றின் மிகச் சிறந்த பொது நல முன்னெடுப்புகளில் ஒன்றாக வளர்ந்தது, வைல்ட் போலியோவைரஸை 99.9% குறைக்க உதவியது. உலகெங்கும் ஏழு ரோட்டரி அமைதி மையங்கள் வேரூன்றியுள்ளன.

ஆனால், உறுப்பினர்களில் சுமார் 38% பேர்தான் நம் அமைப்பைத் தொடர்ந்து ஆதரிக்கிறார்கள். நாம் இதை மேம்படுத்தவேண்டும். அறக்கட்டளை அறங்காவலர் தலைவராக நான் ஒவ்வொரு சங்கத்துக்கும் ஒரு சவால் விட விரும்புகிறேன்: இந்த ஆண்டு நம் ரோட்டரி அறக்கட்டளைக்கு வழங்கும் திட்டம் ஒன்றை உருவாக்குங்கள்.

**இயன் ரிஸ்லி**
TRF அறங்காவலர் தலைவர்



# ஒவ்வொரு ஆண்டும் அறக்கட்டளைக்கு நிதி கொடுங்கள்!



ரோட்டரி அறக்கட்டளை அத்தகைய மகிழ்ச்சியை சமூகத்தில் வாழும் மக்களின் வாழ்க்கையில் ஏற்படுத்த பணியாற்றி வருகிறது. TRFக்கு பங்களிப்புச் செய்வதன் மூலம் தான் இது சாத்தியமாகிறது. மனித உயிரினத்தின் அடிப்படைத் தேவை நல்லுணர்வும் கண்ணியமும் தான். அவர்கள் தங்களது நிலையை உணர்ந்து, தங்களையும் தங்கள் குடும்பத்தையும் ஆதரிக்க உதவுவதே எங்கள் நோக்கமாகும். இது அவர்களுக்கு ஒரு நோக்கத்தையும், கண்ணியத்தையும், பெறுபவர்களை கொடுப்பவர்களாக மாற்றும் திறன் கொண்டது. மீன்களை கொடுப்பதுடன் நில்லாமல் மீன்பிடிக்கவும் கற்றுத்தருவதில் TRF நம்பிக்கை கொண்டுள்ளது.

கொடுப்பது நம்பிக்கையின் அடிப்படையிலான செயல். கொடுப்பதில்தான் உண்மையான மகிழ்ச்சி இருக்கிறது. TRFக்கு பங்களிப்புச் செய்வதன் மூலம் மகிழ்ச்சியை அனுபவியுங்கள். நீங்கள் அளிக்கும் நன்கொடை வறுமை, சுகாதாரம், எழுத்தறிவு, குடிநீர் மற்றும் போலியோ ஒழிப்பு என ஏதோ ஒரு துறையில் மாற்றத்தை ஏற்படுத்தும்.

நவம்பர் ரோட்டரி அறக்கட்டளை மாதம். அறக்கட்டளை மற்றும் அதன் பயனுள்ள பல திட்டங்களைத் தெரிந்து கொள்வதற்கும், மீண்டும் அர்ப்பணித்து கொள்வதற்கும் சிறந்த நேரம். முன்னாள் தலைவர் ஆர்ச் க்ளம்பின் இதயத்தில் உருவான திட்டம் தான் ரோட்டரி அறக்கட்டளை. உலகில் பல நன்மைகளைச் செய்யவே அறக்கட்டளை நிதி தொடங்கப் பட்டது. இது இன்று மனித சேவையின் முதன்மை அமைப்பாக உருவெடுத்துள்ளது. இந்த அறக்கட்டளை அனைவராலும் மதிக்கப்படுகிறது. இதன் வெளிப்படைத் தன்மையான நிர்வாகத்தால், செயல்பாடுகளால் உலகில் சிறந்த அறக்கட்டளையாக இருந்து வருகிறது. திறமை, வெளிப்படைத்தன்மை உள்ளிட்ட அளவுகோல்கள் மூலம் இது நான்கு நட்சத்திர தரத்துடன் செயல்பட்டு வருவதாக இதை வழிநடத்துபவர்கள் கூறுகின்றனர்.

நாம் EREY-Every Rotarian Every Year என்பதன் முக்கியத்து வத்தை தெரிந்துகொள்ள வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் ரோட்டேரியன்கள் TRFக்கு நிதிப் பங்களிப்பு செய்தால்தான் அது ஸ்திரத்தன்மையுடன் நீண்டகாலம் செயல்படுவதை உறுதி செய்ய முடியும். நீங்கள் ஒரு முறை பங்களிப்புச் செய்தால் மீண்டும் மீண்டும் கொடுப்பீர்கள் என்று நான் உறுதியளிக்கிறேன். உலகிற்கு நன்மை செய்ய TRFக்கு தொடர்ந்து பங்களிப்புச் செய்யுங்கள். நிதிப் பங்களிப்பு என்னும் மெழுகுவர்த்தியை ஏற்றி நீங்கள் கற்பனை செய்யும் ரோட்டரிக்கான வழியைக்காட்டுங்கள்!

**பரத் பாண்ட்யா**
அறங்காவலர், TRF

## ஆர்ச் க்ளம்ஃப் சொஸைட்டி: புதிய இந்திய உறுப்பினர்கள்

**Chair's Circle**

ராஜேஷ் மற்றும் சீமா குப்தா
RC *டெல்லி ராஜ்தானி*

சுரேஷ் மற்றும் உஷா ஜெயின்
RC *டெல்லி சவுத் ஈஸ்ட்*

வினய் மற்றும் ராஷ்மி குல்கர்னி
RC *புனே பார்வதி*

சுரேஷ் குமார் மற்றும் கிரன் பொடார்
RC *ஜெய்ப்பூர் மிட்-டவுன்*

**Trustees Circle**

அம்பலவானன் M மற்றும் கீதாராணி A
RC *மெட்ராஸ் மிட்-டவுன்*

சான்டியாகோ மார்டின் மற்றும் லீமா ரோஸ் மார்டின்
RC *கோயம்புத்தூர் சென்ட்ரல் மற்றும் கோயம்புத்தூர் ஆக்ருத்தி*

நிதின்ரதிலால் மற்றும் ஹர்ஷா நிதின் மேத்தா
RC *பாம்பே ஏர்போர்ட்*

V R முத்து மற்றும் மலர்வழி முத்து
RC *விருதுநகர்*

ராஷ்மி மற்றும் ராஜீவ் சர்மா
RC *புஸாவல் தப்தி வேலி*

N சுந்தரவடிவேலு மற்றும் S V முருகாம்பாள்
RC *கோயம்புத்தூர்*

S V வீரமணி மற்றும் ராதா
RC *அடையாறு*

பாஸ்கர் ராம் V மற்றும் சுசித்ரா
RC *ராஜமண்ரி ரிவர்சிட்டி*

## உலக ரோட்டரி எண்ணிக்கை

| | | |
|---|---|---|
| ரோட்டரி சங்கங்கள் | : | 37,014 |
| ரோட்டராக்ட் சங்கங்கள் | : | 11,436 |
| இன்டராக்ட் சங்கங்கள் | : | 18,767 |
| ரோட்டரி கம்யூனிட்டி கார்ப்ஸ் (RCC) | : | 12,550 |
| ரோட்டரியினர் | : | 1,197,365 |
| ரோட்டராக்டர்கள் | : | 203,851 |
| இன்டராக்டர்கள் | : | 431,641 |

*As on October 19, 2022*

## ரோட்டரி உறுப்பினர் எண்ணிக்கை

As on October 1, 2022 (Interim)

| RI District | Rotary Clubs | No of Rotarians | Women Rotarians (%) | Rotaract Clubs | Rotaract Members | Interact Clubs | RCC |
|---|---|---|---|---|---|---|---|
| 2981 | 135 | 6,651 | 7.74 | 64 | 308 | 55 | 243 |
| 2982 | 78 | 3,597 | 7.23 | 49 | 1,233 | 106 | 74 |
| 3000 | 132 | 5,430 | 9.87 | 100 | 1,595 | 311 | 214 |
| 3011 | 123 | 4,647 | 27.29 | 82 | 3,092 | 136 | 37 |
| 3012 | 150 | 3,760 | 23.14 | 73 | 1,464 | 85 | 61 |
| 3020 | 85 | 5,105 | 7.58 | 35 | 791 | 168 | 350 |
| 3030 | 99 | 5,404 | 15.27 | 127 | 2,364 | 360 | 382 |
| 3040 | 111 | 2,684 | 14.57 | 59 | 809 | 85 | 186 |
| 3053 | 74 | 2,974 | 17.55 | 35 | 558 | 54 | 128 |
| 3054 | 173 | 7,156 | 20.64 | 115 | 7,617 | 204 | 574 |
| 3060 | 105 | 4,970 | 14.99 | 66 | 2,431 | 81 | 152 |
| 3070 | 127 | 3,352 | 16.62 | 48 | 628 | 62 | 59 |
| 3080 | 107 | 4,342 | 13.43 | 148 | 2,589 | 209 | 118 |
| 3090 | 102 | 2,515 | 7.08 | 46 | 725 | 112 | 164 |
| 3100 | 100 | 2,151 | 9.72 | 14 | 83 | 31 | 151 |
| 3110 | 150 | 3,849 | 12.08 | 14 | 98 | 31 | 106 |
| 3120 | 90 | 3,686 | 16.33 | 66 | 598 | 36 | 55 |
| 3131 | 143 | 5,759 | 24.31 | 121 | 2,687 | 250 | 143 |
| 3132 | 91 | 3,669 | 12.84 | 35 | 604 | 126 | 168 |
| 3141 | 108 | 6,078 | 26.69 | 147 | 9,311 | 197 | 112 |
| 3142 | 103 | 3,910 | 21.13 | 86 | 2,243 | 145 | 87 |
| 3150 | 109 | 4,389 | 13.26 | 147 | 2,012 | 152 | 120 |
| 3160 | 78 | 2,728 | 9.71 | 30 | 320 | 20 | 82 |
| 3170 | 146 | 6,629 | 15.79 | 99 | 1,750 | 262 | 176 |
| 3181 | 87 | 3,635 | 9.88 | 36 | 461 | 205 | 116 |
| 3182 | 88 | 3,732 | 10.05 | 45 | 165 | 132 | 106 |
| 3190 | 166 | 6,877 | 19.73 | 208 | 7,622 | 279 | 73 |
| 3201 | 165 | 6,456 | 9.76 | 126 | 2,391 | 105 | 88 |
| 3203 | 94 | 5,031 | 8.13 | 74 | 842 | 236 | 38 |
| 3204 | 74 | 2,552 | 9.09 | 23 | 201 | 32 | 13 |
| 3211 | 155 | 5,185 | 8.68 | 8 | 102 | 29 | 133 |
| 3212 | 128 | 4,868 | 11.52 | 84 | 3,531 | 293 | 153 |
| 3231 | 97 | 3,599 | 8.64 | 34 | 299 | 99 | 417 |
| 3232 | 174 | 7,692 | 19.07 | 133 | 18,835 | 238 | 100 |
| 3240 | 110 | 3,785 | 17.28 | 69 | 1,532 | 413 | 226 |
| 3250 | 105 | 4,002 | 21.24 | 66 | 1,195 | 79 | 188 |
| 3261 | 93 | 3,314 | 19.13 | 17 | 50 | 26 | 44 |
| 3262 | 129 | 4,260 | 15.12 | 76 | 806 | 653 | 277 |
| 3291 | 159 | 4,116 | 24.81 | 137 | 2,061 | 109 | 687 |
| **India Total** | **4,543** | **174,539** | | **2,942** | **86,003** | **6,206** | **6,601** |
| 3220 | 72 | 2,133 | 16.22 | 96 | 5,394 | 144 | 76 |
| 3271 | 142 | 3,113 | 17.80 | 152 | 2,388 | 196 | 26 |
| 3272 | 161 | 1,846 | 18.04 | 70 | 965 | 22 | 47 |
| 3281 | 310 | 8,346 | 18.63 | 279 | 2,684 | 156 | 207 |
| 3282 | 184 | 3,729 | 10.70 | 202 | 1,652 | 49 | 47 |
| 3292 | 155 | 5,948 | 18.17 | 180 | 5,197 | 143 | 133 |
| **S Asia Total** | **5,567** | **199,654** | | **3,921** | **104,283** | **6,916** | **7,137** |

மூலம்: RI தெற்காசிய அலுவலகம்

Rotary PEOPLE OF ACTION

# காஷ்மீர் எல்லைப் பகுதி கிராம மக்கள் வாழ்வில் ஒளியேற்றும் மும்பை ரோட்டரி

ரஷீதா பகத்

சுமார் 7 மாதங்களுக்கு முன்பு, காஷ்மீரில் இந்தியா-பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் பணியி லிருக்கும் ஒரு ராணுவ உயர் அதிகாரியிடமிருந்து RID 3141ன் DGE அருண் பார்கவாவுக்கு கைபேசி அழைப்பு வந்தது. காஷ்மீரிலிருந்து 2,000 கி.மீ. தொலைவில் உள்ள மும்பையில் இருக்கும் என்னை அழைத்த காரணம் என்ன என்று புரியவில்லை. அவரது பெயர் Col பிரணாய் பவார் என்பதும் ராணுவத்தில் உயர் அதிகாரியாக இருப்பதும் அவருடன் பேசியபோது தெரியவந்தது. மேலும் காஷ்மீரில் குப்வாரா மாவட்டத்தில், எல்லைப் பகுதியிலிருந்து 8 கி.மீ. தொலைவில் உள்ள கிராமத்தில் வசிக்கும் மக்களின் வாழ்க்கை தரத்தை மாற்ற ரோட்டரி உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

அந்த உரையாடலின்போது, காஷ்மீர் மக்கள் அன்னியப்படுத்து தலை எதிர்த்தும், பாகிஸ்தான் மீது அந்த மக்களுக்கு ஈர்ப்பு ஏற்படுவதை தடுக்கவும், அவர்கள் இந்தியர்கள்தான் என்பதை மீண்டும் உறுதிப்படுத்தவும் அவர்களின் வாழ்க்கை நலனில் இந்தியா அக்கறை கொண்டுள்ளது என்பதை வெளிப்படுத்தவும் இந்திய அரசு சில முன்முயற்சி களை மேற்கொண்டுள்ளது. இதில் அவருக்கு சில தொண்டு நிறுவனங்களின் உதவி தேவைப் பட்டது. குறிப்பாக ரோட்டரியின் சேவையை அவர் விரும்பினார். இதற்காக விமானம் மூலம் மும்பை வந்து கிராம மக்களின் இதயத்தையும் மனதையும் வெல்வதற்கு ராணுவம் எடுத்துவரும் முயற்சிகளை விவரிக்கவும் அவர் முன்வந்தார். இந்த முன்முயற்சி, காஷ்மீர் பள்ளத்தாக்கில் உள்ளூர் மக்கள் ராணுவத்தின் மீது கற்களைவீசிய மற்றும் ராணுவத்தின் பதிலடி சம்பவத்துடன் இணைத்து பேசப்பட்டது.

வாக்குறுதி அளித்தபடி Col பவார், விமானம் மூலம் மும்பை வந்து DGE பார்கவா அடையாளம் காட்டிய பல்வேறு சங்கங்களைச் சேர்ந்த 70 மூத்த ரோட்டேரியன்கள் அடங்கிய குழுவினரை சந்தித்தார். காஷ்மீரில் இந்திய அரசு மற்றும் ராணுவம் எடுத்துவரும் முன்முயற்சி களுக்கு ரோட்டரி எப்படி உதவ முடியும் என்பதை Col கலோனல் பவார் விளக்க இருந்தார். நான், பல்வேறு சங்கங்களைச் சேர்ந்த மூத்த ரோட்டேரியன்கள் சிலரையும், தொழில் முறையிலான ரோட்டேரியன்கள் சிலரையும் இதில் பங்கேற்க அழைத்திருந்தேன். பவார் கூறிய விஷயத்தின் சாராம்சம் என்னவெனில், கிராம மக்கள் தீவிரவாதிகள் அல்லது பாகிஸ்தானியர்கள் மீது அனுதாபம் காட்டுவதைத் தவிர்க்க, அவர்களின் அடிப்படைத் தேவையான கல்வி,



மருத்துவ சுகாதார வசதி, மகளிர் மேம்பாடு, அவர்கள் தங்கள் வாழ்வாதாரத்தை பெருக்கிக் கொள்வதற்கான பயிற்சி அளித்து அவர்களின் நம்பிக்கையை பெறுவது தான் ராணுவத்தின் நோக்கம்.

கடந்த 5 அல்லது 6 ஆண்டுகளாக இந்தப் பகுதியில் பணியமர்த்தப்பட்ட ராணுவ வீரர்கள், துப்பாக்கி குண்டு அல்லது பலப்பிரயோகத்தை விட அன்பு, அரவணைப்பு என்ற தாரக மந்திரத்தின் மூலம் கிராம மக்களுடன் நல்லுறவை வளர்ப்பதில் கவனம் செலுத்தி வருகின்றனர். இந்த நோக்கத்துடன் ராணுவம் நல்லெண்ணப் பள்ளி களை நிறுவியுள்ளது. சில ஜவான்கள் குழந்தைகளுக்கான மாத கல்வி கட்டணம் ரூ.150-ஐ தங்கள் கையிலிருந்து கட்டி வருகின்றனர். இந்த கிராம மக்கள் எல்லைப் பகுதியை ஒட்டி வாழ்ந்து வருவதுடன், ராணுவத்துக்கு ஆதரவாக இருந்து வருகிறார்கள். எல்லைக்கு அப்பால் இருந்து வரும் ஊடுருவல் பற்றிய தகவல்களையும் அவ்வப்போது ராணுவத்திடம் தெரிவித்து உஷார்படுத்தி வருகிறார்கள்.

எனினும். ராணுவத்தின் முதன்மையான பணி நாட்டை காப்பதுதான். எனவே ராணுவம், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், கார்ப்பொரேட் நிறுவனங்கள் மற்றும் இதர சிவிலியன் குழுக்களுடன் கூட்டாண்மை வைத்து அவற்றின் உதவியுடன் கிராம மக்களின் மனதை வெல்ல முயன்று வருகிறது என்று பார்கவா குறிப்பிட்டார். ராணுவத்தின் இந்த திட்டத்திற்கு 'தேசிய ஒருங்கிணைப்பு' என்று அழைக்கப் படுகிறது. தனித்திருப்பதாக கருதும் கிராம மக்களிடம் அவர்களும் இந்தியாவைச் சேர்ந்தவர்கள்தான் என்ற உணர்வை ஏற்படுத்துவது தான் இதன் நோக்கம்.

*சில நிமிடங்களில் இரண்டு மோட்டார் சைக்கிள் ஆம்புலன்ஸ் வாங்குவதற்கான நிதி ரூ.8 லட்சம் வசூலானது.*

எல்லைப் பகுதியை ஒட்டியுள்ள கிராமங்களைச் சேர்ந்த மக்களிடம் உறவை வலுப்படுத்தும் நோக்கில் இந்திய ராணுவம் இப்போது ஒவ்வொரு வாரமும் கிராமங்களுக்கு நல்லெண்ணப் பயணம் மேற் கொள்கிறது. கிராமத்தில் ஒவ்வொருவரின் வீடுகளுக்கும் சென்று குடும்பத்தினர் நலன் பற்றி விசாரித்து தேவைப்படுவோருக்கு மருத்துவர் மூலம் சிகிச்சை அளித்து வருகிறோம். மேலும் இங்குள்ள குழந்தைகளுக்காக ராணுவம் சார்பில் நல்லெண்ண பள்ளிகள் கட்டப்பட்டுள்ளன. ஆசிரியர்களுக்கான ஊதியமும் ராணுவத்தினர் சார்பில் வழங்கப்படுகிறது என்று கலோனல் பவார், ரோட்டேரியன்களிடையே விளக்கமாக கூறினார்.

இது பெண்கள் திறன் மேம்பாட்டு மையத்தையும் அமைத்துள்ளது. அதன் மூலம் பெண்களுக்கு கைவினைக் கலைப் பொருள்கள் மற்றும் உணவுப் பொருள்கள் தயாரிப்பு உள்ளிட்ட பயிற்சிகள் அளிக்கப் பட்டு வருகின்றன.



## எதிர்காலத் திட்டங்கள்

*இப்போது அவர்கள் கிராம மக்களுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டதால் RID 3141 சார்பில், ரோட்டேரியன்கள் இந்திய ராணுவத்துடன் சேர்ந்து இன்னும் என்னென்ன திட்டங்களை செயல்படுத்த விரும்புகிறது என்று DGE (RID 3141) அருண் பார்கவாவிடம் நான் கேட்டேன்.*

*தேசிய ஒருங்கிணைப்பில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டுள்ள சிறப்பு ரோட்டரி குழுவின் தேர்ந் தெடுக்கப்பட்ட ஆளுநரான பார்கவா, தமது திட்டங்களை விவரித்தார். ராணுவத்தின் நல்லெண்ண பள்ளியில் எல்லா குழந்தைகளாலும் மாதம் ரூ.150 கட்டணம் செலுத்தி படிக்க இயலவில்லை. எனவே அவர்கள் இலவச கல்வி அளிக்கும் மதராஸாக்களை அணுகுகிறார்கள். எனவே முதல் கட்டமாக நல்லெண்ண பள்ளியில் குழந்தைகள் படிப்பதற்கு வசதியாக, 1,000 மாணவர்களின் மாதாந்திர கட்டணம் ரூ.150ஐ நான்கு வருடங்களுக்கு செலுத்த நாங்கள் முடிவு செய்துள்ளோம். இது அதிக அளவில் குழந்தைகள் இப் பள்ளிகளில் சேரவும், தரமான கல்வி பெறவும் வழிவகுக்கும் என்று நாங்கள் நம்புகிறோம் என்று அவர் பதில் கூறினார்.*



DGE *அருண் பார்கவா (வலது) மற்றும்* Col *ப்ரனாய் பவார், 56 ராஷ்ட்ரிய ரைஃபில்ஸ், மச்சல் கிராமம்.*

**தாய்மார்கள் இறப்பு விகிதம்:** *அடுத்து பிரசவத்துக்கு முன்பும் பின்பும் தாய்மார்கள் இறப்பு விகிதம் அதிகரித்து வருகிறது. இப்பிரச்னைக்கு தீர்வுகாண விரும்புகிறோம். ஒவ்வொரு ஆண்டும் 10 அல்லது 15 கிராமங்கள் அடங்கிய ஒரு செக்டாரில் பிரசவத்தின்போது சராசரியாக 10 முதல் 12 தாய்மார்கள் இறக்க நேரிடுவதாகத் தெரிய வந்துள்ளது. இதற்கு போதிய மருத்துவ வசதி இல்லாமையும், சரியாக பயிற்சி பெறாத மருத்துவச்சிகளும் காரணமாகும். ரோட்டேரியனாகிய நாங்கள் மும்பையிலுள்ள பெரிய தனியார் மருத்துவமனைகளுடன் பேசி, குப்வாரைவைச் சேர்ந்த மருத்துவச் சிகளுக்கு 6 மாதங்கள் முறையான பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்து வருகிறோம். மேலும் சில சிக்கலான நோய்களுக்கு இந்த தனியார் மருத்துவமனைகள் மூலம் டெலிமெடிசின் அதாவது இணையம் மூலமான தொடர்பு மூலம் ஆலோசனை வழங்கவும் ஏற்பாடு செய்து வருகிறோம்.*

**விளையாட்டு அரங்கம்:** *குழந்தைகள் விளையாடுவதற்கு வசதியாக சிறிய விளையாட்டு மைதானம் அமைத்துத் தர வேண்டும் என்று ராணுவத்தினர் கேட்டுக் கொண்டுள்ளனர். இந்த வசதியை அவர்களுக்கு செய்து கொடுத்தால் குழந்தைகள் தங்களுக்கு நேரம் கிடைக்கும்போது விளையாடி மகிழ முடியும். மேலும் அவர்கள் வேறு தவறான வழிகளில் செல்லாமல் இருக்க வழிவகுக்கும். இந்த கோரிக்கையை நிறைவேற்றுவது குறித்து ரோட்டேரியன்கள் பரிசீலித்து வருகின்றனர் என்றார் பார்கவா.*

2023–24ம் ஆண்டின் ஆளுநராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள DGE பார்கவா தலைமையிலான ரோட்டரி சிறப்புக்குழுவினர், ராணுவத்தின் அழைப்பால் மிகவும் உற்சாகம் அடைந்து எல்லைப்பகுதியில் உள்ள கிராமங்களில் வசிக்கும் மக்களின் வாழ்க்கை மேம்பாட்டுக்கு உதவ முன்வந்துள்ளனர். இக்குழுவில் மும்பை பார்லேஷ்வர் ரோட்டரி சங்கத்தின் முன்னாள் தலைவர் ஆனந்த் ராம்னானி உள்ளிட்ட பலர் இடம் பெற்றுள்ளனர்.

எல்லைப் பகுதியில் உள்ள கிராம மக்களின் வாழ்க்கை மேம்பாட்டுக்கு உதவ ராணுவம், தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடன் சேர்ந்து செயல்பட முன்வந்துள்ளது. கல்வி, மருத்துவம் மற்றும் சுகாதாரம், மகளிர் மேம்பாடு போன்ற துறைகளில் ஏற்கெனவே ரோட்டரி கவனம் செலுத்தி வருவதால் நாங்களும் ஆர்வத்துடன் செயல்பட விரும்பினோம் என்று அவர் தெரிவித்தார்.

கடந்த ஏப்ரல் 30ம் தேதி பார்கவா, ராம்னானி உள்ளிட்ட 16 பேர் அடங்கிய ரோட்டரி குழுவினர் குப்வாராவிலிருந்து 45 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள தொலைதூர கிராமங்களைச் சென்று பார்வையிடுவதற்காக காஷ்மீருக்கு புறப்பட்டோம். அங்குள்ள கிராமங்களில் உள்ள மக்களின் தேவை என்ன?



மச்சல் கிராம மக்களுக்காக ரோட்டரியின் இரண்டு மோட்டார் சைக்கிள் ஆம்புலன்ஸுகள் வழங்கப்படுகின்றன.

அவர்களுக்கு எந்தவிதமான ஆதரவு தேவை என்பதைப் புரிந்து கொள்வதற்காக நாங்கள் அங்கு சென்று இரண்டு நாள் தங்கினோம். நாங்கள் ஸ்ரீநகரில் இறங்கி அங்கிருந்து காரில் 5 மணி நேரம் மலைப்பாங்கான பகுதிகளைக் கடந்து மச்சல் கிராமத்தை அடைந்தோம். அந்த இடத்திலிருந்து சுமார் 10 கி.மீ. தொலைவில்தான் எல்லைப் பகுதி உள்ளது என்கிறார் ராம்னானி.

மும்பையிலிருந்து 2,300 கி.மீ. தொலைவு பயணம் செய்து கிராம மக்களை சந்தித்தபோது அவர்களின் நிலை எங்களை உருகவைத்து விட்டது. ரமலான் நோன்பு முடிந்து ஈத் பண்டிகையை கிராம மக்கள் கொண்டாடும் நிலையில் அங்கு சென்றதால் ரோட்டேரியன்களாகிய நாங்களும் அவர்களின் இஃப்தார் விருந்தில் கலந்து கொண்டோம். அதுமட்டுமல்ல, ஈத் பண்டிகையை ஒட்டி கிராம மக்களுக்காக ராணுவ உயர் அதிகாரி ஏற்பாடு செய்திருந்த விருந்திலும் நாங்கள் பங்கேற்றோம். மச்சல் கிராமத்தின் தலைவர் மற்றும் மௌல்விக்கு நாங்கள் எடுத்துச் சென்ற பரிசுப் பொருள்களைக் கொடுத்தோம். இரண்டாயிரம் கி.மீ. தொலைவுக்கு அப்பால் மும்பையிலிருந்து வந்த ரோட்டேரியன்கள் வழங்கிய பரிசுப் பொருள்களை பெற்றுக்கொண்ட அவர்கள் மிகவும் நெகிழ்ந்து போனார்கள். நாமும் இந்தியாவைச் சேர்ந்தவர்கள் என்ற உணர்வு அவர்களிடம் ஏற்பட்டதை உணர முடிந்தது. அவர்களுடன் சேர்ந்து நாங்கள் ஜன கண மன என தேசிய கீதம் பாடினோம். கிராம மக்களில் சிலர் முதல் முறையாக இந்திய தேசிய கீதத்தை பாடியதை பின்னர் அறிந்து கொண்டோம்!

அவர்கள் தொழுகை (நமாஸ்) நடத்தியபோது எங்களையும் அதில் கலந்துகொள்ள அழைத்தார்கள். ரோட்டேரியன்களும் முதன் முறையாக நமாஸில் பங்கேற்றனர். வாழ்க்கையிலேயே அன்றுதான் நான்




*சீமா பார்கவா இராணுவத்தினருக்கு இனிப்பு வழங்குகிறார்.*

முதன்முறையாக நமாஸில் கலந்து கொண்டேன் என்று மகிழ்ச்சியுடன் கூறினார் பார்கவா. அவருக்கு இருபுறமும் பிரார்த்தனை செய்த கிராமத் தலைவர் மற்றும் மௌல்வி இருவரும் அவரை வழிநடத்தினர் என்று சொல்லத் தேவையில்லை.

கிராம மக்களுக்கு ரோட்டேரியன்கள் என்ன செய்ய வேண்டும் என்று உயர் ராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் அபிஹிஜித் பெந்தார்கரிடம் (YSM, ஜெனரல் ஆபீஸர் கமாண்ட், வாஜிர் கோட்டம்) பார்கவா கேட்டபோது, இந்த பகுதி மலைப்பாங்கானதாகவும் குறுகிய சாலைகள் கொண்டதாகவும் இருப்பதால் ஆம்புலன்ஸ் வாகனங்கள் நோயாளிகளின் வீடுகளுக்கு வந்து செல்வது கடினமாக உள்ளது. அவசர மருத்துவ சிகிச்சை பெற அவர்களுக்கு உடனடித் தேவை மோட்டார் சைக்கிள் ஆம்புலன்ஸ். அந்த வாகனத்தின் பின்பகுதியில் ஸ்டிரெச்சர் இணைக்கப்பட்டிருக்கும். அதில் நோயாளியை எடுத்துச் செல்ல முடியும் என்று தெரிவித்தனர். உடனடியாக ரோட்டரியின் செல்வாக்கையும், அதிகாரத்தையும் செயல்படுத்தத் தொடங்கினோம். மும்பையில் உள்ள ரோட்டரி சங்கங்கள் சிலவற்றுடன் தொடர்பு கொண்டு பேசினோம். அடுத்த சில நிமிடங்களில் இரண்டு மோட்டார் சைக்கிள் ஆம்புலன்ஸ் வாங்குவதற்கான நிதி ரூ.8 லட்சம் வசூலானது. இதையடுத்து அந்த

*எல்லைப் பகுதியை ஒட்டியுள்ள கிராமங்களைச் சேர்ந்த மக்களிடம் உறவை வலுப்படுத்தும் நோக்கில் இந்திய ராணுவம் இப்போது ஒவ்வொரு வாரமும் கிராமங்களுக்கு நல்லெண்ணப் பயணம் மேற்கொள்கிறது.*



ராணுவ அதிகாரி, மும்பையைச் சேர்ந்த 16 ரோட்டேரியன்கள் முன்னிலையில் மச்சல் கிராம நிர்வாகி மற்றும் மௌல்வியிடம் இரண்டு மோட்டார் சைக்கிள் ஆம்புலன்ஸுகளை வழங்கினார். பின்னர் குப்வாரா மாவட்டம், மச்சால் செக்டாருக்கு ராணுவமும் ரோட்டரியும் இணைந்து இரண்டு மோட்டார் சைக்கிள் ஆம்புலன் வழங்கிய செய்தி வாய்ஸ் ஆஃப் கலாரூஸ் முகநூல் பக்கத்தில் வெளியிடப்பட்டது. குப்வாராவிலிருந்து 45 கி.மீ. தொலைவில் மச்சல் கிராமம் அமைந்துள்ளது. மலைசூழ்ந்த பகுதியில் வசிக்கும் கிராம மக்கள் உடனடியாக மருத்துவ வசதி பெறமுடியாத சூழல் பற்றிய தகவல்களும் முகநூலில் வெளியிடப்பட்டிருந்தன. அங்குள்ள சாலைகள் மிக குறுகலாக அமைந்திருந்தன. மோசமான வானிலையில் நான்கு சக்கர வாகனங்கள்கூட அந்த இடத்தை அணுக முடியாது. இப்போது இரண்டு மோட்டார் சைக்கிள் ஆம்புலன்ஸ் வழங்கப்பட்டுள்ளதால் நோயாளிகள் அதன் மூலம் அருகிலுள்ள மருத்துவ மனைக்குச் சென்று சிகிச்சை பெறமுடியும். ரோட்டேரியன்கள், ராணுவத்தினர் ஏற்பாடு செய்திருந்த இடங்களில் மூன்று நாட்கள் தங்கி உள்ளூர் மக்களின் தேவைகளை கேட்டறிந்ததாக ராம்னானி தெரிவித்தார். ராணுவத்தின் சார்பில் அமைக்கப்பட்ட மகளிர் மேம்பாட்டு மையத்துக்கும் எங்களை அந்த அதிகாரி அழைத்துச் சென்றார். அங்கு உள்ளூர் பெண்கள் சால்வை, கையுறைகள், தரை விரிப்புகள் தயாரிப்பதில் ஈடுபட்டிருந்தனர். அவர்கள் தயாரிக்கும் பொருள்களை நல்ல விலைக்கு சந்தைப் படுத்து வதில் ரோட்டேரியன்கள் உதவி தேவை என கேட்டுக் கொண்டார். அதற்கும் ஆவன செய்வதாக நாங்கள் உறுதியளிதோம் என்று அவர் மேலும் கூறினார்.

அவர் சார்ந்திருக்கும் பரலேஷ்வர் ரோட்டரி சங்கம் 2014ம் ஆண்டு முதல் இந்திய ராணுவத்திற்கான திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. 2014ம் ஆண்டில் 36



Brig *வினோத் நேகி ரோட்டரியினருடன்.*






DGE *பார்கவா மற்றும் சீமா பார்கவா,* RID 3141 *ரோட்டரியினருடன் ஒரு இராணுவ நல்லெண்ண பள்ளி முன்.*

மராத்தா ரெஜிமெண்ட் (படைப் பிரிவு) பிரிவின் அறிமுகம் கிடைத்தது. அது முதல் நாங்கள் ரூ.3 லட்சம் அவர்களுக்காக நிதி திரட்டியுள்ளோம். இந்த தொகை ராணுவத்தினர் நல நிதியில் சேர்க்கப்பட்டு முன்னாள் ராணுவத்தினர் குழந்தைகள் படிப்புச் செலவு, வீடு பழுதுபார்ப்புச் செலவு மற்றும் திருமணச் செலவுக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

மும்பை ரோட்டேரியன்களுடன் ராணுவத்தினர் நல்ல தொடர்பு ஏற்படுத்திக் கொண்டுள்ளனர். கடந்த ஜூலை 30ம் தேதி 56 ராஷ்ட்ரீய ரைஃபிள் படைப்பிரிவைச் சேர்ந்தவர்கள் மலைப் பகுதிகளில் கால்நடை வளர்ப்புத் தொழிலில் ஈடுபட்டுள்ள பகர்வால்ஸ் என்னும் பழங்குடியின மக்களுக்கு வழங்க 300 சூரிய சக்தி விளக்குகள் வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர். அதையும் நிறை வேற்றினோம். எல்லை தாண்டி ஊடுருவும் பயங்கரவாதிகள் குறித்து தகவல் தருபவர்கள் இவர்கள்தான் என்று அவர் தெரிவித்தார்.

சூரியசக்தி விளக்குகளுக்குத் தேவையான தொகை ரூ.2 லட்சம் தான். அதற்கான நிதி திரட்டும் பொறுப்பையும், அவற்றை மச்சல்

*மச்சல் கிராமத்தின் தலைவர் மற்றும் மௌல்விக்கு நாங்கள் எடுத்துச் சென்ற பரிசுப் பொருள்களைக் கொடுத்தோம். இரண்டாயிரம் கி.மீ. தொலைவுக்கு அப்பால் மும்பையிலிருந்து வந்த ரோட்டேரியன்கள் வழங்கிய பரிசுப் பொருள்களை பெற்றுக்கொண்ட அவர்கள் மிகவும் நெகிழ்ந்து போனார்கள்.*






*சூரிய சக்தி விளக்குகள் எல்லைப்பகுதி பழங்குடியினருக்கு வழங்கப்படுகின்றது.*



*சீமா பார்கவா பள்ளி ஆசிரியர்களுடன்.*

கிராமத்துக்கு கொண்டு செல்லு வதற்கான தொகையையும் மும்பை பர்லேஷ்வர் ரோட்டரி சங்கம் ஏற்றுக் கொண்டது. அப்பகுதியைச் சேர்ந்த ராணுவ கமாண்டர் மூலம் சுதந்திர தினத்தன்று அவை விநியோகிக்கப்பட்டன. ஆகஸ்ட் 11 ஆம் தேதி ரக்ஷா பந்தன் என்பதால் 300 ஜவான்களுக்கு அணிவிக்கும் வகையில் ராக்கி கயிறுகள் தயாரிக்கப்பட்டு அவை ஜம்முதாவி எக்ஸ்பிரஸ் மூலம் அனுப்பி வைக்கப் பட்டன. அதிர்ஷ்டவசமாக அதே ரெஜிமென்டைச் சேர்ந்த ஜவான் ஒருவர், அந்த ரயிலில் சென்றதால் ராக்கி கயறு மற்றும் சூரியசக்தி விளக்குகளை கொண்டு சேர்க்கும் பொறுப்பை அவர் ஏற்றுக்கொண்டார் என்றார் ராம்னானி. ரோட்டரி மாவட்டம் 3232-க்கு உட்பட சென்னை ரோட்டரி சங்கமும் கூடுதலாக 200 சூரிய சக்தி விளக்குகளை அனுப்பிவைத்தது என்றும் அவர் குறிப்பிட்டார்.■

# TRFஐ இந்தியா கொண்டாடுகிறது

ஜெய்ஸ்ரீ



இந்த மாவட்டத்தில் AKS உறுப்பினர்கள் பலரும், பெரு நன்கொடையாளர் களும் இருப்பதை பார்க்கும் போது மகிழ்ச்சியாக இருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் ரோட்டேரியன்கள் தனிப்பட்ட முறையில் அறக் கட்டளைக்கு நிதியளிப்பதை நான் ஊக்குவிப்பேன். நீங்கள் அளிக்கும் நன்கொடைகளை TRF சேவைத் திட்டங்களுக்குப் பயன்படுத்துவதன் மூலம் உலக மக்களின் வாழ்வில் ஒளியேற்றி வருகிறோம் என்று தெரிவித்தார் அறக்கட்டளைத் தலைவர் இயான் ரிஸ்லி. சென்னையில் RID 3232 சார்பில் நடைபெற்ற TRF விருந்து நிகழ்ச்சியில் பேசுகையில் அவர் இதைக் கூறினார். ரோட்டரி இயக்குநர் A S வெங்கடேஷ், TRF அறங்காவலர் பரத் பாண்ட்யா, PRID C பாஸ்கர் மற்றும் மாவட்ட ஆளுநர் N நந்தகுமார் ஆகியோரும் நிகழ்ச்சியில் பங்கேற்றனர். PDG ஜூலியட், ரிஸ்லியின் இந்திய சுற்றுப் பயணத்தின் போது உடன் இருந்தார்.

உயில்வழி சொத்தின் அடிப் படையிலான உறுப்பினர்கள் எண்ணிக்கையை அதிகரிப்பது மற்றும் போலியோ நிதிக்கான பங்களிப்பை பெருக்குவது ஆகியவை தமது பட்டியலில் குறிப்பிடத்தக்க அம்சமாகும் என்று குறிப்பிட்ட அவர், நீங்கள் உயில் எழுதும்போது அறக்கட்டளைக்கும் ஒரு இடம் கொடுங்கள் என்றார் அவர்.

இந்தியா போலியோ இல்லாத நாடாக உருவாகியதற்காக ரோட்டரி இந்தியாவின் பங்கு பணிகளை அவர் பாராட்டினார். கடந்த ரோட்டரி ஆண்டில் நலத் திட்டங்களைச் செயல்படுத்த TRF 434 மில்லியன் டாலர்களைச் செலவிட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். நன்கொடை யாளர்கள் தாராளமாக நிதியுதவி அளித்ததால் தான் இது சாத்தியமானது என்றும் கூறினார்.

முன்னதாக ரிஸ்லி, டயாலிஸிஸ் மையத்தை தொடங்கி வைத்ததுடன் இரண்டு ஆண்டுகளுக்கு முன் PDG S பழனியப்பனால் தொடங்கி வைக்கப்பட்ட ஆரஞ்சு திட்டத்தின் ஒரு பகுதியான கண் சிகிச்சை மையத்தையும் பார்வையிட்டார். கடந்த ஆண்டு IPDG J ஸ்ரீதர் முன் முயற்சியால் சென்னையில் உள்ள 16 மருத்துவமனைகளில் 135 டயாலிஸிஸ் மையங்கள்



*TRF அறங்காவலர் தலைவர் ரிஸ்லி மற்றும் ஜூலியட், அறங்காவலர் பாண்ட்யா, RID 3012 DG லலித் கன்னா, அமிதா மற்றும் அனில் மொஹிந்த்ரூ குடும்பத்தினருடன்.*



TRF *அறங்காவலர் தலைவர் இயன் ரிஸ்லி மற்றும்* PDG *ஜூலியட், (வலமிருந்து) அறங்காவலர் பரத் பாண்ட்யா,* PDG *பராக் ஷெத்,* RIDE T N *சுப்ரமணியன்,* EMGA PDG *தீபக் குப்தா மற்றும் ரீனா குப்தாவுடன்.*



ஜெய்ஸ்ரீ

**இடமிருந்து:** *அறங்காவலர் பாண்ட்யா, அறங்காவலர் தலைவர் ரிஸ்லி மற்றும்* RI *இயக்குனர்* A S *வெங்கடேஷ்.*

ஏற்படுத்தப்பட்டன. TRF மானிய உதவி மூலம் உலகில் மாற்றத்தை உருவாக்க முடியும் என்பதற்கு இவை சிறந்த உதாரணங்கள் என்று அறங்காவலர் தலைவர் கூறிய பாராட்டினார்.

மாவட்டத்தில் 12 AKS உறுப்பினர்களில் 10 பேர் கௌரவிக்கப் பட்டனர். AKS உறுப்பினரான PDG J B காம்தாருக்கு RIன் சிறந்த ரோட்டேரியன் விருதையும் வழங்கினார். DRFC B தாட்சாயிணி, மஹாவீர் போத்ரா மற்றும் தேவேந்தர் தேவ் ஆகிய மூன்று ரோட்டேரியன்களும் இந்த ஆண்டு தங்களின் தாராள பங்களிப்பின் மூலம் உயரடுக்கு சமுதாயத்தில் சேர உறுதி எடுத்துக் கொண்டனர். ஐந்து புதிய அறக்கட்டளை நன்கொடைகள், 2013–14ம் ஆண்டின் 25 தலைவர்கள் ஒரு தொகுப்பாக தலா 1,000 டாலர் மற்றும் நான்கு நேரடி நன்கொடைகள் 10 பெரு நன்கொடையாளர்கள் ஒருங்கிணைக்கப்படும். இரண்டு ரோட்டேரியன்கள் தனிப்பட்ட முறையிலான தலா ரூ.1 லட்சம் பங்களிப்பு செய்ததற்காக போலியோ ஒழிப்புக்கான ''பின்'' அணிவிக்கப் பட்டது.

ரோட்டேரியன் ரவிசங்கர்






ஜெய்ஸ்ரீ

*அறங்காவலர் தலைவர் ரிஸ்லி, PDG காம்தாருக்கு விருது வழங்குகிறார். உடன் (இடமிருந்து) PRID C பாஸ்கர், DRFC B தாட்சாயிணி, சுமேதா மற்றும் DG நந்தகுமார், PDG ஜூலியட், மார்லின் காம்தார், வினிதா மற்றும் RID வெங்கடேஷ், மற்றும் அறங்காவலர் பாண்ட்யா.*

டகோஜு 2019ம் ஆண்டில் TRFக்கு 14.7 மில்லியன் டாலர் பங்களிப்புச் செய்ததாகவும், 2006–07ம் ஆண்டில் தாம் மாவட்ட ஆளுநராக இருந்த போது ஹர்ஷத் மேத்தா, TRFக்கு 1 மில்லியன் டாலர் பங்களிப்புச் செய்த முதல் இந்தியர் என்றும் நினைவு கூர்ந்தார் அறங்காவலர் பாண்ட்யா. பெரு நன்கொடையாளர் மற்றும் AKS உறுப்பினர்களின் தாராள மனப்பான்மைக்கு அவர் நன்றி தெரிவித்தார்.

போலியோ நிதிக்காக ஒரு புதுமையான நிதி திரட்டலுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. பிரபல ஓவியர் A V இளங்கோவின் இரண்டு ஓவியங்கள் ரூ.13 லட்சத்துக்கு ஏலம் விடப்பட்டது. மேலும் 2011ம் ஆண்டு உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டியின் போது M S தோனி அணிந்திருந்த தலைக்கவசம் (ஹெல்மெட்), முத்தையா முரளீதரன், ஹர்பஜன்சிங் மற்றும் அனில் கும்ப்ளே கையெழுத்திட்ட கிரிக்கெட் பந்து ரூ.11 லட்சத்துக்கு ஏலம் போனது.

DRFC தாட்சாயணி கூறுகையில், IPDG ஸ்ரீதர் தலைமையில், கடந்த ஆண்டு 2.52 மில்லியன் டாலர் பங்களிப்புச் செய்து, TRF



*அறங்காவலர் பாண்ட்யா, Rtn ரவிசங்கர் டாகோஜு மற்றும் PDG தீபக் குப்தா தில்லி TRF விருந்தில்.*



PRIPs *கல்யாண் பானர்ஜி மற்றும் ராஜேந்திர சாபூ.*




பங்களிப்பில் ரோட்டரி உலகில் மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ள தாகவும் தெரிவித்தார். RRFC ஜான் டேனியல், EMGA மாதவ் சந்திரன் மற்றும் EPNC சின்னதுரை அப்துல்லா ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

**தில்லியில் TRF விருந்து**

அறங்காவலர் தலைவர் ரிஸ்லியின் வருகையையொட்டி தில்லியில் TRF விருந்துக்கு ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. இதில் ரிஸ்லி, 35 AKS தம்பதிகள், 135 பெரு நன்கொடை யாளர்கள் உள்பட 325 முக்கியப் பிரமுகர்கள் கலந்து கொண்டனர். அறங்காவலர் பரத் பாண்ட்யா நிகழ்ச்சியின் அமைப்பாளராகவும், PDG தீபக் குப்தா நிகழ்ச்சியின் தலைவராகவும் இருந்தனர். RIDE T N சுப்பிரமணியன் மற்றும் பல்வேறு மாவட்டங்களின் DGகள் நிகழ்ச்சியில் பங்கேற்றனர். RID 3012க்கு உட்பட்ட காஜியாபாத் ஸஃபையர் ரோட்டரி சங்கம் மூலம் 1 மில்லியன் டாலருக்கு (ரூ.8 கோடி). அறக்கொடை உருவாக்க டகோஜு உறுதி எடுத்துக் கொண்டார். இதையடுத்து அவர் அந்த சங்கத்தின் கௌரவ உறுப்பினராக சேர்த்துக் கொள்ளப் பட்டார். மேலும் சுற்றுச்சூழல் திட்டங் களுக்கு $250,000 டாலர் பங்களிப்புச் செய்ய உறுதியளித்தார்.

AKS தம்பதிகளான அமிதா (RC தில்லி சிட்டி முன்னாள் தலைவர்) மற்றும் அனில் மொஹிந்துரு குடும்பத்தைச் சேர்ந்த சஞ்சீவ் மொஹிந்துரு (RC தில்லி அசோகா) அவரது மகன் சித்தார்த் (RC தில்லி ரீகல்) இணைந்து AKS உறுப்பினர்களாக உறுதியேற்றனர். இதற்கு முன்னோட்டமாக TRFக்கு $150,000 காசோலையை வழங்கினர். தங்கள் நண்பர்களால் ஈர்க்கப்பட்ட பூனம் மற்றும் ரமேஷ் ஜுனேஜா (Mankind Pharma) ஆகியோரும் AKS உறுப்பினர்களாக விருப்பம் தெரிவித்தனர்.

RC தில்லி ராஜ்தானி உறுப்பினர் ராஜேஷ் குப்தா, 1 மில்லியன் டாலர் பங்களிப்பு தொகை செலுத்த உறுதி யேற்று அறக்கட்டளை வட்டாரத்தில் சேர கையெழுத்திட்டார். சைக் கோடிராபிக்ஸ் இந்தியாவைச் சேர்ந்த அமிதா மற்றும் நவ்தீப் சாவ்லா மற்றும் RID 3110 DG பவன் அகர்வால் 5,00,000 டாலர் பங்களிப்புச் செய்ய உறுதியளித்து Chair வட்டத்தில் சேர்ந்தனர். இந்த நிகழ்வில் 12 புதிய பெரு நன்கொடையாளர்கள் உருவாயினர். முகேஷ் சாஹு (RC ஃபீனிக்ஸ் சாகர், RID 3040) போன்ற AKS உறுப்பினர்கள் புதிய அறக்கொடையை உருவாக்கினர். AKS உறுப்பினர் உதய் பிலானி, மொய்னாபாத் லேக் டிஸ்க்டிரிட் ரோட்டரி சங்கத்தை (RID 3150) ஊக்குவித்ததற்காகவும் உலகின் முதல் பிராமிஸ் கிளப்பாக அதன் உறுப்பினர்கள் TRFன் தொகுப்பு நிதிக்கு தலா 1,000 டாலர்கள் பங்களிக்க முன் வந்ததற்காகவும் பாராட்டப்பட்டனர்.

J K குழுமத்தின் விதி மற்றும் நீதிபதி சிங்கானியா, நக்மா மற்றும் Dr S பரூக் (ஹிமாலயா வெல்நஸ்), சங்கீதா மற்றும் ஹரீஷ் அகர்வால் (G R இன்ஃப்ரா அண்டு சன்சிட்டி ஷீட்ஸ்), அனிதா மற்றும் சுமித் கோயல் (RDS புராஜெக்ட்ஸ்) ஆகிய பிற நன்கொடையாளர்களும் உயரடுக்கு சமூகத்தில் இணைந்து கொண்டனர். ■



**இடமிருந்து:** RIDE *அனிருதா ராய்சவுத்ரி, அவர் மனைவி ஷிப்ரா, அறங்காவலர் பாண்ட்யா, ரீனா மற்றும்* PDG *தீபக் குப்தா, அறங்காவலர் தலைவர் ரிஸ்லி மற்றும் ஜூலியட்.*

Rotary PEOPLE OF ACTION

# ரோட்டரிக்கு நிதி சேர்த்த பேடாவும், பம்பரமும்!

ரஷீதா பகத்




2018ல் ராஜ்கோட் மிட்டவுன் ரோட்டரி சங்கத்தின் உறுப்பினர்கள் சிலர், குஜராத் நகரில் தாங்கள் அமைத்துள்ள நீரிழிவு நோய்த் தடுப்பு மற்றும் நிர்வாக மேலாண்மை சேவைகளை விரிவுபடுத்த விரும்பியபோது எனக்கு வந்த முதல் யோசனை, ரோட்டரிக்கு வெளியே, ரோட்டரி அல்லாதவர்களை அணுகி, நிரந்தர நீரிழிவு சிகிச்சை வசதியை ஏற்படுத்த வேண்டும் என்பதுதான் என்று நினைவுகூர்ந்தார் முன்னாள் மாவட்ட உறுப்பினரும் ரோட்டரி மாவட்டம் 3060ச் சேர்ந்தவருமான தீபக் அகர்வால்.

தற்போது இரண்டு ஆண்டு களுக்கு Zone 4க்கு RPIC ஆக இருக்கும் அகர்வால் கூறுகையில், உலகில் இந்தியா நீரிழிவு நோய் மையமாக உள்ளது. அதிலும் குஜராத், இந்தியாவின் நீரிழிவு நோய் தலைநகரமாக உள்ளது என்பதை உணர்ந்து கொண்ட சங்க உறுப்பினர்கள் ராஜ்கோட்டில் நீரிழிவு நோய் விழிப்புணர்வு மற்றும் நீரிழிவு நோய்க்கான மேலாண்மை சேவைகளை விரிவுபடுத்த விரும்பினார்கள். சமூகத்தில் நீரிழிவு நோய் மற்றும் அதனால் ஏற்படும் பிரச்னைகளுக்கு சேவை செய்வதற்கான அவசியம் ஏற்பட்டுள்ளதை நாங்கள் உணர்ந்தோம். பிரச்னை என்னவென்றால் ஒருவர் நீரிழிவு நோய்க்கான அறிகுறி தென்பட்டால்தான் மருத்துவர் களிடம் செல்கிறார். அவர் முதலில் இரத்தப் பரிசோதனையை பரிந்துரைப்பார். பின்னர் உறுப்புகள் ஏதேனும் பாதிக்கப்பட்டிருந்தால் வேறு சில பரிசோதனைகளுக்குப் பரிந்துரைப்பார். குறிப்பிட்ட பிரச்னைக்கு மூல காரணம் சர்க்கரை நோய்தான் என்று கண்டறியப்பட்ட நேரத்தில் சில நாள்கள் வீணாகி விடும். எனவே நீரிழிவு நோய் கண்டறிதல் மற்றும் மேலாண்மை தொடர்பான அனைத்து நோயறிதல் பரிசோதனைகளையும் ஒரே இடத்தில்




ஏன் செய்துகொள்ளக்கூடாது என்ற எண்ணத்தில் உருவானதுதான் நீரிழிவு நோய் தொடர்பான சேவை மையம். இங்கு குறுகிய காலத்தில் அதாவது ஒரு மணி நேரத்தில் அனைத்து பரிசோதனைகளையும் செய்து கொண்டு முடிவுகளைத் தெரிந்து கொள்ள முடியும் என்றார்.

பல ஆண்டுகளுக்கு முன் தொடர் முயற்சியால் ஒரு அறக்கட்டளை நன்கொடையாக வழங்கிய, குடிசைப் பகுதியில் இரண்டு அறைகள் கொண்ட இடத்தில் ஒரு சிறிய நீரிழிவு நோய் சிகிச்சை மையம் ஏற்படுத்தப் பட்டு செயல்பட்டு வந்தது. ஆனால், அகர்வாலும் அவரது நண்பர்களும் அனைத்து வசதிகளும், சேவைகளும் உள்ள நீரிழிவு நோய் சிகிச்சை மையத்தை ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தனர். ஆனால், இதுபோன்ற மையத்தை ஏற்படுத்த அதிக பணம் தேவைப்படும். ரோட்டேரியன்கள் பணக்காரர்களாக இருந்தாலும் ரோட்டரி சங்கங்கள் ஏழையாகவே இருந்துவந்தன. எனவே அதிக நிதியை திரட்டுவது எப்படி என்ற குழப்பத்தில் இருந்தோம் என்று கூறி சிரிக்கிறார் அகர்வால்.

2018ம் ஆண்டில் இதற்கு நிதி திரட்ட, ரோட்டரிக்கு வெளியே என்ன வழி இருக்கிறது என்று தீவிரமாக சிந்தித்தோம். அப்போது அமெரிக்காவின் நியூஜெர்சியில் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் “சலோ இந்தியா” நிகழ்ச்சியில் பங்கேற்க தீர்மானித்தோம். முன்பு இந்த நிகழ்ச்சி குஜராத்திகளுக்காகவே நடைபெற்றது. அதாவது “சலோ குஜராத்தி” என்று அழைக்கப்பட்டு வந்தது. ஆனால், நியூஜெர்ஸி நிகழ்ச்சியில் ஸ்டால் அமைக்க 3,000 டாலர்கள் கட்டணம் தர வேண்டும் என்றார்கள். நாங்கள் இலவசமாக ஸ்டால் வேண்டும் என்று கேட்டதற்கு முடியாது என கூறிவிட்டனர். எனவே நாங்கள் சங்கத்தின் நிர்வாகக் குழுவிடம் எங்களின் யோசனையை தெரிவித்தோம். அதுவும் நிராகரிக்கப் பட்டது. எங்களால் கொடுக்க முடியாது என கையை விரித்து விட்டனர்.

ஆனால், அகர்வால் விரக்தி அடைவதற்கு பதிலாக ஊக்க மடைந்தார். ஒரு யோசனை உடனடியாக நிராகரிக்கப்பட்டால் அது அசலான மற்றும் புத்திசாலித்தனமான திட்டமாக இருக்க வேண்டும். ஏனெனில் அதை யாரும் இதற்குமுன் நினைத்துக்கூட பார்த்திருக்க மாட்டார்கள். அதனால்தான் நிராகரிக்கிறார்கள் என நான் நம்புகிறேன் என்கிறார் அகர்வால்.

தீபக் அகர்வால் தவிர, திவ்யேஷ் அகேரா, கல்பராஜ் மேத்தா, அதுல் கனாத்ரா மற்றும் நிலேஷ் சங்கானி ஆகியோர் ஒன்று சேர்ந்து சலோ இந்தியாவுக்குச் சென்று ஸ்டால் அமைப்பதற்கான ஆதரவாளர்களை கண்டுபிடித்து தேவையான நிதியை திரட்ட முடிவு செய்தனர். நாங்கள் எங்கள் சொந்த பணத்தில் டிக்கெட் வாங்கி, சொந்த செலவில் ஹோட்டலில் தங்கி தேவையான 3,000 டாலர் நிதியை திரட்ட முடிவு செய்தோம். ஆனால், நியூஜெர்ஸியில் ஸ்டால் அமைத்தால் பேனர்கள் வைப்பதற்கான செலவை ரோட்டரி சங்கம்தான் கொடுக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தோம். அதற்கு சங்கம் ஒப்புக்கொண்டதுடன் அதற்காக ரூ.3,800ஐ அனுமதித்தது. இந்த திட்டத்தில் எங்கள் சங்கத்திற்கு பங்கு இருக்க வேண்டும் என்று விரும்பினோம். மேலும் எங்கள் சங்கத்தின் 145 உறுப்பினர்களின் பிரார்த்தனையும் தேவைப்பட்டது.

145 உறுப்பினர்களைக் கொண்ட சங்கம் எப்படி உருவானது என்பதன் பின்னணியை இங்கு குறிப்பிடுவது அவசியமானது. 1965ம் ஆண்டில் தொடங்கப்பட்ட, பழமைவாய்ந்த ராஜ்கோட் ரோட்டரி சங்கத்தில், 1990ம் ஆண்டு, முதன் முதலாகச் சேர்ந்தார் அகர்வால். ஆனால், சில காரணங்களால் இரண்டு ஆண்டுகளில் அகர்வால் உள்பட 16 பேர் சங்கம் மற்றும் ரோட்டரியிலிருந்து விலக முடிவு செய்தனர்.

ஆனால், ரோட்டரியிலிருந்து அவர்கள் விலகிவிட்டாலும், ரோட்டரியுடன் தொடர்பில் இருந்ததுடன், உறுப்பினர்களை அடிக்கடி சந்தித்து வந்தனர். மேலும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் அனைவரும் குடும்பத்தினருடன் சந்திக்க முடிவு செய்தனர்.

தொடக்கத்தில் இந்த சந்திப்பு நன்றாகவே இருந்தது. ஆனால், சில ஆண்டுகளில் வருகை எண்ணிக்கை குறைந்தது. இதையடுத்து அனை வரையும் மீண்டும் ஒன்றிணைக்க ஒரு அமைப்பு தேவை என்று உணர்ந்தோம். 1990களின் நடுப் பகுதியில் ராஜ்கோட்டில் ஏற்கெனவே இரண்டு சங்கங்கள் செயல்பட்டு வந்தன. சில காரணங்களால் புதிய சங்கத்திற்கு ஸ்பான்சர் கிடைக்க வில்லை. எனவே ராஜ்கோட் மிட் டவுன் ரோட்டரி சங்கம், RIன் நேரடி உதவியால் 25 உறுப்பினர்களுடன் புதிய சங்கமாக உருவெடுத்தது என்று அவர் விளக்கினார். அந்த சங்கம்

துடிப்புடன் செயல்பட்டு, அன்று முதல் இன்றுவரை செழித்து வளர்ந்து வருகிறது. இதே மாவட்டத்தைச் சேர்ந்த PRIP கல்யாண் பானர்ஜி உதவியால் ராஜ்கோட்டில் சர்வதேச பொம்மைகள் அருங்காட்சியகம் ஏற்படுத்தப்பட்டது உள்பட பல்வேறு நல்ல திட்டங்களை செயல்படுத்தி வந்துள்ளது.

மீண்டும் சலோ இந்தியா நிகழ்ச்சிக்கு வருவோம். நீரிழிவு நோய்த் தடுப்பு மற்றும் மேலாண்மை மையத்தை ஏற்படுத்த நிதி திரட்டும் ஐவர் குழுவில் ஒருவரான சக்னானி, அந்த நேரத்தில் அமெரிக்காவில் இருந்ததால், ஒரு மருந்து கம்பெனியின் ஆதரவில் ஸ்டால் கட்டணமான 3,000 டாலர்களைப் பெற்றுத்தந்தார்.

நியூஜெர்ஸி நிகழ்வுக்கு தயாரான நிலையில் நாங்கள் எங்களுக்குள் விவாதித்தோம். அப்போது. நாங்கள் ஸ்டால் அமைத்தால், பார்வையாளர்கள் எப்படி எங்கள் ஸ்டாலுக்கு வருவார்கள்? எத்தனைப் பேர் ரோட்டரி பற்றி கேள்விப் பட்டிருப்பார்கள்? எத்தனை பேருக்கு ரோட்டரி மீது ஆர்வம் இருக்கும்? எனவே எங்கள் ஸ்டாலுக்கு மக்களை ஈர்க்க ஒரு புதுவித யோசனை எங்களுக்குத் தேவைப்பட்டது என்று நினைவுகூர்ந்தார் அகர்வால்.

அப்போது முன்னாள் ஆளுநரின் மூளையில் ஒரு புதிய யோசனை உதித்தது. நாங்கள் எங்களுடன் ராஜ்கோட்டில் பிரபலமான இனிப்பான பேடாவை எடுத்துச் செல்ல முடிவு செய்தோம். மிகவும் சுவையான பேடா (பால்கோவா) கண்காட்சிக்கு வரும் பார்வையாளர்கள் நிச்சயம் விரும்பி சாப்பிடுவார்கள் என்பதில் நாங்கள் உறுதியாக இருந்தோம். எனவே 80 கிலோ பேடாவுக்கு ஆர்டர் செய்தோம். மூன்று மாதங்கள் வரை வைத்திருந்து சாப்பிடும் வகையில் ஒவ்வொரு பேடாவையும் திரவ நைட்ரஜன் நிரம்பிய பாக்கெட்டில் பேக் செய்து அமெரிக்காவுக்கு கப்பலில் அனுப்பச் செய்தோம்.

ஆனால், இனிப்பு பேடாக்களுடன், துணையாக குஜராத்தில் பிரபல மான மரத்தால் செய்யப்பட்ட பம்பரங்களும் வந்து சேர்ந்தன. ராஜ்கோட்டிலிருந்து 100 கி.மீ. தொலைவில் தோராஜி என்னுமிடத்தில் பம்பரங்கள் செய்வதில் பிரபலான நபரை கண்டுபிடித்து 1,000 பம்பரங்களை வாங்கினோம். அவை ஒவ்வொன்றின் விலை ரூ.62. மேலும் நேர்த்தியாக பேக் செய்யப்பட்டிருந்தன. அவை ஒரு பெட்டியில் வைக்கப்பட்டு நியூஜெர்ஸிக்கு வந்துசேர்ந்தன. இந்த நிலையில் ரோட்டேரியன்கள் நிதி திரட்ட தயாரானார்கள்.

2018ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31ம் தேதி பிற்பகலில் கண்காட்சி தொடங்கியது. ரோட்டேரி யன்கள் வருகையாளர்களுக்காக காத்திருந்தனர். கண்காட்சியில் ஸ்டாலுக்கு வருகை தரும் பார்வையாளர்களுக்கு இலவசமாக பேடாவும், நன்கொடை அளிப்பவர்களுக்கு பம்பரமும் வழங்க முடிவு செய்தோம். ஆனால், முதல் சில மணி நேரங்களில் எங்களின் ஸ்டாலுக்கு யாரும் வரவில்லை. ஒருவேளை அவர்களுக்கு ரோட்டரி பற்றி அதிகம் தெரிந்திருக்காது. அதனால், அவர்கள் அதிக அக்கறை காட்டவில்லை. இது தொடர்பாக ராஜ்கோட் ரோட்டேரியன்கள் நியூஜெர்ஸியில் உள்ள ரோட்டரி சங்கங்களையோ அல்லது அமெரிக்க நிர்வாகத்தையோ தொடர்பு கொள்ளவில்லை. எங்களது நோக்கமே சமூக சேவை திட்டங்களுக்கு ரோட்டரி



*RC ராஜ்கோட் மிட்டவுனின் நீரிழிவு நோய் தடுப்பு மையத்தில் பல் மருத்துவ மையம்.*



*நியூ ஜெர்ஸியில் சலோ இந்தியா ஸ்டாலில் பார்வையாளர்கள்.*

அல்லாதவர்களிடமிருந்து நிதி திரட்டுவதுதான்!

இந்த கண்காட்சி இன்னும் 48 மணி நேரம் மட்டுமே நீடிக்கும் என்ற நிலையில் குழுவினர் செயல்படத் தொடங்கினர். தங்கள் ஸ்டால்களைக் கடந்து சென்றவர்களுக்கு இலவசமாக பேடாக்களை வழங்கினர். அவற்றை பெற்றுக்கொண்ட பார்வையாளர்கள் மிகவும் பணிவுடன் ஸ்டாலின் சுவர்களை அலங்கரித்த காட்சிப் பொருள்களை பார்த்து ரோட்டரி பற்றியும், அவர்கள் நிதிகள் தேடுவதற்கான காரணங்கள் பற்றியும் கேள்வி எழுப்பத் தொடங்கினர்.

ஆனால், ரோட்டரியைவிட ரோட்டரி செய்த வேலைகள் பற்றிய காட்சிப் பொருள்களைவிட பார்வையாளர்களைக் கவர்ந்தது வண்ண வண்ண பம்பரங்கள்தான்! இவை என்ன என்று கேட்டனர். நாங்கள் பம்பரத்தை பற்றி விளக்கியதும் அது விலைக்குக் கிடைக்குமா என்று கேட்டனர். நாங்கள் உடனே மன்னிக்கவும் இது விற்பனைக்கு அல்ல எங்களது நோக்கத்திற்காக நீங்கள் நன்கொடை வழங்கினால் மட்டுமே நல்லெண்ண நடவடிக்கையாக இவை பரிசாக வழங்கப்படும் என்றோம்.

நாங்கள் சொன்ன தகவல் மற்றவர்களுக்கும் பரவியது. அடுத்த நாள் நூற்றுக்கும் மேலானவர்கள் எங்களது ஸ்டாலின் முன் திரண்டனர். உணவு இடைவேளையின்போது ஒரு நீண்ட வரிசையில் மக்கள் காத்திருந்தனர். ரோட்டரி என்று ஒன்று இருப்பதை மக்கள் உணர்ந்தனர். இந்தியாவில் குறிப்பாக குஜராத்தில் நீரிழிவு நோய் மிகப் பெரிய பிரச்னை. அங்கு ஒரு நீரிழிவு நோய் சிகிச்சை மையம் தேவை என்பதையும் புரிந்து கொண்டனர். உலகின் நீரிழிவு நோயின் கேந்திரம் இந்தியா என்பதையும், அதில் குஜராத், நீரிழிவு நோயின் தலைநகரமாக இருப்பதையும் அவர்களுக்கு விளக்கினோம். நீரிழிவு நோய்த் தடுப்பு சிகிச்சை மற்றும் விழிப்புணர்வு மையத்தை அமைக்க உதவி தேவை என்று கூறினோம். குறிப்பாக ஏழைகளுக்கு உதவ இந்த மையம் தேவை என்பதையும் சுட்டிக்காட்டினோம். இரண்டரை நாள் நிகழ்ச்சியில் வெளிநாடு வாழ் இந்தியர்கள் மற்றும் அமெரிக்கர்களிடமிருந்து நாங்கள் ரூ.1.25 கோடியை நன்கொடையாகப் பெற்றோம் என்று சொன்னால் நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள்! என்று பெருமையுடன் கூறினார் அகர்வால்.

திடீரென்று ஒரு பெண், வீட்டில் சமைத்த உணவு மற்றும் பழச்சாறுகளை உதவியாளர் மூலம் எடுத்து வந்து ஸ்டாலில் இருந்த ரோட்டேரியன்களை நெகிழவைத்தனர். அந்த பெண், குஜராத்திலிருந்து எனது சகோதரர்கள் வந்திருக்கிறார்கள், அவர்கள் பசியோடு இருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டேன். இனி எங்கள் வீட்டிலிருந்து உணவு உங்களைத் தேடி வரும் என்றார். பின்னர் அப்பெண்மணி, மருத்துவராக இருக்கும் தனது கணவருடன் பேசி னார். இருவரும் சேர்ந்து ராஜ்கோட்டில் நீரிழிவு நோய்த் தடுப்பு சிகிச்சை மையம் அமைக்க ரூ.7.5 லட்சம் நன்கொடையாக வழங்கினார்கள்.

“சலோ இந்தியா” கண்காட்சி மூலம் கிடைத்த வசூல், நாங்கள் ரோட்டரிக்கு வெளியே சென்று எங்களது திட்டங்களுக்கு நிதி திரட்ட முடியும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியது. நான் மண்டலம் நான்கிற்கு RIPC ஆனபோது, ஏன் ஒவ்வொரு சனிக்கிழமையும் ராஜ்கோட்டில் உள்ள ஹனுமன் கோவில் உள்ளிட்ட பிரபலமான இடங்களுக்குச் சென்று ரோட்டரி பற்றியும், ரோட்டரி செய்து வரும் பணிகள், சேவைகள் பற்றியும் மக்களிடம் எடுத்துச் சொல்லக்கூடாது என்று நினைத்தேன்.

சங்கத்துக்கு சொந்தமான அறக்கட்டளை இருந்ததால்




*நியூ ஜெர்ஸி சலோ இந்தியா ஸ்டாலில் Rtns அதுல் கனட்ரா, கல்ப்ராஜ் மேத்தா, PDG தீபக் அகர்வால் (இடமிருந்து 6வது), திவ்யேஷ் அகேரா மற்றும் நீலேஷ் சங்னானி.*

(ராஜ்கோட் மிட்டவுன் சாரிடபிள் டிரஸ்ட், தலைவர் மற்றும் நிர்வாக அறங்காவலர் அகர்வால்) எந்தவித பிரச்னையும் இல்லாம் நியூஜெர்ஸியில் வசூல் செய்யப்பட்ட ரூ.1.28 கோடியை இங்கு கொண்டுவர முடிந்தது. ராஜ்கோட் மாநகராட்சி ஏற்கெனவே சிகிச்சை மையம் அமைக்க எங்களுக்கு நிலம் வழங்கியிருந்தது. மேலும் திரட்டப் பட்ட நிதியைக் கொண்டு 14,500 சதுர அடி பரப்பளவு உள்ள ஐந்து தளங்கள் கொண்ட மருத்துவமனையைக் கட்டினோம். நீரிழிவு நோயுடன் தொடர்புடைய பல் மற்றும் கண் சிகிச்சை உள்ளிட்ட பல்வேறு வகையான நோய்களைக் கண்டறிந்து சிகிச்சை அளிப்பதற்குத் தேவையான கருவிகள் மற்றும் சிகிச்சை அளிப்பதற்கான பணியாளர்களும் நியமிக்கப்பட்டனர். என்று அகர்வால் மேலும் கூறினார். இந்த மையம் 2021ம் ஆண்டு ஏப்ரல் மாதம் குஜராத் முதல்வரால் திறந்துவைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. தினமும் 50 நோயாளிகள் நீரிழிவுநோய் கண்டறிதல் மற்றும் சிகிச்சைக்காக வருகின்றனர். அதாவது மாதம் உள்ளூர் மக்கள் 1,500 பேர் இதன் மூலம் பலனடைந்து வருகின்றனர். மருந்து, மாத்திரைகளும் சலுகை விலையில் விற்கப்படுகிறது. ஏழைகள் இலவசமாக இவற்றை பெற்றுக்கொள்ளலாம்.

எங்களது நிதி திரட்டும் முயற்சி தொடர்ந்தது. இதுவரை நீரிழிவு நோய் சிகிச்சை மையத்தின் திட்டத்துக்காக சங்கம் ரூ.6 கோடி நிதி திரட்டியுள்ளது. நீரிழிவு நோய் திட்டத்துக்காக சங்கம் இரண்டு சர்வதேச மானிய உதவியை பெற்றுள்ளது. முதல் முறை அமெரிக்கா (RID 6000) மற்றும் இங்கிலாந்து (RID 1200); இரண்டாவது முறை RID 5495 மற்றும் 5170 ஆகிய இரண்டு அமெரிக்க சங்கங்களின் உதவியுடன் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. இந்த ஆண்டு மார்ச் மாதம், PAR DRUGS என்னும் மருந்து தயாரிப்பு நிறுவனம் கார்ப்பொரேட் நிறுவனங்களின் சமூகப் பொறுப்புணர்வு திட்டத்தின் கீழ் ரூ.11 லட்சம் நிதியுதவி வழங்கியது.

எதிர்காலத்தை பொறுத்தவரை, ரூ.10 கோடி தொகுப்பு நிதியாக வைத்திருக்க விரும்புகிறோம். அப்போது தான் இந்த மையம் தொகுப்பு நிதியிலிருந்து கிடைக்கும் வட்டி வருமானத்தின் மூலம் திறம்பட செயல்பட முடியும். இது வரை ரூ.4 கோடி கிடைத்துள்ளது என்றார் அகர்வால். அடுத்த ஆண்டு சலோ இந்தியா நிகழ்ச்சியில் பங்கேற்கவும் காத்திருக்கிறோம். இந்திய அரசு, வெளிநாடு வாழ் இந்தியர்களுக்காக வழக்கமாக ஆமதாபாதில் நடத்தி வரும் “அதிதி திவஸ்” நிகழ்ச்சியில் பங்கேற்கவும் மற்றும் வெளிநாடுகளில் நடக்கும் கண்காட்சியில் பங்கேற்கவும் ஆர்வமாக இருக்கிறோம் என்றார் அகர்வால். தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கான வெளிநாட்டு பங்களிப்புகளுக்கான (FCRA) தரவுகளை தொடர்ந்து கண்காணித்து வந்தால், இந்தியாவில் உள்ள தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு அமெரிக்காவில் இருந்து அல்ல ஜெர்மனியிலிருந்து தான் அதிக நன்கொடை வந்துள்ளது தெரியவரும். ஜெர்மனிதான். குறிப்பாக அங்கு நடைபெறும் புத்தகக் கண்காட்சிதான் நாங்கள் கவனம் செலுத்தும் அடுத்த இலக்கு என்றார் அகர்வால்.

அங்கும் ஏதாவது ஒரு தொடர்பை கண்டுபிடிப்பதில் உறுதியாக இருக்கிறார் அகர்வால். எல்லாவற்றுக்கும் மேலாக ரோட்டரி முக்கியமான இரண்டு வார்த்தைகள் பற்றியது. அவை தொடர்பு மற்றும் நன்கொடை. உண்மைதானே! ■

# RIDE சுப்பிரமணியனுக்கு பாராட்டு விழா




**இடமிருந்து:** RIDE *அனிருதா ராய்சௌத்ரி,* RID *மகேஷ் கோட்பாகி,* PRID *கமல் சங்வி,* RIDE T N *சுப்ரமணியன்,* PRIP *கல்யாண் பானர்ஜி,* PRIDs *அசோக் மகாஜன், மனோஜ் தேசாய்,* C *பாஸ்கர், மற்றும்* TRF *அறங்காவலர் பரத் பாண்ட்யா.*



TRF *அறங்காவலர் பாண்ட்யா மற்றும் அவர் மனைவி மாதவி, வித்யா மற்றும்* RIDE *சுப்ரமணியன் ஆகியோரை வாழ்த்துகின்றனர். உடன் (இடமிருந்து) சோனல் மற்றும்* PRID *கமல் சங்வி மற்றும்* PRID *மகாஜன் ஆகியோரும் உள்ளனர்.*



RIDE *சுப்ரமணியன்* RID 3141 DG *சந்திப் அகர்வலா (இடது) மற்றும் அவர் மனைவி மாலினி, மற்றும்* RC *மும்பை சீ கோஸ்ட் தலைவர் ராஜீவ் டிக்கா ஆகியோருடன்.*

RI மாவட்டங்கள் 3141 மற்றும் 3142 RI இயக்குனராக தேர்ந்தெடுக்கப்பட்ட T N சுப்ரமணியனுக்கு மும்பையில் ஒரு பாராட்டு விழாவை நடத்தியது. நிகழ்ச்சியில் RI இயக்குநர் மகேஷ் கோட்பாகி, அறங்காவலர் பரத் பாண்ட்யா, முன்னாள் RI தலைவர் கல்யாண் பானர்ஜி, முன்னாள் RI இயக்குநர்கள் அசோக் மகாஜன், மனோஜ் தேசாய், C பாஸ்கர், கமல் சங்வி மற்றும் RIDE அனிருதா ராய்சௌத்ரி ஆகியோர் கலந்து கொண்டனர். PRIPக்கள் ராஜேந்திர சாபூ மற்றும் K R ரவீந்திரன் ஆகியோர் காணொளி மூலம் RIDE சுப்பிரமணியனை வாழ்த்தினர். நிகழ்ச்சியில் 39 ரோட்டரி மாவட்டங்களைச் சேர்ந்த தலைவர்கள் கலந்து கொண்டு அவருக்கு வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.

ராஜு என்று அன்புடன் அழைக்கப்படும் RIDE சுப்பிரமணியன் பார்வையாளர்களுக்கு நன்றி தெரிவித்தார். மேலும் அவரது குடும்பம் மற்றும் அன்புக்குரியவர்களின் ஆதரவு தான் வாழ்க்கையில் அனைத்து நல்ல விஷயங்களையும் அடைய உதவியது என்று கூறினார். ரோட்டரி இந்தியா பிரகாசிக்க சிறந்த முயற்சிகளை அளிப்பேன் என்றும் எந்த ஒரு மெத்தனத்தையும் ஏற்க மாட்டேன் என்றும் கூறினார். ■



Rotary PEOPLE OF ACTION

# முகப்பேர் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியை மாற்றி வரும் ரோட்டரி

ஜெய்ஸ்ரீ

அது ஒரு தனித்துவமான சந்தர்ப்பம். மூன்று அமைப்புகள் தங்களது வெள்ளி விழாவைக் கொண்டாடின. இதில் அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது சென்னை முகப்பேரில் உள்ள அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி. இந்த பள்ளி கடந்த மாதம் 25-வது ஆண்டு விழாவை 9 வகுப்பறைகள் கொண்ட புதிய பிரிவைத் தொடங்கி கொண்டாடியது. இதற்கு RID 3232க்கு உட்பட்ட RC சென்னை மிட் சிட்டி மற்றும் V S & B கன்டெய்னர்ஸ் இரண்டும் உதவி செய்தன. இதன் சிறப்பு அம்சம் என்னவெனில் இந்த இரண்டுமே தங்களது வெள்ளிவிழா ஆண்டைக் கொண்டாடியதுதான். பள்ளியின் புதிய கட்டடத்துக்கு V S & B சில்வர் ஜூப்ளி பிளாக் என பெயரிடப்பட்டது. நிறுவனத்தின் தலைவரும் சங்கத்தின் உறுப்பினருமான பிஜோய் பவுலாஸ் இதற்கான செலவு தொகை ரூ.1.5 கோடியை ஏற்றுக்கொண்டார்.

இந்த புதிய கட்டடத்தை தமிழக அறநிலையத்துறை அமைச்சர் P K சேகர்பாபு மற்றும் மாவட்ட கல்வி அதிகாரி செல்வகணேஷ் முன்னிலையில் மாநிலங்களவை உறுப்பினர் P வில்சன் திறந்து வைத்தார். 4.5 ஏக்கர் பரப்பளவுள்ள பள்ளி வளாகத்தில் ரோட்டரி சங்கத்தின் வெள்ளிவிழா ஆண்டின் திட்டமாக இந்த புதிய கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது.

RC சென்னை மிட் சிட்டி, இந்த பள்ளியுடன் 2008 முதல் தொடர்பில் உள்ளது. இப்பள்ளியின் வளர்ச்சிக்காக ரூ.5 கோடியை முதலீடு செய்துள்ளது. 14 ஆண்டுகளுக்கு முன்னர் இந்த பள்ளியை ரோட்டரி சங்கம் தத்து எடுத்தது முதல் அறிவியல் ஆய்வகம், தண்ணீர் சுத்திகரிப்பு நிலையம், நூலகம் அமைத்துத் தரப்பட்டது. அப்போது பள்ளி மிகவும் மோசமான நிலையில் இருந்ததுடன், குழந்தைகளின் கல்வியும் மோசமாக பாதிக்கப் பட்டிருந்தது என்று நினை கூர்ந்தார் சங்கத்தின் தலைவர் அனுப் T N 2011ம் ஆண்டில் சங்கத்தின் தலைவராக நந்திதா பன்சால் இருந்தபோது காற்றோட்ட மான வகுப்பறைகள், விளையாட்டு மைதானம், கூடைப் பந்து மைதானம் ஆகிய வசதிகள் செய்து தரப்பட்டன. இந்த புதிய வசதி மூலம் மூன்று மாணவர்கள் விளையாட்டு வீராங்கனைகளுக்கான ஒதுக்கீட்டில் ராணி மேரி கல்லூரியில் சேர்ந்தனர். இப்போது அதிக அளவில் மாணவிகள் விளையாட்டில் ஆர்வம் காட்டி வருகின்றனர். ரூ.2.75 கோடியில் சில அடிப்படை வசதிகள்



செய்து கொடுக்கப்பட்டதை அடுத்து இப்பள்ளி 2018ம் ஆண்டு மேனிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இப்போது நாங்கள் பள்ளியைச் சீரமைப்பதில் மூன்றாவது கட்டத்தில் இருக்கிறோம். விரைவில் 12 புதிய வகுப்பறைகள் திறக்கப்பட உள்ளன என்றார் அனுப். 19 கழிப்பறைகள் கொண்ட ஒரு டாய்லெட் பிளாக், சானிடரி பேடுகள் வழங்கும் இயந்திரம் மற்றும் கழிவுகளை சாம்பலாக்கும் எரியூட்டி (இன்சினரேட்டர்) அமைப்பதும் இத்திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

இந்த மாற்றத்தின் மூலம் 2018ல் 320 ஆக இருந்த மாணவர்கள் எண்ணிக்கை இப்போது 944ஆக அதிகரித்துள்ளது. இதை சென்னையில் ஒரு மாதிரிப் பள்ளியாக உருவாக்க வேண்டும் என்பதில் உறுதியுடன் இருக்கிறோம். எங்களது நோக்கம் கட்டடங்கள் கட்டிக் கொடுப்பது மட்டுமல்ல, படிக்கும் மாணவிகளின் வளர்ச்சிக்கும் ஆதரவாக இருக்கவேண்டும் என்பதுதான் என்று அவர் மேலும் கூறினார். பொது மேம்பாடு, ஆளுமைத்திறன் மற்றும் தனிப்பாதுகாப்பு தொடர்பாக அவ்வப்போது மாணவர்களுக்கு கருத்தரங்கம், பயிலரங்கங்கள் சங்கத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்படுகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார்.

மாணவர்கள் ஆங்கிலத்தில் பேசுவதற்கும் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. மாணவிகள் சரளமாகவும், சரியான உச்சரிப்புடனும் பேசுகின்றனர். அனைத்து அரசு பள்ளிகளிலிருந்தும் இந்த பள்ளி வேறுபட்டு இருக்கிறது. அதற்காக நாங்கள் ரோட்டரி சங்கத்துக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும்.

சமீபத்தில் 12ம் வகுப்பில் சேர்க்கப்பட்ட 7 மாணவிகளில் ஒருவர் NEET தேர்வை எழுதி வெற்றிபெற்று ஈரோட்டில் உள்ள மருத்துவக் கல்லூரியில் சேர்ந்துள்ளார் என்றார் அனுப். இப்பள்ளியில் படிக்கும் மாணவர்களில் பெரும்பாலானவர்கள் சென்னை புறநகர் பகுதியிலிருந்து வந்து படிப்பவர்கள். கோவிட் தொற்றின் போது தனியார் துறையில் பணிபுரிந்த ஊழியர்கள் பலர் வேலை இழந்தனர். அதனால், தங்கள் குழந்தைகளை அவர்களால் தனியார் பள்ளிகளில் தொடர்ந்து படிக்கவைக்க முடியவில்லை. அப்படிப்பட்ட பெற்றோர்களுக்கு இப்பள்ளி வரப் பிரசாதமாக இருந்தது என்றும் அவர் கூறினார்.

எங்களது சங்கம், இந்தப் பள்ளியுடன் ஆண்டுதோறும் தொடர்பில் உள்ளது. திட்டங்களுக்கு நாங்கள் தொடர்ந்து ஆதரவு அளித்து வருகிறோம். சங்கத்தின் தலைவர்



மேலே: *புதிய வகுப்பறையில் மாணவிகள்.* கீழே: *RC சென்னை மிட் சிட்டி தலைவர் அனுப் T N, V S & B குழு தலைவர் பிஜாய் பௌலோஸ் மற்றும் சங்கத்தினர் பள்ளி ஆசிரியர்களுடன்.*



மாறினாலும், பள்ளிக்கான திட்டம் தொடர்கிறது என்றார் சங்கத்தின் சென்ற ஆண்டின் தலைவர் K P ராஜீவ்.

இதுபோன்ற திட்டங்களை பணம் தான் இயக்குகிறது என்று சொல்வது எளிது. ஆனால், உண்மையில் அப்படியல்ல.

இத்திட்டத்தைச் செயல்படுத்த தங்களது நேரங்களைச் செலவிட்ட ரோட்டேரியன்களின் அர்ப்பணிப்பு உணர்வுதான் உண்மையில் முக்கிய காரணமாகும். இது சங்கத்துக்கு பெருமைத் தேடித் தருவதாகும் என்றார் திட்டத்தின் பெரு நன்கொடையாளர் பவுலோஸ். எங்கள் நிறுவனமான V S & B அதிக நன்கொடை வழங்கிய மிகப்பெரிய திட்டம் இதுதான். ரோட்டரியைவிட CSR நிதியுதவித் திட்டத்தை செயல்படுத்தற்கு சிறந்தது வேறு எதுவும் இல்லை. ஏனெனில் ரோட்டரிக்கு வழங்கப்படும் ஒவ்வொரு பைசாவையும் கட்டு மானத்திலோ அல்லது சேவையிலோ காணமுடியும் என்றார்.

எங்களது ரோட்டரி சங்கம் ஒரு 18 மாத காலம் பள்ளியை விட்டு ஒதுங்கியிருந்தது. ஏனெனில் அப்போது இருந்த பள்ளி முதல்வர் எங்களை விரும்பவில்லை. ஆனால், ரோட்டரி இல்லாமல் எதுவும் செய்யமுடியாது என்று தெரிந்தவுடன் எங்களை திரும்ப அழைத்துக் கொண்டார் என்று புன்னகையுடன் தெரிவித்தார் அனுப்.

அரசின் திட்டத்தின் மூலமாக விரைவில் 200 மாணவர்களுக்கு மிதிவண்டிகள் (சைக்கிள்) வழங்கப்பட உள்ளன. அரசாங்கள் ஆதரவு அளிக்க முடியாத இடத்தில் மட்டுமே நாங்கள் களம் இறங்குகிறோம் என்று அவர் கூறினார்.

18 வயதுக்கு மேற்பட்ட மாணவிகளுக்கு வர்ணம் பூசுவதற்கு பயிற்சி அளித்து அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்து வருகிறோம். இதற்காக நிப்பான் பெயின்ட்ஸ் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளோம்.

கோவிட் தொற்றுக் காலத்தில், புறநகர் பகுதியான தாம்பரத்தில், ஹிந்து மிஷன் மருத்துவமனையில் கோவிட் பிளாக் கட்டுவதற்காக இரண்டே வாரங்களில் சங்கம் ரூ.1.07 கோடி நிதி திரட்டியது.

சங்கத்தில் தற்போது 43 உறுப்பினர்கள் உள்ளனர். புதிய உறுப்பினர்கள் சேர்ப் பதில் ஆர்வமாக உள்ளோம். ஆனால், எங்கள் எண்ணங் களை புரிந்து கொண்டு செயல் படுபவர்களாகவும், சங்கத்தில் நீண்ட காலம் சேவை புரியும் வகையில் புதிய உறுப்பினர்கள் இருக்க வேண்டும் என்பதால் அந்தப் பணி மெதுவாக நடந்து வருகிறது என்றார் சங்கத்தின் தலைவர்.■




ADVT.

# Know Your Rotary

**(7th edition)**

## By Rtn. N.Bhaskaran Pillai




***Know Your Rotary*** is the largest and most comprehensive book on Rotary in the world. The first edition of this book was published in 1998 and its sixth edition last year which was sold out in record time. In view of inquiries from various parts of India another edition is being published in December 2022, updated and with added material.

About the book: *Know Your Rotary* covers almost all aspects of Rotary. Here are a few excerpts from the reviews from hundreds of Rotary stalwarts who were all praise for the book:

***PDG Ranjan Dhingra: D. 3011 :*** "Know Your Rotary is nothing less than the Rotary encyclopedia."

***PDG Narendra Kumar Mishra IAS D. 3262:*** "Know Your *Rotary* is an excellent book"

***PRID Yash Pal Das:*** 'Know Your Rotary covers every conceivable topic of Rotary'

***PDG Dr. Sudhir Rashingkar D. 3131*** "This is a wonderful book ..."

***PDG Dr. George Sundararaj D.3203 & RLI Director:*** "Got addicted to Rotary through *Know Your Rotary*"

***PDG Ravi N. Deshpande D. 3170***:"It's a wonder book."

> ***"Know Your Rotary* is a beautifully produced compendium of knowledge, history and encouragement. .... This is incredible."**
>
> **Past RI President**
> **Raja Saboo**
>
> ***"....The Bible on Rotary, updated and completely current"***
>
> ***Past RI President***
> ***('Ravi') Ravindran***

***PDG Ravi Vadlamani: D 3150*** '..yes the book is an encyclopaedia on Rotary.'

***PDG Suresh: D 3150:*** "...an excellent and comprehensive book on all aspects of Rotary."

***PP Mohan Kumar:*** "I consider this book as a Holy Scripture of Rotary."

***PDG A.V.Pathy, D. 3201***: "Magnificent work. The content of the book is truly amazing, that gives one a perfect insight of our organization."

***PDG Pathmanathan, D3220*** "I have never seen or read a high-class informative publication of this nature on Rotary. I learnt a lot from your book. It is a fountain of Rotary informamtion and a useful encyclopedia for every Rotarian."

***PDG Udaya M Pradhan, D3240*** It (*Know Your Rotary*) is simply fabulous.

## Pre-publication offer

The 7th edition of *Know Your Rotary* will be released in December, 2022. Here is an attractive pre-publication offer:

The cover price of this 480 pages book will be Rs.425/- (shipping charges Rs.40/- per copy extra). But all orders received up to 30 November 2022 will attract a discount of 40 per cent on the cover price. i.e. for one copy up to 30 November, pay only Rs.295/- including shipping charges. (Rs.1,475/-for 5 copies; Rs.2950/- for 10 copies.)

Payment can be made by Google Pay to 9847157170, (Bhaskaran Pillai N) **OR** by NEFT to

N.Bhaskaran Pillai,
A/c No. 055551000000256,
YES Bank, Cochin-682019,
IFS Code: YESB0000555

For further information and any clarification please write to the author:

Rtn. N.Bhaskaran Pillai
(RC of Kalamassery, D3201)
10 E, Tiknar Olina,
Cochin - 682 024
email: bhaskaranpillain@gmail.com
Phone: 9847157170

***Know Your Rotary* is a volunteer effort: Net sale proceeds will be contributed to TRF**

# கோவா-வில் ஹோம்ஸ்டே வழங்கும் கிராமப்புறப் பெண்கள்

கிரண் ஜெஹரா



ஸ்ரீ பிராமணி சுய தொழில் குழுவின் உறுப்பினர்கள் கோவாவில் ஒரு ஹோம்ஸ்டேயில்.

சமீபத்தில், 'ஹோம் ஸ்டே', அதாவது, சுற்றுலாப் பயணிகள் வழக்கமான இல்லங்களில் தங்கும் வசதியை வழங்கித் தங்கள் வருவாயைப் பெருக்கிக்கொள்ளும் வாய்ப்பைப்பற்றிக் கோவா-வைச் சேர்ந்த சுய உதவிக் குழுக்களைச் (SHG) சேர்ந்த கிராமப்புறப் பெண்களுக்குக் கற்றுத்தருவதற்கு ஒரு நாள் கருத்தரங்கு ஒன்றை RC பனாஜி ரிவெய்ரா, RID 3170, நடத்தியது. இந்தச் சங்கத்தின் தொழில் சார்ந்த பிரிவுத் தலைவர் ரியான் கோஸ்டா பேசுகையில், சுற்றுலாத் துறையை மேம்படுத்தும் முயற்சியாகக் கோவா மாநில அரசு இப்போது கிராமப்புறச் சுற்றுலாவை ஊக்குவிக்கிறது என்றார். "இதன்மூலம் சுற்றுலாப் பயணிகளுக்குத் தனித்துவமான பண்பாட்டு அனுபவம் கிடைக்கும், உள்ளூர் மக்கள் கொஞ்சம் கூடுதல் பணத்தைச் சம்பாதிக்கவும் இது உதவும். கோவா விடுமுறைப் பயணம் என்பது இப்போது மாறியுள்ளது. சுற்றுலாப் பயணிகள் இப்போது உள்ளூர் வாழ்க்கையை அனுபவிக்கவும் கடல் உணவை ரசித்து உண்ணவும் தூய்மையான, அமைதியான கடற்கரையில் ஓய்வெடுக்கவும் விரும்புகிறார்கள்" என்கிறார் இவர். இந்தப் புதிய சூழலில் ஹோம்ஸ்டேக்கள் விரும்பப்படுகின்றன. ஏனெனில், இவற்றில் செலவு குறைவு, பயண அனுபவமும் மேம்படும்.

இந்தச் சங்கம் WICCI கிராமப்புறச் சுற்றுலா அவை மற்றும் கோவா மாநிலக் கிராமப்புற வாழ்வாதாரப் பணி (GSRLM) உடன் இணைந்து, கோவா முழுவதும் உள்ள 25 SHGக்களுடைய பிரதிநிதிகளுக்குச் சுற்றுச்சூழலுக்கு இதமான ஹோம்ஸ்டே கருத்தரங்கை நடத்தியது. WICCI கிராமப்புறச் சுற்றுலா அவையின் மாநிலத் தலைவர் மினி ரிபெய்ரோ பேசுகையில், "தங்கள் வீடுகளில் விருந்தினர்களைத் தங்கவைப்பதற்குப் பெண்கள் ஆர்வத்துடன் இருந்தாலும், அவர்கள் நிறையக் கற்கவேண்டும். ஏனெனில், வெறுமனே தங்குவதற்கு ஓர் அறை வழங்கினால் போதாது, சுற்றுலாப் பயணிகள் அதனுடன் இணைந்த சேவைகளையும் விரும்புகிறார்கள்" என்றார்.

இந்தக் கருத்தரங்கில் ஹோம்ஸ்டே தொழிலுக்கான ஆவணங்கள், உரிமம் பெறுதல், இதில் உள்ள சவால்கள், வாடிக்கையாளர் சேவை, டிஜிட்டல் சந்தைப்படுத்தல், ஹோம்ஸ்டே தொடங்க உதவும் அரசுத் திட்டங்கள், கடன்கள், அடிப்படை அலங்கரிப்பு யோசனைகளைப்பற்றிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன. "ஒரு குறிப்பிட்ட கிராமத்தில் ஓரிரு பெண்கள் ஹோம்ஸ்டே வைத்திருந்தால், மற்ற பெண்கள் அந்தக் கிராமத்துடைய பிரம்பு அல்லது பிற கைவினைப்பொருட்களைக் காட்சிப்படுத்தலாம். நன்கு சமைக்கிறவர்கள் ஓர் உணவு அனுபவத்தை வழங்கலாம். இது ஒட்டு மொத்தக் கிராமத்துக்கும் உதவும். ஒருவருக்கு ஒருவர் உதவுவது, சேர்ந்து பணியாற்றுவதன் மூலம் வாழ்வாதாரத்துக்கான ஒரு வழியை அவர்கள் பெறலாம்."

வடக்குக் கோவா-வில் உள்ள டல்டெ கிராமத்தில் ஹோம்ஸ்டே நடத்தும் மனிஷா காவ்ன்கர் இந்தக் கருத்தரங்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தது என்றார். டிஜிட்டல் சந்தைப்படுத்தல் நிகழ்வு "மிகவும் ஆர்வமூட்டியது.

என் சந்தைப்படுத்தல் திட்டத்தை மேம்படுத்துவதற்கு நான் குறிப்புகள் எடுத்துள்ளேன். என் விருந்தினர்கள் அனைவரும் என் ஹோம்ஸ்டேயைப் பாராட்டுகிறார்கள், நான் வழங்கும் உணவு அவர்களுக்கு மிகவும் பிடித்துள்ளது. இப்போது நான் ஓர் இன்ஸ்டாகிராம் பக்கத்தைத் தொடங்குவேன், என் விருந்தினர்களை விமர்சனம் எழுதும்படி கேட்பேன். இதன்மூலம் பிறர் அதைப் பார்ப்பார்கள், எனக்குக் கூடுதல் விருந்தினர்கள் கிடைப்பார்கள் என்று நம்புகிறேன்.''இன்னொரு பங்கேற்பாளரான ஷில்பா சாவந்த், ''நான் என் வீட்டை ஒரு ஹோம்ஸ்டேயாக மாற்றத் தயாராகிவிட்டேன்'' என்கிறார். தன் விருந்தினர்களுக்காகத் தன் கிராமத்து வீட்டை மாற்றியமைக்க அவர் தயாரா? ''தயார்தான். இந்த மாற்றம் என் குழந்தையின் பள்ளிக் கட்டணத்தைச் செலுத்தவும் மேம்பட்ட வாழ்க்கையை வாழவும் எனக்கு உதவும் என்றால், அதை ஏன் செய்யக் கூடாது?''

RC பனாஜி ரிவெய்ரா தலைவர் ராகவேந்திரா ஷெடியா இதுபற்றிப் பேசுகையில், ''எங்களுடைய நோக்கம், நீடித்திருக்கும் தொழில் ஒன்றை நடத்தத் தேவையான திறன்கள், கருவிகளை வழங்கி இந்தக் கிராமப்புறப் பெண்களுக்கு ஆற்றல் அளித்தல் தான்'' என்றார். ■



*SHG உறுப்பினர்கள் உணவு பரிமாறத்தயார்.*

# RI தெற்காசிய அலுவலகத்திலிருந்து செய்தி



*மேஜர் டோனர்களை அங்கீகரிக்க க்ரிஸ்டல் மற்றும் பின்.*

**Major Donor அங்கீகாரம்**

TRF எல்லாப் பரிசு நியமித்தல்களையும் சேர்த்து மொத்தம் 10,000 நன்கொடை அளித்துள்ள அனைத்துத் தனிநபர்கள் அல்லது தம்பதிகளையும் Major Donor அங்கீகரிக்கிறது. இந்த அங்கீகார நிலையைத் தனிப்பட்ட/துணைவர் பங்களிப்பின்மூலம்தான் எட்டலாம், இன்னொரு தனி நபர், சங்கம், மாவட்டம் அல்லது வேறு அமைப்பின் பொருத்தும் பங்களிப்பு அல்லது அங்கீகாரப் புள்ளிகளின் வழியாக எட்ட இயலாது. நன்கொடையாளர்கள் ஒவ்வொரு புதிய அங்கீகார நிலையிலும் பரிசைக் கொண்டாடும் ஒரு படிகப் பரிசு மற்றும் ஊசியைப் (ஊசிகளைப்) பெறத் தேர்ந்தெடுக்கலாம். Major Donor அங்கீகாரம் தானாகச் செயல்முறைப் படுத்தப்படுவதில்லை. நன்கொடையாளர்கள் இதற்கான படிவத்தை நிரப்பி, பொறித்தல் குறிப்புகளுடன் நன்கொடையாளர் சேவைகள் குழு, RISAOக்குச் சமர்ப்பிக்கவேண்டும். இவை எவான்ஸ்டனில் செயல்முறைப்படுத்தப் படுகின்றன, நன்கொடையாளர்களுக்குக் கிடைக்க 5 முதல் 6 வாரங்கள் ஆகும். கேள்விகள் இருந்தால், மது மம்கெய்ன் (Madhu.Mamgain@rotary.org), மஞ்சு ஜோஷியைத் (Manju.Joshi@rotary.org) தொடர்பு கொள்ளுங்கள்.

*For RISAO staff contact details refer https://rotarynews online.org/wp-content/uploads/2022/10/RISAO_Staff_Contact_Details.pdf.*■

# 80,000 பெண் குழந்தைகளுக்கான "மெகா" மேம்பாட்டுத் திட்டம்

ரஷீதா பகத்

கடந்த ஆண்டு தலைவராக இருந்த போது சேகர் மேத்தாவால் அறிமுகப் படுத்தப்பட்ட பெண் குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு அதிகாரம் அளிக்கும் அல்லது அவர்களை மேம்படுத்தும் மந்திரத்தை ரோட்டேரியன்கள் மற்றும் ரோட்டரி சங்கங்கள் ஏற்றுக்கொண்டு பிரமிக்கத் தக்க வகையில் செயல்படுத்தி வருவதற்கு ஒரு நல்ல உதாரணம் தேவையெனில், நீங்கள் எங்கும் தேடி அலையவேண்டாம். புனேயில் உள்ள பிப்வெவாடி ரோட்டரி சங்கம் (RID 3131) மிகச்சிறந்த உதாரணம். அந்த சங்கம் தனது CSR கூட்டாளியான GTPL ஹாத்வேயுடன் இணைந்து 'அஸ்மிதா' திட்டத்தில் புதிய உச்சத்தை எட்டியுள்ளது. வளர் இளம் பெண்களின் உடல்நலம், மற்றும் இதர உரிமைகள், குறிப்பாக பாலியல் துன்புறுத்தல் மற்றும் துஷ்பிரயோகம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

இந்த சங்கத்தின் தொடர் முயற்சிக்கு நன்றி. இந்த திட்டம் சமீபத்தில் நான்காவது கட்டத்தை எட்டியுள்ளது. மகாராஷ்டிரம், குஜராத் மற்றும் கோவா மாநிலங்களில் உள்ள சுமார் 80,000 பெண் குழந்தைகள் இப்போது தங்களுக்கான உரிமைகளை தெரிந்து கொண்டுள்ளதுடன், இவை மீறப்பட்டால் எடுக்கவேண்டிய தீர்வு, நடவடிக்கைகள் பற்றியும் அறிந்து கொண்டுள்ளனர். இந்த திட்டத்தின் தாக்கம் அபரிமிதமானது. தங்கள் மகள்கள் அல்லது உறவினர்களிடம் பாலியல் முறைகேட்டில் ஈடுபட்டதாக குற்றஞ்சாட்டப்பட்ட 16 அல்லது 17 ஆண்கள் இப்போது சிறையில் உள்ளனர். இவை பூர்வாங்க தகவல்களில் கிடைத்தவை. 20-க்கும் மேற்பட்ட கல்வி நிறுவனங்களிலிருந்து வரவேண்டிய தரவுகளை கணக்கிட்டால் இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும்.

இதுவரை இந்த மெகா திட்டத்துக்கு 4,00,000 டாலர்கள் முதலீடு செய்யப்பட்டுள்ளது. 3131, 3060 மற்றும் 3170 ஆகிய மாவட்டங்களுக்கு உட்பட்ட 36 ரோட்டரி சங்கங்கள் இதில் ஈடுபாட்டுடன் செயல்பட்டு வருகின்றன. கடந்த ஆண்டு இந்த மூன்று மாவட்டங்களைச் சேர்ந்த 25 சங்கங்கள் இத்திட்டத்தில் ஈடுபாடு காட்டியிருந்தன. ஒவ்வொரு சங்கமும் திரட்டும் நிதியைப் போல நான்கு மடங்கு நிதி CSR கூட்டாளர்களால் நன்கொடையாக வழங்கப்படுகிறது.

சங்கத்தின் பட்டயத் தலைவரும், பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் இத்திட்டத்தின் ஆலோசகருமான ஜிக்னேஷ் பாண்ட்யா கூறுகையில், நான்கு ஆண்டுகளுக்கு முன்பு சங்கம் இத்திட்டத்தை அறிமுகப் படுத்திய போது பாலியல் துஷ் பிரயோகம் மற்றும் சமூக ஊடகங்கள் மூலமான துஷ்பிரயோகங்களை கண்டறிவது எங்களின் நோக்கமாக இருக்கவில்லை. நாங்கள் சிறிய அளவிலேயே இத்திட்டத்தை தொடங்கினோம். பெண்களின் உடலியல் சுகாதாரம் மற்றும் சானிட்டரி பேடுகள் வழங்குவது மற்றும் ஊட்டச்சத்து ஆகிய வற்றிலேயே எங்களது கவனம் இருந்தது. ஆனால், நாங்கள் இந்த திட்டத்தை செயல்படுத்தி வந்தபோது, பள்ளி செல்லும் சிறுமி கள் பலர், உறவினர்கள், நண்பர்கள், மாமாக்கள், தாத்தாக்கள் இன்னும் சொல்லப்போனால் தந்தையால் பாலியல் துன்புறுத்தல்களுக்கு ஆளாவது தெரியவந்தது.

இது தொடர்பான கதைகளைக் கேட்ட பிறகு எங்களில் பலர் தூக்கமில்லாத இரவுகளை சந்தித்தோம். எனக்கும் இரண்டு மகள்கள் இருக்கிறார்கள். என்னால் பெண் குழந்தைகள் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாவதை நினைத்துக்கூட பார்க்க முடிய வில்லை என்று கடும் சீற்றத்துடன் கூறினார்.

எனவே, கடந்த ஆண்டு ரோட்டேரியன்கள் சில நிபுணர்களை கலந்து ஆலோசித்து அவர்களின் உதவியுடன் நான்கு விடியோ படக்காட்சிகள் மற்றும் கேள்வி-பதில் உருவிலான சிறு புத்தகத்தை வெளியிட முடிவு செய்தனர். மகளிர் மருத்துவம், மாதவிடாய் தொடர்பான மாயைகள், ஊட்டச் சத்து மற்றும் உடல்நலத்துடன் இருப்பதற்கு என்ன வகையான உணவுகளை சாப்பிட வேண்டும் என்பது உள்ளிட்ட தகவல்கள் அதில் அடங்கியிருந்தது. இதர இரண்டு விடியோக்களில் பாலியல் துன்புறுத்தல் மற்றும் சுரண்டலை (சூழ்நிலையை பயன்படுத்தி ஆதாயம் அடைய முற்படுதல்) எதிர்த்து எப்படிப் போராடுவது, அத்தகைய துஷ்பிரயோகம் பற்றி எப்படி, எங்கு புகார் அளிப்பது என்பது தொடர்பான தகவல்களை மையமாகக் கொண்டிருந்தது. உதவி கேட்கும் எண்கள் பகிரப்பட்டுள்ளன. மேலும் எப்படி அணுகுவது என்பது தொடர்பான இணையதள முகவரிகளும் வழங்கப்பட்டுள்ளன. அடிப்படையில் இதில் உள்ள தகவல்கள் தற்காப்பு பற்றியது. நீங்கள் ஒரு சங்கடமான சூழ்நிலை யில் சிக்கிக் கொண்டால் அதிலிருந்து போராடி எப்படி மீள்வது என்பது பற்றிய தகவல்களும் கொடுக்கப் பட்டுள்ளன என்கிறார் சங்கத்தின் தலைவர் வர்த்தமான் காந்தி.

கடைசி விடியோ சமூக ஊடகங்கள் மூலமான துன்புறுதல் பற்றியது. மார்ஃபிங் செய்யப்பட்ட புகைப்படங்களை வெளியிடு




பள்ளி மாணவிகள் RC பிப்வெவாடி புனே அளித்த தற்காப்பு பற்றிய கையேடுடன்.

வதாக சிலர் அச்சுறுத்தினால், உடனே பீதியடைந்துவிடக்கூடாது. அத்தகைய அச்சுறுத்தல்களை எப்படி சமாளிப்பது? எப்படி புகார் அளிப்பது, சட்டப்படி எப்படி நடவடிக்கை எடுப்பது என்பது பற்றிய தகவல்கள் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளன என்று அவர் மேலும் கூறினார்.

நாங்கள் பல்வேறு பள்ளிகளில் மாணவிகளுடன் பல்வேறு அமர்வுகள் நடத்தி உரையாடினோம். அப்போது பல இடங்களில் வளர் இளம் பருவத்தினர் 'இன்ஸ்டாகிராம்' கணக்குகளை வைத்திருப்பது தெரியவந்தது என்றார் பாண்ட்யா. மேலும் இளம் வயதிலேயே ஆண்-பெண் நண்பர்களால் பிரச்னைகளை எதிர் கொண்டனர். மார்ஃபிங் முறையில் தயாரிக்கப்பட்ட ஆபாச படங்களை வெளியிடுவதாகவும் மாணவர்கள், மாணவிகளை அச்சுறுத்தி வந்துள்ளனர்.

பெரும்பாலும் இதுபோன்ற சந்தர்ப்பங்களில் பல பெண்கள் பீதியடைந்து தங்களது சமூக ஊடக கணக்குகளை அழித்து விடுகிறார்கள். ஆனால், அவர்கள் அப்படி செய்யக்கூடாது. ரோட்டேரியன்கள், சமூக ஊடகங்கள் மூலமான துஷ்பிரயோகம் உள்ளிட்ட குழந்தைகள் மீதான பல்வேறு வகையான துஷ்பிரயோகங்கள் பற்றி முழுமையாக அறிந்த புனேயைச் சேர்ந்த ரோட்டேரியன் வைஷாலி பகவத்துடன் விரிவாக கலந்துரையாடினர். வளர் இளம் பெண்களுக்கு பாலியல் அச்சுறுத்தல் ஏற்பட்டால், அதற்காக பயந்து தங்களது கணக்குகளை நீக்கி விடக்கூடாது. ஏனெனில் அவர்கள் அப்படிச் செய்தால் அப்பெண்ணை அச்சுறுத்திய குற்றவாளி யார் என்பதை கண்டுபிடிக்க முடியாது. எனவே இதுபற்றி பெண் குழந்தைகளுக்கு எடுத்துரைக்க வேண்டும். இந்த வீடியோக்களில் சில குறிப்புகள் கொடுக்கப் பட்டுள்ளன என்று தெரிவித்தார் வைஷாலி.

ஆனால், வீடியோ மூலமான செய்திகளை பார்ப்பவர்கள் அதை சில நாள்களில் மறந்துவிடலாம் என்பதால் ரோட்டேரியன்கள் மராத்தி, குஜராத்தி மற்றும் ஹிந்தி மொழிகளில் அச்சிடப்பட்ட சிறு புத்தகங்களை தயாரித்துள்ளனர். அதில் சுருக்கமான தகவல்கள், வரைபடங்கள் மூலம் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. அவை பெண் குழந்தைகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன என்றார் காந்தி.

மகாராஷ்டிரம், குஜராத் மற்றும் கோவா மாநிலங்களில் உள்ள பல மாவட்டங்களில் 220 இடங்களில் இந்த ஆண்டு மட்டும் 36,000 வளர் இளம் பெண்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்த எங்களுடன் கூட்டாண்மை ஏற்படுத்தியுள்ள 36 ரோட்டரி சங்கங்கள் மூலம் வீடியோ காட்சிகளை திரையிட முடிவு செய்துள்ளோம்.

### உண்மையான தாக்கம்

தொடர் நடவடிக்கைகள் காரணமாக இந்த திட்டம் ஏற்படுத்தியுள்ள தாக்கம் தொடர்பான தகவல்களை சேகரித்து வருகிறோம். கடந்த ஆண்டு, இந்த திட்டத்தை தொடங்கிய மூன்று கல்வி நிறுவனங்களின் தலைவர்களை நாங்கள் சந்தித்த போது, 'அஸ்மிதா' திட்டம் தங்கள் பள்ளிகளில்



அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து குழந்தைகள் பாலியல் ரீதியாக துன்புறுத்தப்படுவது தொடர்பான புகார்கள் குறைந்துவிட்டன. ஆனால், ஆத்மா திட்ட அறிமுகத்துக்குப் பிறகு பெண் குழந்தைகள் தைரியமாக கொடுத்த புகார்களின் பேரில் இது வரை 16–17 ஆண்கள் மீது விசாரணை நடத்தப்பட்டு அவர்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இதில் சோகமான மற்றும் கொடூரமான கதை என்னவென்றால் தற்போது 8ம் வகுப்பு படிக்கு ஒரு பெண் குழந்தையை அவள் எல்.கே.ஜி. படிப்பதிலிருந்தே அவரது தந்தை பாலியல் ரீதியாக துன்புறுத்தி வந்துள்ளதுதான். இவரின் செய்கை தாய்க்கும் தெரியும். ஆனால், அவர் எல்லாவற்றையும் பார்த்துவிட்டு மவுனமாக இருந்துள்ளார். எங்களின் விடியோ காட்சிகளைப் பார்த்துவிட்டு அப்பெண்ணின் மூத்த சகோதரி புகார் கொடுத்தார். அதன் அடிப்படையில் விசாரணை நடத்தப்பட்டது. இப்போது தந்தை சிறையில் உள்ளார்.

மற்றொரு சம்பவத்தில் ஒரு பெண் குழந்தையை அவளது தாய் மாமாவே பாலியல் ரீதியாக துன்புறுத்தி வந்துள்ளார். இதை அந்தக் குழந்தை தாயின் கவனத்துக்கு கொண்டுவந்தபோது, தாய், மகளை திட்டியதுடன் மவுனமாக இருக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார். ஏற்கெனவே கணவன் குடும்பத்தார் என்னையும் எங்கள் குடும்பத்தையும் மதிப்பதில்லை. இப்போது இது தெரியவந்தால் அவமானமாக இருக்கும். நீ கொஞ்சம் பேசாமலிரு என்று கூறிவிட்டாராம்.

சுமார் 10 நிறுவனங்களுக்குச் சென்று வளர் இளம் பெண்களுக்கு அதிகாரம் அளித்தல், மேம்படுத்துதல், அவர்களுக்கான உரிமைகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தியபோது கிடைத்த தொகுக்கப்பட்ட தரவுகள் தான் இவை என்று அவர் மேலும் கூறினார். இது வரை நாங்கள் 200க்கும் மேலான நிறுவனங்களுக்குச் சென்றுள்ளோம். தரவுகளைச் சேகரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளோம். இதுபோல் இன்னும் பல சம்பவங்கள் வெளிச் சத்துக்கு வரும், அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.




ஏனெனில் பெண்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ள துடன், பாலியல் துன்புறுத்தல் சம்பவங்கள் தொடர்பாக மவுனமாக இருக்க வேண்டாம் என்று வலியுறுத்தியுள்ளோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

### அதிர்ச்சி தரும் அம்மாக்களின் பங்கு

பெண் குழந்தைகள் மேம்பாட்டுக்கான திட்டத்தை ரோட்டேரியன்கள் மும்முரமாக செயல்படுத்தி வந்தாலும், இதில் அதிர்ச்சி தரும் விஷயம் என்னவென்றால் சிலரின் அம்மாக்களே இதற்கு துணை போவது அல்லது எதிர்மறையாகச் செயல்படுவதுதான். தனக்கு நேர்ந்த பாலியல் தொந்தரவு குறித்து ஒரு பெண், தாயிடம் கூறினால், அதை கண்டுகொள்ளாமல், குழந்தைகளை மவுனமாக இருக்கச் சொல்கின்றனர். பாலியல் துன்புறுத்தல் தொடர்பாக ஒரு பெண் கொடுத்த புகாரில் தந்தை கைது செய்யப்பட்டார். இது தொடர்பாக குழந்தை கொடுத்த புகாரின் மீது நடவடிக்கை எடுத்த பள்ளி மீது தாய் வழக்கு தொடர்ந் துள்ளார். இது எங்கள் குடும்ப விஷயம். எதற்காக இதில் நீங்கள் அனாவசியமாகத் தலையிடுகிறீர்கள்? என்று அந்த தாய் கோபத்துடன் கேள்வி எழுப்பியுள்ளார்.

பாண்ட்யா பகிர்ந்து கொண்ட மற்றொரு சுவாரஸ்யமான தகவல் இது. பழமைவாத முஸ்லிம் சிறுபான்மையினர் கல்வி நிறுவனம் தொடர்பானது. இங்கு படிக்க வரும் பெண்கள், தங்களது பழங்கால வழக்கப்படி முகத்தை மறைக்கும் ஹிஜாப் அணிந்து வருபவர்கள். எனவே இந்த முஸ்லிம் கல்வி நிறுவனங்கள் முதலில் எங்கள் திட்டத்தில் பங்கேற்கவே தயக்கம் காட்டி வந்தனர். முஸ்லிம் பழமை வாத குடும்பத்தைச் சேர்ந்த வர்கள் குழந்தைகளை பள்ளிக்கு அனுப்புவதே பெரிய காரியம். இப்போது உங்களது விழிப்புணர்வு திட்டம் பற்றி கேள்விப்பட்டால் பெண் குழந்தைகளை பள்ளிக்கு அனுப்புவதையே அவர்கள் நிறுத்தி விடுவார்கள் என்றனர். இதைத் தொடர்ந்து நாங்கள், நிர்வாகத்தினரும், ஆசிரியர்களும் எங்களின் வீடியோ காட்சிகளை பாருங்கள், கையேடுகளை



DG *அனில் பார்மர் (இடமிருந்து 4வது),* PDGs *பங்கஜ் ஷா, தீபக் ஷிகார்பூர்,* DGE *மஞ்சு ஃபாட்கே,* PDGs *ரேஷ்மி குல்கர்னி மற்றும் தீபக்* M *புரோஹித் ஆகியோருடன் புனேவில் அஸ்மிதா திட்ட துவக்க விழாவில்.*

படியுங்கள். நாங்கள் குறிப்பிடிருக்கும் தகவல்கள் உங்களுக்கு திருப்தி அளிப்பதாக கருதினால், அவற்றை குழந்தைகளிடம் பகிர்ந்து கொள்ளுங்கள் என்றோம். அதை படித்துப் பார்த்த அவர்கள், அதில் ஆட்சேபத்துக்குரிய எந்த தகவல்களும் இல்லாமல் இருப்பதைக்கண்டு, திட்டத்தைச் செயல்படுத்த மகிழ்ச்சியுடன் முன்வந்தார்கள். அந்த அமர்வுகளுக்கு எங்களை அழைத்தார்கள், மேலும் புத்தகத்தின் மூலம் தங்களது உரிமைகளைத் தெரிந்து கொண்டதுடன் பல கேள்விகளை எழுப்பினர். விழிப்புணர்வுக் கல்வியில் நாங்கள் தேர்ந்தெடுத்த மொழியால் அவர்களுக்கு எந்தவித பிரச்னையும் இல்லை என்பதில் எங்களுக்கு மகிழ்ச்சிதான்.

மொத்தத்தில் பள்ளிகளில் நடத்தப்படும் அஸ்மிதா அமர்வு களில் நான்கு வீடியோக்கள் காட்சிப்படுத்தப்படுகின்றன. இதற்கு சுமார் 2 மணி நேரம் ஆகிறது. உடலியல் சுகாதாரம், மாத விடாய் சுகாதாரம் தவிர மற்ற இரு வீடியோக்கள் பாலியல் துன்புறுத்தல் மற்றும் சமூக வலைதளம் மூலமான துன்புறுத்தல் பற்றியது. விழிப் புணர்வு வீடியோக்களுடன் தற்காப்புக்காக சில குறிப்புகளும் வழங்கப்படுகின்றன. உதாரணமாக குற்றவாளிகளை கழுத்து, இடுப்பு உள்ளிட்ட பகுதிகளில் தாக்கலாம். மேலும் பெண்கள் ஆட்டோ அல்லது கார்களில் பயணிக்கும்போது GPS முறையில் தனது இருப்பிடத்தைத் தெரிவிக்கலாம்.




DGE *மஞ்சு ஃபாட்கே (வலது) உளவியல் நிபுணர்* Dr *யஜ்ஜோதி சிங் அவர்களுடன்.*

பிப்வெவாடி ரோட்டரி சங்கம், செப்டம்பர் மாதம், அஸ்மிதா திட்டம் தொடர்பாக நான்காவது கட்டமாக புனேயில் கருத்தரங்கை நடத்தியது. இதில் RID 3131ன் மாவட்ட ஆளுநர் அனில் பார்மர், GTPL ஹாத்வே CFO அனில் போத்ரா, செயின்ட் கிரிஸ்பின் விடுதியின் இயக்குநர் விஷ்ரம் பவே, உளவியல் நிபுணர் டாக்டர் யஜ்ஜோதி சிங் மற்றும் PDGக்கள் பங்கஜ் ஷா, ராஷ்மி குல்கர்னி, அபய் காட்கில், தீபக் புரோஹித், தீபக் ஷிகார்புர், DGE மஞ்சு பாட்கே, DGN ஷீதல் ஷா மற்றும் 20க்கும் மேலான ரோட்டரி சங்கங்களின் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

மாவட்ட ஆளுநர் பார்மர் கூறுகையில், இன்றைய சூழலில் இந்தியாவின் பெண்கள் தங்களது அன்றாட வாழ்வில் பல்வேறு பிரச்னைகளை எதிர்கொள்ள நேரிடுகிறது. ‘அஸ்மிதா’ திட்டம் பெண் குழந்தைகளிடம் அவர்கள் சுதந்திரமாகவும், அச்சமில்லாமலும், தைரியமாகவும் வாழும் வகையில் நம்பிக்கையை ஏற்படுத்தி யுள்ளது என்றார்.■

Rotary PEOPLE OF ACTION

# அரசுப் பள்ளிக்கு ரோட்டரியின் கழிப்பறைத் தொகுதிப் பரிசு

ரோட்டரி செய்திக் குழு




DG N *நந்தகுமார் மற்றும் சங்கத்தினர்* VGP *பூங்காவில் குழந்தைகளுடன்.*

சமீபத்தில், RC மெட்ராஸ் மேக்னம், RID 3232, தன்னுடைய மெட்ராஸ் மேக்னம் அறக்கட்டளையின் வழியாக, சென்னையில் உள்ள அரசுப் பள்ளி ஒன்றில் பையன்களுக்கான கழிப்பறைத் தொகுதி ஒன்றை அமைத்தது. DG Dr N நந்தகுமார் தொடங்கி வைத்த இந்தத் திட்டம் 1904ல் அமைக்கப்பட்ட இந்த இருபால் பள்ளியில் 650 பையன்கள், 25 ஆசிரியர்களுக்குப் பலன் தரும். இந்தத் திட்டத்தின் தலைவர் அக்ஷய் பட்வாரி. “சென்ற ஆண்டு, நாங்கள் இந்தப் பள்ளிக்கு வந்தபோது, பெண்கள் கழிப்பறைகள் நன்கு அமைந்திருப்பதையும் ஆண்கள் கழிப்பறைகள் முற்றிலும் பயன்படுத்த இயலாமல் இருப்பதையும் கண்டோம். நாங்கள் உடனடியாக உதவுவதற்குத் தன்னார்வத்துடன் முன்வந்தோம்” என்கிறார் சங்கத்தின் பொதுமக்கள் தொடர்புத் தலைவர் கௌரவ் ஜெயின். இதற்கான கட்டுமானம், நலிந்தவர்களுக்கான பள்ளிகளில் உள் கட்டமைப்பை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துகிற இந்தச் சங்கத்தின் முன்னோடித் திட்டமாகிய சிக்ஷா ஔர் சுரக்ஷா திட்டத்தின்கீழ் தொடங்கியது.

2014ல் பதிவு செய்யப் பட்ட இந்தச் சங்கம் “ரூ1 கோடி மதிப்புள்ள 55க்கும் மேற்பட்ட திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளது. இந்தச் சங்கம் ஒவ்வோர் ஆண்டும் சங்க உறுப்பினர்கள், பிற நன்கொடையாளர்கள் பங்களிப்பின் மூலம் சிறுவர்களுக்கான திருவிழாக்களை நடத்தி வருகிறது. இதில் எஞ்சும் நிதிபள்ளிகளில் உள் கட்டமைப்பு மேம் பாட்டுக்குப் பயன்படுத்தப் படுகிறது.

முதல் திருவிழா 2017ல் அடையாறு புற்றுநோய் மருத்துவமனையில் புற்று நோய்க்குச் சிகிச்சை பெறும் குழந்தைகளுக்குப் பொழுதுபோக்கு வழங்க நடத்தப்பட்டது. இந்த ஆண்டு விடுதலை நாளன்று இந்தச் சங்கம் மேக்னம் திருவிழாவின் நான்காவது பருவத்தை நடத்தியது, நகரெங்கும் உள்ள ஆதரவற்றோர் மற்றும் கைவிடப்பட்டோர் இல்லங்களில் உள்ள 1,000 குழந்தைகள் இதில் பங்கேற்றார்கள். இவர்கள் VGP கடல் வாழ் உயிரினப் பூங்காவுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். “இவர்களில் பெரும் பாலானோர் இப்படிப்பட்ட ஓர் இடத்துக்கு முதன்முறை வருகிறார்கள். உலகெங் கிலுமிருந்து சுறாக்கள், திருக்கை மீன்கள் உள்ளிட்ட கடல் வாழ் உயிரினங்களைக் காட்சிப் படுத்தும் இந்தக் கண் காட்சியை அவர்கள் நடந்தபடி கண்டபோது அவர்கள் முகத்தில் தெரிந்த மகிழ்ச்சியைக் கண்டு நாங்கள் நெகிழ்ந்தோம். இந்தச் சங்கம் தங்களுடைய இளம் விருந்தினர்களுக்குக் காலை, மதிய உணவு வழங்கிப் பரிசுகளையும் வழங்கியது.

“கோவிட் நோய்ப் பரவலால் உலகம் பாதிக்கப்பட்ட இரண்டு ஆண்டுகளைத் தவிர, ஒவ்வோர் ஆண்டும் நாங்கள் 1,000 முதல் 1,500 குழந்தைகளை இந்நகரில் உள்ள மகிழ்ச்சிப் பூங்காக்களுக்கு அழைத்துச் சென்று பொழுதுபோக்கு வழங்குகிறோம், என்றார் ஜெயின்.■

ADVERTORIAL

# மாவட்டம் 3110



ப்ராச்சி மற்றும் DG பவன் அகர்வால்
RID 3110

## TRF அறங்காவலர் தலைவர் இயன் ரிஸ்லியுடன் AKS மற்றும் மேஜர் டோனர் சந்திப்பு

### Gracias : The Gracious





## தொழில் முனைவோருக்கு பயிற்சி திட்டம்

### IIM காஷிபூருடன்







## மாவட்ட உறுப்பினர் வளர்ச்சி குழு

செப்டம்பர் 30, 2022 வரை
எங்கள் மாவட்டம் Zone 6-ல்

1st Rank — *Highest Net Growth Rate in membership* — 6.4%

2nd Rank — *Highest Net Growth in Membership* — 231



DGN நீரவ் N அகர்வால்,
மாவட்ட உறுப்பினர்
வளர்ச்சி குழு தலைவர்



PDG தேவேந்தர் அகர்வால்
ARRFC

## 2022–23 CSR திட்டங்கள்



PDG ஷரத் சந்த்ரா
DRFC

| S.N. | Project Title | Host Club | Corporate Donor | Project Amount (₹) | CSR Amount (₹) |
|---|---|---|---|---|---|
| 1 | Donation of E-Tabs to Girl Students of Class 9th | RC Kashipur | Naini Papers Ltd. | 79,79,000 | 79,79,000 |
| 2 | Modernization of 3 Govt. Schools to Happy Schools | RC Kashipur | Naini Papers Ltd. | 79,79,000 | 79,79,000 |
| 3 | Complete Transformation of Govt School | RC Kashipur | Andritz Technologies | 31,60,000 | 31,60,000 |
| 4 | Upgradation of NBSU to SNCU at Govt. Hospital | RC Kashipur | KVS Premier Foundation | 26,07,000 | 26,07,000 |
| 5 | Providing Eyecare, ENT & ICU Medical Equipment to Govt. Hospital | RC Kashipur | Galwalia Ispat Udyog (P) Ltd. | 26,50,000 | 26,50,000 |
| 6 | Providing Medical Equipment for Diagnosis of Cancer at SSB Trauma Center, Firazabad | RC Agra | Sapphire RDS Projects Ltd. | 1,05,26,320 | 35,00,000 |
| | TOTAL AMOUNT (₹) | | | 3,49,01,320 | 2,78,75,000 |

Do follow us: @Rotary3110

# மாவட்டம் 3110ன் நலதிட்டங்கள்






















Rtn ராஜ் மெஹரோத்ரா
CDS (Admin)

*கான்பூர் ரோட்டரி சங்கங்கள் Oct 2, 2022 அன்று நடத்திய மெகா இரத்த தான முகாமில் இரத்த நன்கொடையாளர்கள் மற்றும் Rotary Wheel-ன் ட்ரோன் காட்சி.*






DGE விவேக் கர்க்

# மனித குலத்துக்கு ஆறுதல் வழங்கிச் சேவை செய்யும் தன்னலமற்ற வாழ்க்கை

ராஜேந்திர சாபூ

RI தலைவர், ரோட்டரி அறக் கட்டளைத் தலைவர் பொறுப்பு களை நான் நிறைவு செய்த போது, களச் சேவையில் ஈடுபடுவதற்கான நேரம் இது என்று உஷா மற்றும் நான் எண்ணினோம்.

ஆப்பிரிக்காவில் உள்ள தீவிரத் தேவைகளைக் கவனித்த நாங்கள், 1998 ஆகஸ்ட் தொடக்கத்தில் உகாண்டா செல்லத் தீர்மானித்தோம். நம் இந்திய மருத்துவர்கள், அறுவைச் சிகிச்சை வல்லுனர்களுடைய அறிவு, திறமையை அறிந்திருந்த நாங்கள் இரண்டு சிறப்புச் சிகிச்சைகளில் கவனம் செலுத்தத் தீர்மானித்தோம்: கண் மற்றும் இளம்பிள்ளைவாதத் திருத்த அறுவைச் சிகிச்சைகள்.

நாங்கள் கிளம்பத் தயாரான நேரத்தில் கென்யா, தான்சானியா வில் குண்டு வெடிப்பு என்கிற அதிர்ச்சிச் செய்தி வந்தது, அடுத்து உகாண்டாவில் குண்டு வெடிக்கலாம் என்ற அச்சம் பரவியிருந்தது. இந்த நேரத்தில் உகாண்டா செல்வது ஆபத்து என்று மருத்துவர்களும் நண்பர்களும் சொன்னார்கள்.

அப்போது, ஒரு மாலை நேரத்தில் சாந்தி என்ற இளம் பெண்ணைச் சந்தித்தார் உஷா. இந்தச் சாந்தி குரோசியாப் போரில் அமைதிப் பணித் தன்னார்வலராகச் சேவை புரிந்தவர், கண்ணி வெடி வெடிப்புகள், துப்பாக்கிச் சண்டைகள், கொலைகளைப் பார்த்தவர். உஷா அவரிடம் கேட்டார், "ஒவ்வொரு கணமும் உயிருக்கு ஆபத்து இருக்கிற ஓர் இடத்தில் இருப்பது உங்களுக்கு அச்சமாக இல்லையா?" சாந்தி சிரித்துவிட்டுச் சொன்னார், "எனக்கு எந்த அச்சமும் இல்லை. நம் அனைவருக்கும் இருப்பது ஓர் உயிர்தான். அதைப் பொருள் உள்ளவகையில் வாழவேண்டும், அதுதான் எனக்கு முக்கியம்."


இது எங்கள் குழப்பத்தைத் தீர்த்துவைத்தது. எங்கள் மன எழுச்சி கூடியது, எங்கள் குழு புறப்படத் தயாரானது.

எட்டு மருத்துவர்களும் நாங்கள் இருவரும் கொண்ட குழு திட்டமிட்ட படி கம்பாலா-வுக்குப் புறப்பட்டது. உகாண்டாவில் போதுமான வளங்கள் இல்லாததால், மருந்துகள், லென்ஸ்கள், கருவிகளையெல்லாம் எங்கள் குழு கொண்டுசென்றது. கம்பாலா செல்லும் விமானத்தில் நாங்கள் கூடுதல் சரக்குகளைக் கொண்டுசென்றோம்.

அங்கிருந்து, மருத்துவர்கள் S P S கிரேவால், உமா பிரதான், கண் அறுவைச் சிகிச்சை வல்லுனர்கள், கிளர்ச்சியால் பாதிக்கப்பட்ட குலு என்கிற பகுதிக்கு ஒரு சிறிய விமானத்தில் பறந்தார்கள். அனைத்து லென்ஸ்களையும் அந்த விமானத்தில் கொண்டுசெல்ல இயலவில்லை. அதனால், சில லென்ஸ்கள் சாலை வழியில் சென்றன, அவை வழியில் திருடப்பட்டன. அறுவைச் சிகிச்சை வல்லுனர்கள் தங்களுடன் கொண்டு சென்ற லென்ஸ் கண் புரை மற்றும் பிற அறுவைச் சிகிச்சைகளுக்குப் பயன்படுத்தப் பட்டது. எலும்பு வல்லுனர்கள் குழுவும் தன்னார்வலர்களாகிய நாங்களும் ஒரு பேருந்தில் மசாகாவுக்குச் சாலை வழியில் சென்றோம். சிறுவர்களை இளம் பிள்ளைவாதத் திருத்த அறுவைச் சிகிச்சைக்குப் பரிசோதித்தோம்.

அடுத்து, அறுவைச் சிகிச்சை வல்லுனர்கள் அறுவைச் சிகிச்சை களைத் தொடங்கினார்கள். நாங்கள் 10 நாட்கள் தங்கிப் நோயாளிகளுக்குச் சிகிச்சை அளித்தோம், உள்ளூர்

*PRIP ராஜேந்திர சாபூ ஜிம்பாப்வேயில் ஒரு மருத்துவ முகாமில் ஒரு நோயாளியிற்கு உதவுகிறார்.*



மருத்துவர் களுக்குப் பயிற்சி அளித்தோம். நாங்கள் சேவை புரிந்த மக்களுடைய நம்பிக்கையும் அவர்கள் எங்கள்மேல் வைத்த நம்பிக்கையும் தான் எங்களுடைய மிகப் பெரிய வலிமைகள். தன்னார்வலர்களாகிய நாங்கள் மருத்துவர்களுடைய ஓய்வற்ற பணியைக் கண்டு நெகிழ்ந்தோம்.

நாங்கள் மருத்துவப் பணிகளைத் தொடரத் தீர்மானித்தோம். இதற்கு ஆப்பிரிக்காவில் பல கதவுகள் திறந்தன, ருவாண்டா, நைஜீரியா, உகாண்டாவைச் சேர்ந்த 40க்கும் மேற்பட்ட குழந்தைகளை இதய அறுவைச் சிகிச்சைக்காகச் சண்டிகர் அழைத்து வந்தோம்.

ஆப்பிரிக்க, ஆசிய நாடுகளில் எல்லைகளைக் கடந்து பணியாற்றிய பின், நம் நாட்டில் 2006 முதல் நாங்கள் இந்தியாவில் கலாஹண்டி, மண்ட்லா-வின் பழங்குடியினப் பகுதிகள், ஜக்தால்பூர் நக்சல் பகுதி, நாகாலாந்தில் உள்ள திமாபூர், ஜம்முவில் உள்ள உதம்பூர் போன்ற பின்தங்கிய அல்லது ஆபத்தான பகுதிகளில் மருத்துவப் பணியைத் தொடங்கினோம்.

### வெற்றிக் கதைகள்

இந்தப் பயணத்தில் நெஞ்சைத் தொடும் பல கதைகள். Dr P S சாரி என்கிற திறமை மிக்க பிளாஸ்டிக் சர்ஜன், நாயால் கடிக்கப்பட்ட ஒருவருடைய முகத்தை மறு உருவாக்கம் செய்தார், இது மலாவியில் பெரிய வெற்றிக் கதை ஆனது. மடகாஸ்கரில் Dr R S பர்மர் ஒரு நோயாளிக்கு லாப்ராஸ்கோபி செய்யும் போது $CO_2$ வாயுவுக்குப் பதிலாக இரத்த அழுத்தப் பம்பைப் பயன்படுத்தி வெற்றிகரமாக அறுவைச் சிகிச்சையை நிறைவு செய்தார். பிறந்தது முதல் வாயைத் திறக்க இயலாத ஒரு குழந்தைக்கு Dr ஹேமந்த் பத்ரா அறுவைச் சிகிச்சை செய்தார், Dr ரவ்ஜித் சிங் என்கிற எலும்பு அறுவைச் சிகிச்சை வல்லுனர் இரண்டு பக்கங் களிலும் போஸ்ட் ரிக்கெட்ஸ் பௌ கொண்ட வளர் இளம் பருவப் பையன் ஒருவனுக்கு அறுவைச் சிகிச்சை செய்து, இரண்டு கால் களிலும் நான்கு நீண்ட எலும்பு களின் சிதைவைச் சரி செய்தார். உகாண்டாவில் மூன்று வயதுப் பையன் ஒருவன் தீ விபத்தில் தன்னுடைய கண்ணிமைகளை இழந் திருந்தான், அவனுடைய பார்வை பறிபோகும் நிலையில் இருந்தது. Dr V D சிங் என்ற பிளாஸ்டிக் சர்ஜன், அவனுடைய கண்ணிமைகளை மறு உருவாக்கம் செய்து பார்க்கும் திறனைக் காப்பாற்றினார்.

23 ஆண்டுகளில் நாங்கள் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் 48 மருத்துவப்பணிகளைச் செய்துள்ளோம். கிட்டத்தட்ட 66,000 அறுவைச் சிகிச்சைகள், மற்ற சிகிச்சைகளால் கிட்டத்தட்ட 260,000 மக்களுக்குப் பலன் அளித்துள்ளோம். வெளிநாடுகளில் கிட்டத்தட்ட 7,000 பேர் கண் அறுவைச் சிகிச்சைகள், IOL மாற்றுகளாலும், இந்தியாவில் 5,000க்கும் மேற்பட்ட மக்கள் கண் அறுவைச் சிகிச்சைகளாலும் பலன் பெற்றார்கள்.

இந்தத் திட்டங்களுக்கு என்ன செலவாகிறது என்று என்னிடம் பலர் கேட்டுள்ளார்கள். அவர்களுக்கு என் பதில் ஒன்றுதான், 'மருத்துவர்கள் தியாகம் செய்த நேரம், பணம், வசதிக்கு நம்மால் விலை கணக்கிட இயலுமா? அல்லது, தாங்கள் சேவை புரிந்த நோயாளிகளுக்கு அவர்கள் வழங்கிய அன்பான உழைப்புக்கு விலை கணக்கிட இயலுமா?'

1998ல் விதைக்கப்பட்ட சிறிய விதை நலம் வழங்குகிற, ஆற்றுகிற வலிமையான மரமாக வளர்ந்து மனித குலத்துக்குச் சேவை புரிந்த கதை இது.

தி இந்தியன் எக்ஸ்பிரஸ்
(எழுத்தாளர் ஒரு முன்னாள் RI தலைவர்)

---



## ரோட்டரி அறக்கட்டளையின் 2023–24ம் ஆண்டின் துணைத் தலைவர் பரத் பாண்ட்யா

ரோட்டரி செய்திக் குழு

TRF அறங்காவலர் பரத் பாண்ட்யா, ரோட்டரி ஆண்டு 2023–24ல் அறக்கட்டளையின் துணைத் தலைவராக இருப்பார். அப்போது PRIP பாரி ரஸ்ஸின் அறக்கட்டளையின் தலைவராக இருப்பார். இந்த ஆண்டு துணைத் தலைவராக இருக்கும் RI இயக்குநர் லாரி லுன்ஸ்ஃபோர்டு பதவிக் காலத்துக்குப் பின் பரத் துணைத் தலைவராக இருப்பார்.

அறங்காவலர் பரத் பாண்ட்யா 2019–21ம் ஆண்டில் RI இயக்குநராக இருந்தார். மேலும் 2020–21ம் ஆண்டில் அதன் பொருளாளராகவும் பணியாற்றினார். 2022 முதல் 2026ம் ஆண்டுவரை நான்கு ஆண்டுகள் TRF அறங்காவலராகப் பணியாற்ற RI நிர்வாகக்குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பரத் பாண்ட்யாவின் புதிய பணிக்கு ரோட்டரி நியூஸ், தனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறது. ■

# மும்பையின் துப்புரவுத் தொழிலாளர்களின் போதைக்கு எதிரான போராட்டம்

ரஷீதா பகத்



*சங்கத்தலைவர் Dr நீலம் கட்டா ஒரு துப்புரவுப் பணியாளரை பரிசோதிக்கிறார்.*

நமது பெரிய மாநகராட்சிகள் அல்லது நகராட்சிகளில் துப்புரவு சேவைகளை வழங்கும் தொழிலாளர்களின் வாழ்க்கை கடினமானது.'' சுற்றுச் சூழலை மட்டுமல்லாமல், குடிமக்களின் ஆரோக்கியத்தையும் பாதுகாப்பதற்கும் முக்கியமான, விலைமதிப்பற்ற மற்றும் அத்தியாவசியமான பொது சேவையை அவர்கள் வழங்குகிறார்கள் என்பதை நாம் அனைவரும் அறிவோம். ஒரு கொடிய தொற்றுநோய், பேரழிவு தரும் வெள்ளம் அல்லது வேறு ஏதேனும் பேரிடர் இருந்தபோதிலும் தொடர்ந்து பணியாற்றுவார்கள். ஆனால் பெரும்பாலான நேரங்களில் அவர்களின் உடல்நலத் தேவைகளைப் பார்த்துக்கொள்ள அரசாங்கக் கொள்கைகளோ அல்லது விரிவான மருத்துவக் காப்பீடுகளோ அவர்களிடம் இல்லை, என்கிறார் மும்பையில் உள்ள RC அடிமையாதல் தடுப்புத் (RC Addiction Prevention in Mumbai) தலைவர் டாக்டர் நீலம் கடா, RID 3141. இது கடந்த ஆண்டு தான் பட்டயப்படுத்தப் பட்ட சங்கம்.

இது 15 உறுப்பினர்களை மட்டுமே கொண்டுள்ளது, மேலும் சங்கத்தின் பெயர் குறிப்பிடுவது போல, அதன் மையப் பகுதி போதை மற்றும் போதைப்பொருள் துஷ்பிரயோகத்தை எதிர்த்துப் போராடுவதாகும். மும்பையின் துப்புரவுத் தொழிலாளர்களிடையே அதிக அளவு புகையிலைப்பழக்கம் மற்றும் மதுப்பழக்கம் பற்றிய அதன் விவாதங்களில் ஒன்றில், அரசாங்கக் கொள்கைகள், சட்டங்கள் அல்லது எந்தவொரு சுகாதார காப்பீடும் இல்லாத, சமூகத்தின் விளிம்புநிலை மற்றும் ஏழ்மையில் இருந்து வந்தவர்கள் பல்வேறு தொழில்சார் மற்றும் சுற்றுச்சூழல் அபாயங்களுக்கு உட்படுத்தப்படுவதைக் சுட்டிக் காட்டினர். இவை அவர்களின் உடல் நலம் மற்றும் உயிர் இரண்டையும் கடுமையான ஆபத்தில் ஆழ்த்துகின்றன.

மாநகரின் சாக்கடைகள் மற்றும் அடிவாரப் பாதைகளை சுத்தம் செய்வதில் ஈடுபடும் கடினமான உடல் உழைப்பு தொழிலாளர்களுக்கு மகிழ்ச்சியைத் தருவதில்லை, அவர்கள் போதைப்பொருளுக்கு அடிமையாவதை எளிதாக்குகிறது என்பது நமக்கு இரகசியமல்ல. புகையிலை மற்றும் மது அருந்துவது அவர்களின் வாழ்க்கையின் இயல்பான பகுதியாக மாறிவிட்டது, ஏனெனில் இந்த போதை அவர்கள் அசுத்தமான நிலையில் வேலை செய்ய உதவுகிறது', என்று அவர் கூறுகிறார்.

எனவே, பெரும்பாலான தொழிலாளர்கள் புற்றுநோய் மற்றும் இதயம் தொடர்பான பிரச்சனைகள், வாஸ்குலர் நோய்கள், பக்கவாதத்தால் செயலிழப்பு, மற்றும் புகையிலை மெல்லுதல், புகைபிடித்தல் மற்றும் மது அருந்துவதால் நுரையீரல் நோய்கள் உள்ளிட்ட உடல்நல




*துப்புரவுத் தொழிலாளர் களுக்கான ஒரு மருத்துவ முகாம்.*

அபாயங்களை எதிர்கொள்கின்றனர். பொது மக்களிடம் புகையிலை நுகர்வு மற்றும் புற்றுநோய் பாதிப்பு 20 சதவீதம் உள்ளது. அதுவே, துப்புரவுத் தொழிலாளர்கள் மத்தியில் இது 51 சதவீதமாக உள்ளது. இதை அறிந்த சங்க உறுப்பினர்கள் மிகவும் கவலையடைந்தனர் என்று அவர் கூறினார்.

எனவே, துப்புரவுப் பணியாளர் களுக்கு போதைத்தடுப்பு மற்றும் புற்றுநோய் பரிசோதனை என்ற தலைப்பில் ஒரு திட்டத்தை சங்கம் தொடங்கியது, ஏனெனில் எத்தனை பேர் ஆபத்தில் உள்ளனர், அவர்களுக்கு என்ன வகையான மருத்துவ சிகிச்சை அல்லது தடுப்பு பராமரிப்பு மற்றும் ஆலோசனைகள் தேவை போன்றவற்றை முதலில் கண்டறிய வேண்டும். சங்கம், RC மும்பை சோபோ உடன் இணைந்து இந்த திட்டத்தின் செலவை சந்திக்க திரட்டிய தொகை, 1.8 லட்சம் ரூபாய்.

உயர் இரத்த அழுத்தம், கண் குறைபாடுகள், நீரிழிவு, உயர் சர்க்கரை அளவு, இரும்புச் சத்து குறைபாடு காரணமாக குறைந்த ஹீமோகுளோபின் அளவு மற்றும் பல்வேறு வகையான புற்றுநோய்கள் போன்றவற்றிற்கு கல்வி, விழிப்புணர்வு, ஆலோசனை மற்றும் ஸ்கிரீனிங் ஆகியவற்றை உள்ளடக்கிய இந்த விரிவான திட்டத்திற்காக மும்பையின் லோயர் பரேல் பகுதியில் இருந்து திடக்கழிவு மேலாண்மை துப்புரவு பணியாளர்கள் 622 பேர் தேர்ந்தேடுக்கபட்டனர்.

இவர்களில் 125 பேர் பெண்கள் என்றும், அவர்களில் பலருக்கு புகையிலை பழக்கம் இருப்பதாகவும் டாக்டர் நீலம் கூறுகிறார். ஆண் தொழிலாளர்கள் மத்தியில் மதுப்பழக்கம் அதிகமாக காணப்பட்டது. கல்வியே திட்டத்தின் முக்கிய மையமாக இருந்தது மற்றும் முகாமில் போதைக்கு அடிமையானவர்களுக்கு போதைப்பழக்கம் புற்றுநோய் மற்றும் பிற கடுமையான சிக்கல்களை ஏற்படுத்தும் அபாயம் உள்ளது என்று விளக்கப்பட்டது. பெண்களுக்கு மார்பகப் புற்றுநோய்க்கான சுய பரிசோதனை மற்றும் கர்ப்பப்பை



*நீலம் கட்டா, RC மும்பை சோபோ தலைவர் எல்ஸ் ரைனர்ஸ் மற்றும் ரோட்டராக்டர்கள்.*

வாய்ப் புற்றுநோயின் அறிகுறிகளைக் கவனிக்க கற்றுக்கொடுக்கப்பட்டது. பரிசோதனையில் இரத்த அழுத்தம், இரத்த சர்க்கரை மற்றும் ஹீமோகுளோபின் அளவை பரிசோதித்தல் மற்றும், பல் மற்றும் கண் பரிசோதனையும் செய்யப் பட்டது. புற்றுநோய் பரிசோதனையில் வாய் புற்றுநோயையும், மார்பக புற்றுநோயையும், கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய்க்கான பாப் ஸ்மியர் பரிசோதனையும் செய்யப்பட்டது. குடற்புழு நீக்கத்திற்கான மருந்து, இரும்பு மற்றும் கால்சியம் மாத்திரைகள் மற்றும் மல்டிவைட்டமின் மாத்திரைகள் முழு குழுவிற்கும் 1–3 மாதங்களுக்கு தேவைக்கேற்ப வழங்கப்பட்டது.

எவ்வாறாயினும், எங்கள் கவனம் அவர்களுக்கு போதைத்தடுப்பு பற்றி கற்பிப்பது, அவர்களுக்கு தனிப்பட்ட ஆலோசனைகளை வழங்குதல், எங்கள் தொலைத்தொடர்பு சேவைகளுக்கான இலவச அணுகல், உளவியலாளருடன் கலந்தாலோ சித்தல் மற்றும் ஆறு மாதங்களுக்குப் பின்பற்றல் நடவடிக்கைகளில் இருக்கிறது. உந்துதலை வலுப்படுத்து வதற்கும் பகிர்வு அனுபவத்தை பெறவும் நாங்கள் அவர்களை அருகில் இருக்கும் ஆதரிக்கும் குழுக்களுக்கு பரிந்துரைத்துள்ளோம். போதை யின்மையை பேணுவதற்கான மிகச் சிறந்த வழியாக இது நிரூபிக்கப் பட்டுள்ளது என சங்கத்தலைவர் கூறினார்.

ஸ்கிரீனிங்கின் முடிவுகளைப் பற்றி, RC மும்பை சோபோவின் தலைவர் எல்ஸ் ரெய்னர்ஸ் கூறுகையில், 622 பேரில் 44 சதவீதம் பேருக்கு உயர் இரத்த அழுத்தம் மற்றும் 21 சதவீதம் பேருக்கு சர்க்கரை அளவு அதிகமாக இருந்தது, ஆனால் இந்த இரண்டு நிலைகளுக்கும் தேவையான மருந்துகளை எடுத்துக்கொண்டவர்கள் மிகக் குறைவானவர்கள். சுமார் 47 சதவீதம் பேர் குறைந்த ஹீமோகுளோபின் அளவைக் கொண்டிருந்தனர், அவர்களுக்கு வைட்டமின்கள் மற்றும் இரும்புச்சத்து மாத்திரைகள் கொடுக்கப்பட்டது. ஏறக்குறைய 20 சதவீத மக்களுக்கு கண்புரை அறுவை சிகிச்சை தேவைப்பட்டது.






அவர்கள் மும்பையில் உள்ள மூன்று ரோட்டரி சங்கங்களுக்கு பரிந்துரைக்கப்பட்டனர், அவை தாழ்த்தப்பட்டவர்களுக்கு இலவச கண்புரை அறுவை சிகிச்சையை ஏற்பாடு செய்கின்றன.

புற்றுநோய்க்கு முந்தைய வாய்வழி புண்கள் பெண்கள் உட்பட 22 சதவீதத்தினருக்கும், சுமார் 10 சதவீதத்தினருக்கு மார்பக அசாதாரணங்களும் மற்றும் 5 பெண்களில் கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய்களும் கண்டறியப்பட்டன. சுமார் 40 சதவீதம் பேர் புகையிலைக்கு அடிமைப்பட்டுள்ளனர் மற்றும் 53 சதவீதம் பேர் – பெரும்பாலும் ஆண்கள், மதுவுக்கு அடிமையாகி இருப்பது கண்டறியப்பட்டது. கண்புரை அல்லது விழித்திரை அறுவை சிகிச்சை, பல் சிகிச்சை தேவைப்படுபவர்கள் அதற்கு ஏற்றவாறு மருத்துவமனைகளுக்கு பரிந்துரைக்கப்பட்டனர். இவர்கள் அனைவரும் அரசு ஊழியர்கள் என்பதால், சிலர் அரசு அல்லது தனியார் அறக்கட்டளை மருத்துவமனைகளுக்கும் பரிந்துரைக்கப்பட்டனர்.

இந்தத் திட்டத்தைச் செயல் படுத்துவதில் தீவிரமாக ஈடுபட்டிருந்த இரண்டு சங்கங்களைச் சேர்ந்த 20 ரோட்டேரியன்கள் தவிர, 25 ரோட்டராக்டர்களும் பணியில் ஆழ்ந்து ஈடுபட்டுள்ளனர் என்பதை அறிவது மகிழ்ச்சி அளிக்கிறது. ரோட்டராக்டர்களுடன் இணைந்து பணிபுரிந்த அனுபவத்தைப் பற்றி கேட்டபோது, அவர்கள் மிகவும் ஆற்றல் மிக்கவர்களாகவும், மிகுந்த ஈடுபாட்டுடனும் இருந்தனர். அவர்கள் புகார் கூறாத மனப் பான்மையைக் கொண்டிருந்தனர், மிகவும் நெகிழ்வானவர்களாகவும் கடின உழைப்பாளிகளாகவும் இருந்தனர் என டாக்டர் நீலம் கூறினார்.

கூட்டத்தை நிர்வகித்தல், படிவங்களை நிரப்புதல், மருத்துவர்களுக்கு உதவுதல் தவிர, அவர்களது கூட்டாண்மை பெரும் உதவியாக இருந்தது, ஏனெனில் அவர்கள் மும்பையின் RAC மெடிக்ரு மற்றும் RAC கடுசியஸ் ஆகிய இரண்டு சமூக அடிப்படையிலான ரோட்ராக்ட் சங்கத்தின் உறுப்பினர்கள். அவர்கள் பெரும்பாலும் டாக்டர்கள், பயிற்சியாளர்கள் அல்லது மருத்துவ மாணவர்கள். மேலும் பிபி, சுகர் போன்றவற்றுக்கு துப்புரவு பணியாளர்களை பரிசோதிப்பதில் பெரும் உதவியாக இருந்தனர், என்று அவர் கூறினார்.

மும்பையைச் சேர்ந்த மேலும் 25,000 துப்புரவுப் பணியாளர்களுக்கு இந்தத் திட்டத்தைப் செயல்படுத்த விரும்புவதாகவும், உலகளாவிய மானியத்தைப் பெறவும் ஆலோசித்து வருவதாகவும் எதிர்காலத் திட்டங்கள் குறித்து பல் மருத்துவரான டாக்டர் நிலம் கூறுகிறார். காலக்கெடு பற்றி பேசுகையில், BMC (பிரிஹன் மும்பை முனிசிபல் கார்ப்பரேஷன்) 24 வார்டுகளைக் கொண்டுள்ளது என்றும் இத்திட்டத்தை செயல் படுத்த எளிதாக்கும் வகையில் ஒரு நேரத்தில் ஒரு வார்டில் செயல்படுத்த உள்ளோம்; நாங்கள் ஏற்கனவே இரண்டு வார்டுகளை முடித்துள்ளோம். ஒவ்வொரு வார்டிலும் சுமார் 1,000 தொழிலாளர்கள் இருந்தனர், ஆனால் அனைவரும் சுகாதார பரிசோதனை முகாமுக்கு வருவதில்லை.

அதிர்ஷ்டவசமாக, பயனாளிகள் அனைவரும் அரசு ஊழியர்கள் என்பதால், மகாராஷ்டிரா அரசாங்கத்திடமிருந்து சங்கம் பெரும் ஒத்துழைப்பைக் பெற்றுள்ளது. கடந்த முறை அவர்கள் எங்கள் முகாமுக்கு BMC பள்ளியின் ஒரு பெரிய ஆடிட்டோரியத்தை கொடுத்தார்கள்,'' என்று கூறினார். ■

Rotary PEOPLE OF ACTION

# முக்ரோவில் ஒரு மருத்துவ முகாம்

**கிரண் ஜெஹரா**




அஸ்ஸாமில் உள்ள எல்லைப்புற கிராமான முக்ரோவில் வசிக்கும் 8-வயது சிறுவன் ராம்க்கு இருமல் மற்றும் காய்ச்சல் இருப்பது ஒரு சாதாரண விஷயம். மாதத்திற்கு ஒரு முறை அல்லது இரண்டு மாதத்திற்கு ஒரு முறை காய்ச்சல் வருவது அவனுக்கு மட்டுமல்ல, அந்த கிராமத்தில் உள்ள மக்களுக்கு வழக்கமாக இருந்தது என்கிறார் அவனது தாயார் ஹேமா தேவி. சமீபத்தில் RID 3240க்கு உட்பட்ட ஜோவாய் ரோட்டரி சங்கம் மற்றும் ஆர்சிட் சிட்டி ஷில்லாங் ரோட்டரி சங்கங்கள் இங்கு மருத்துவ முகாம் நடத்திய போது, இந்த கிராமத்தைச் சேர்ந்த பெரும்பாலான குழந்தைகளுக்கு வைட்டமின்-ஈ பற்றாக்குறை இருப்பது குறித்து டாக்டர்கள் அதிர்ச்சி அடைந்தனர். இதன் விளைவாக நோய் எதிர்ப்பு சக்தி குறைந்து குழந்தைகளுக்கு அடிக்கடி இருமல் மற்றும் காய்ச்சல் வர வழிவகுத்தது என்கிறார் ஜோவாய் ரோட்டரி சங்க உறுப்பினரான டாக்டர் ருசிகா லாடோ.

குழந்தைகளுக்கு நான்கு வேளைக்கான வைட்டமின்-ஈ மாத்திரை வழங்கப்பட்டதுடன், 200 பேருக்கு இரத்தத்தில் சர்க்கரை அளவு, நீரிழிவு நோய், இரத்த அழுத்தம் உள்ளதா என முகாமில் மருத்துவப் பரிசோதனை நடத்தப்பட்டது. கர்ப்பிணிப் பெண்களுக்கு ஹீமோகுளோபின் பரிசோதனை உள்ளிட்ட பல்வேறு பரிசோதனைகள் நடத்தப்பட்டன. பின்னர் அவர்களுக்கு இரும்புச்சத்து மற்றும் வைட்டமின் B காம்ளெக்ஸ் மாத்திரைகளும் வழங்கப்பட்டன. மாதவிடாய் சுகாதாரம் மற்றும் உடலியல் சுகாதாரம் மற்றும் சமவிகித உணவு முறை குறித்து டாக்டர்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சி களை நடத்தினர். ரூ.65,000 மதிப் புள்ள மருந்து, மாத்திரைகளும் முகாமில் இலவசமாக வழங்கப் பட்டன.

இதுபோன்ற மருத்துவ முகாம்கள் மூலம் ஒரு குறிப்பிட்ட பகுதி அல்லது கிராமத்தில் உள்ள மக்களிடம் உள்ள ஆரோக்கிய குறை பாடுகள் குறித்த உண்மைநிலையை எங்களால் சேகரிக்க முடிந்தது. மேலும் இந்த குறைபாடுகளுக்கு பயனுள்ள தீர்வுகளை வழங்கும் திட்டங்களை எங்களால் திட்டமிட்டு செயல்படுத்த முடிந்தது என்கிறார் ஆர்சிட் சிட்டி ஷில்லாங் ரோட்டரி சங்கத் தலைவர் தேவேஷ் வாலியா. இந்த ஒருங்கிணைந்த அணுகுமுறைக்கு ஒரு சிறந்த உதாரணத்தை அவர் சுட்டிக் காட்டினார். பெண்களுக்கு மூச்சுத் திணறல் பிரச்னை இருந்ததால் வடகிழக்கில் உள்ள ரோட்டரி சங்கங்கள் அவர்களுக்கு புகையில்லா அடுப்புகளை வழங்கின. அந்த வகையில் நாங்கள் எங்களின் அடுத்த திட்டத்தை அதாவது இங்குள்ள குழந்தைகளிடம் நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்கும் திட்டத்தை செயல்படுத்த முடியும் என்றார் அவர்.

இந்த இரண்டு சங்கங்களும் இப்பகுதியில் உள்ள கிராமங்களில் அடிக்கடி மருத்துவ முகாம்களை நடத்தி வருகின்றன. மேலும் மருத்துவமனைகளில் நவீன வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து மருத்துவப் பணியாளர்களின் சேவைகளை அங்கீகரித்து அவர்களுக்கு விருதுகளும் வழங்கி வருகின்றனர்.■



*மருத்துவ முகாமில் காத்திருக்கும் நோயாளிகள்.*

# சம்பல்புரி புடவையின் மந்திர நெசவு

ஜெய்ஸ்ரீ





நேரம் காலை 5.30, சம்பல்பூருக்கு அருகில் உள்ள ஒரு விசித்திரமான கிராமமான டோபே, அங்கே ஆண்கள், பெண்கள், இளம் குழந்தைகள் மற்றும் வயதானவர்கள் சுறுசுறுப்பாக இயங்கி கொண்டிருக்கின்றனர். மூங்கில் கம்புகளில் கட்டப்பட்ட பருத்தி இழைகளில் மும்முரமாக சாயம் பூசிக் கொண்டிருக்கின்றனர். சில வீடுகளில் நெசவுத் தறிகளின் ஒலியைக் கேட்கலாம். கவர்ச்சியான சம்பல்புரி புடவைகளை தயாரிப்பதில் ஈடுபட்டுள்ள நூற்றுக்கணக்கான கிராமங் களில் இதுவும் ஒன்று-ஒடிசாவில் உள்ள சம்பல்பூர் பழங்குடிப் பகுதியிலிருந்து இந்த புடவை பெயரை பெற்றது, இந்த புடவைகளின் தோற்றம், சம்பல்புரி இக்காட் என்றும் அழைக்கப்படும் பந்தகலா என்ற பழங்கால கம்பத்தில் கட்டி வண்ணம் பூசும் கலையை பிரதிபலிக்கிறது. பர்கர் மாவட்டமும் இக்கலையின் கோட்டையாகும்.

டோபேவில்லுள்ள அனைத்துப் பெண்களும் எண்ணற்ற வடிவமைப்புகள் மற்றும் வண்ணங்களில் சம்பல்புரி புடவைகளை அணிந்துள்ளனர். வேறு எந்த விதமான புடவையையும் அங்கு காணமுடியாது. ‘‘என் மகன் எனக்காக இதை உருவாக்கினான்,’’ என்று ரிங்கி மெஹர் கூறி, அவர் அணிந்திருக்கும் வண்ணமயமான புடவையைக் காட்டுகிறார். அவரது மகன் பிரசாந்த் மெஹர் பெருமையுடன் தன் வேலையான சாயம் பூசுவதை தன் தந்தை மற்றும் தம்பி ராமகண்டா மெஹருடன் தொடர்கிறார்.

### உள்நாட்டு தொழில்

இது மேற்கு ஒடிசாவைச் சேர்ந்த மெஹர் மற்றும் கோலியா பழங்குடியினரால் நிர்வகிக்கப்படும் ஒரு உள்நாட்டுத் தொழிலாகும். கைத்தறியில் நெய்யப்பட்ட பருத்தி, பட்டு அல்லது டஸ்ஸார் பட்டு ஆகியவற்றால் செய்யப்பட்ட சம்பல்புரி புடவைகள், அவற்றின் நேர்த்தியான வேலைப்பாடு, நிறம் மற்றும் வடிவமைப்பு காரணமாக தேசிய மற்றும் சர்வதேச அளவில் பிரசித்தி பெற்றுள்ளன. ரிங்கி, கிராமத்தில் உள்ள மற்ற எல்லாப் பெண்களையும் போலவே, சிவப்பு, பச்சை, கருப்பு, நீலம் மற்றும் மஞ்சள் கலவையான வடிவமைப்பு களையும் வண்ணங்களையும் பரிந்துரைக்கிறார். ‘‘இது பகவான் ஜெகந்நாதருடன் தொடர்புடையது’’ என்று ரிங்கி விளக்குகிறார், பிராந்தியத்தின் பிரதான கடவுளான பூரி ஜெகநாத்தை குறிப்பிடுகிறார். சங்கு, சக்கரம் மற்றும் பூ ஆகியவை மிகவும் பொதுவாக பயன்படுத்தப்படும் வடிவங்கள். கரிம வண்ணங்கள் மட்டுமே இங்கு பயன்படுத்தப்படுகின்றன.

சம்பல்புரி புடவையை நெசவு செய்ய பந்தா எனப்படும் கம்பத்தில் கட்டி வண்ணம் பூசும் தனித்துவமான முறை பயன்படுத்தப்படுகிறது. இந்த செயல்முறையானது நூலைத் தயாரிப்பது, கட்டி, சாயமிடுதல், உலர்த்துதல் மற்றும் இறுதியாக தலைசிறந்த படைப்பை நெசவு செய்தல் ஆகியவை அடங்கும். இந்த செயல்முறையில் அனைத்து குடும்ப உறுப்பினர்களும் ஈடுபட வேண்டும். இந்த கலை தலைமுறை தலைமுறையாக கற்றுக்கொடுக்கப்படுகிறது. ‘‘அவர்கள் தொடர்ந்து பயிற்சி செய்யும் வரை எந்த விதமான கற்பித்தலும் அவர்களுக்கு கலையை முழுமையாக்க உதவாது’’ என்கிறார் ரிங்கி.

தனஞ்சய் மெஹர் (57) கூறும் போது, எனது தந்தை மற்றும் தாத்தாவிடம் இருந்து இந்த நெசவுத் திறனைக் கற்றுக்கொண்டேன். தற்போது, இது ஒரு ஊதியம் தரும் வணிகமாக இல்லை; எனக்கு வேறு வேலை தெரியாததால் இன்னும் இந்த தொழிலில் இருக்கிறேன்.

ஒடியா மொழியில் இருக்கும் அவர்களின் உரையாடலை Rtn சந்தோஷ் ஹோட்டா மொழிபெயர்த்தார், அவர் தனது மனைவி சுனிதாவுடன் சேர்ந்து என்னுடன் கிராமத்திற்கு வந்தார்.

ஒரு சம்பல்புரி புடவையை உருவாக்க எட்டு நாட்கள் ஆகும், சிக்கலான வடிவமைப்பு கொண்டவற்றை தயாரிக்க ஆறு மாதங்கள் வரை ஆகும். சோனேபுரி, சப்தபர் (பசபல்லி), சச்சிபர், உதியான்- தாரா, பஞ்சவடி, பொம்காய், பார்பலி, பாப்தா மற்றும் புடவைகள் பிரபலமாக உள்ளன. ஜிலிமண்டா போன்ற சில கிராமங்கள் சட்டைகள் மற்றும் படுக்கை விரிப்புகள் தயாரிப்பதில் நிபுணத்துவம் பெற்றவை, சோனேபூர் மற்றும் பர்பல்லி பட்டுப் புடவைகளை நெசவு செய்கின்றன. நேர்த்தியான காட்டன் புடவைகளுக்கு ரூ.2,000–7,000 வரையிலும், சம்பல்புரி பட்டு புடவை களுக்கு ரூ.15,000க்கு மேல் விலையும் இருக்கும். உற்பத்தியின் உழைப்பு மற்றும் நேரத்தை எடுத்துக் கொள்ளும் தன்மை அதன் அதிக விலைக்கு காரணமாகும்.





**சவால்கள்**

துரதிர்ஷ்டவசமான விஷயம் என்னவென்றால், கல்வியை விட தொழிலில் தேர்ச்சி பெறுவது முதன்மையாக கருதப்படுகிறது. அதனால் கிராமத்து இளைஞர்களில் பெரும்பாலோர் பள்ளிக்கு செல்வதை இடைநிறுத்துகிறார்கள் அல்லது 12ம் வகுப்போடு நிறுத்துகிறார்கள். பிரசாந்த் 12ம் வகுப்பு வரை படித்துள்ளார், அவரது சகோதரர் 3ம் வகுப்புக்குப் பிறகு பள்ளிக்கு செல்வதை நிறுத்தி விட்டார். நெசவாளர் இளைஞருக்கு மணப்பெண் கிடைப்பது கடினம் என்று ரிங்கி கூறுகிறார். அவரது 37 மற்றும் 34 வயதுடைய இரண்டு மகன்களும் திருமணமாகாதவர்கள். இன்றைய இளம்பெண்கள் இந்த வேலையில் ஈடுபட விரும்புவதில்லை. பெரிய அலுவலகங்களில் தங்கள் கணவர்கள் பணியமர்த்தப்பட வேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள், என்று அவர் வருத்ததுடன் கூறுகிறார்.

டோபேவில் 50 குடும்பங்கள் உள்ளன, அவர்கள் தினமும் விடியற்காலை முதல் சாயங்காலம் வரை வேலை செய்கிறார்கள். நெசவாளர்கள் தங்கள் பொருட்களை சந்தைப்படுத்துவதும், படைப்பு களுக்கு நியாயமான விலை பெறுவதும் சவாலாக உள்ளது என்கிறார் ஹோட்டா. இவர்கள் பெரும்பாலும் இடைத்தரகர்களையே சார்ந்துள்ளனர். மாநிலத்தின் கைத்தறி மற்றும் கைவினைத் துறை நெசவாளர்களை ஆதரிக்கிறது "ஆனால் சில நேரங்களில் அதிகாரிகள் வந்து, எங்கள் கையெழுத்தைப் பெற்று, எங்களுக்கு ஊக்கத்தொகையாக அற்ப தொகையை வழங்கும் நிகழ்வுகளும் உள்ளன'' என்று பிரசாந்த் கூறுகிறார். கூட்டுறவு சங்கங்கள் ஆன்லைன்





மூலம் ஜவுளிகளை விற்பனை செய்து வருவதால், நேரடி விற்பனையில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. கொள்முதல் செய்ய பலர் தற்போது இங்கு வருவதில்லை. முன்னதாக ஜப்பான், அமெரிக்கா மற்றும் சிங்கப்பூரில் இருந்து பார்வை யாளர்கள் வந்தனர் என்கிறார் ரிங்கி.

சம்பல்புரி புடவைகளின் பரவலான நகல் அவர்களின் வாழ்வா தாரத்திற்கு மற்றொரு அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது என்று ஹோட்டா கூறுகிறார். "ஒரே மாதிரியான டிசைன் கொண்ட டூப்ளிகேட் புடவைகள் வெறும் 300 ரூபாய்க்குக் கிடைக்கும்" என்கிறார் அவரது மனைவி சுனிதா.

கோவிட் தொற்றுநோய்க்குப் பிறகு, நெசவாளர்களின் குடும்பங்கள் சொற்ப வருமானத்துடன் இருக்கின்றன. "பல குடும்பங்கள் டீக்கடைகளில் வேலை செய்ய அல்லது ஆட்டோரி க்ஷாக்களை ஓட்டுவதற்காக வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளன," என்கிறார் பிரசாந்த். டோபேவில் சாலையின் இருபுறமும் அமைந் திருக்கும் செங்கல் வீடுகள் ஒருபுறம் செழிப்பைக் காட்டினாலும், மோசமாகப் பராமரிக்கப்படும் கதவுகளும் உடைந்த ஒட்டு கூரை களும் அவர்களின் வாழ்க்கையில் வறுமை எவ்வாறு மெதுவாக புகுகின்றது என்பதை காட்டுகிறது.

### ரோட்டரி ஆதரவு

RC சம்பல்பூர், RID 3261, செயலர் சின்மய் சத்பதி, நெசவாளர் களுக்கு ஆதரவாக இந்த ஆண்டு தனது அறக்கட்டளை வில்லேஜ் கிராஃப்டுடன் தனது சங்கம் இணைந்துள்ளதாக கூறுகிறார். "நாங்கள் அவர்களுக்கு நூல்கள் மற்றும் வண்ணங்கள், குறுகிய கால கடன்கள் மற்றும் அவர்களின் படைப்புகளை ஆன்லைனிலும் ஆஃப்லைனிலும் சந்தைப்படுத்துதல் போன்றவற்றிக்கு உதவுகிறோம். பல ஆண்டுகளாக அவர்கள் ஒரே மாதிரி யான வடிவமைப்பை பயன்படுத்து கின்றனர். இப்போது வளர்ந்து வரும் சந்தையை ஈர்க்கும் வகையில் புதிய வடிவமைப்புகளை உருவாக்க அவர்களை ஊக்குவிக் கின்றோம்.

சம்பல்புரி ஹாட் என்ற இணையத்தளத்தை உருவாக்க சங்கத்திடம் சத்பதி கோரிக்கை விடுத்துள்ளார். அங்கே, நெசவாளர்களின் படைப்புகள் காட்சிப்படுத்தப்படும் மற்றும் வருமானம் நேரடியாக அவர்களைச் சென்றடையும். இந்த நடவடிக்கை, " ஒரு சேலைக்கு நெசவாளர் வெறும் 150–200 ரூபாய் லாபம் பெற 1,000 முதல் 1,500 ரூபாய் வரை பெறும் இடைத்தரகர்களை அகற்ற உதவும். சங்கம் அறக்கட்டளை மூலம் நேரடி சந்தைகளை ஏற்பாடு செய்யும். அரசாங்கமும் கண்காட்சிகளை ஏற்பாடு செய்கிறது "ஆனால் பெரிய கொள்முதல் ஆணை இருக்கும் போது நெசவாளர்களால் ஆட்கள் மற்றும் நிதி பற்றாக்குறையால் அதை செயல்படுத்த முடியவில்லை," என்று அவர் கூறுகிறார். RC சம்பல்பூர் சமூகங்கள் மத்தியில் கல்வியறிவின்மையைப் போக்கவும் திட்டமிட்டுள்ளதாக சங்கத்தலைவர் ரஞ்சித் சிங் ஹூரா கூறுகிறார்.


IIM சம்பல்பூர் சமீபத்தில் சத்பதி மற்றும் நெசவாளரும் விற்பனையாளருமான சங்க உறுப்பினர் சஞ்சய் மெஹர் ஆகியோரின் ஆதரவைப் பெற்று, அதன் வளாகத்தில் வர்த்தகத்தை ஊக்குவிக்கவும், நெசவாளர்களுக்கு டிஜிட்டல் மார்க்கெட்டிங் பற்றிக் கற்பிக்கவும், அவர்களை வாடிக்கை யாளர்களிடம் பண்பாக நடக்க கற்றுக் கொடுக்கவும் வணிக வளர்ப்பு மையம் ஒன்றை நிறுவியுள்ளனர்.■



Rtn *சந்தோஷ் ஹோட்டா மற்றும் அவர் மனைவி சுனிதா சம்பல்பூர் புடவை ஒன்றை பார்வையிடுகின்றனர்.*

# கேரள உணவு வகைகளின்
# சுவையும் மணமும்

ரஷீதா பகத்



*அவியல்*

இந்தியாவின் எந்த பகுதியில் நாம் வாழ்ந்தாலும் ஓணம் பண்டிகையின்போது பாரம்பரிய விருந்துக்காக நாம் காத்திருப்போம். சத்யா (விருந்து) என்பது புழுங்கல் அரிசி சோறுடன் ஏராளமான இதர உணவுகள் பரிமாறப்படும் சைவ உணவாகும். சைவ உணவு இலையில் பரிமாறப்படும். பாரம்பரிய உணவுகள் எனில் சாம்பார், அவியல், காலன், தீயல், தோரன், இஞ்சிப்புளி, புலிசேரி, ஆப்பம், ரசம் மற்றும் பலாப்பழ பாயசம் அடங்கியது. கேரள விருந்து சமையலில் தேங்காய் நிச்சயம் இடம்பெற்றிருக்கும்.

கேரள உணவைப் பற்றி கேரளத்தினர் அல்லதாவர்களில் பெரும் பாலானவர்களுக்கு இது தெரியும். ஒரு சிலருக்கு மட்டுமே தெரியாது. ஆனால், அசைவம் சாப்பிடுபவர்களுக்கு அங்கு தயாரிக்கப்படும் மீன் வகை உணவுகள் மற்றும் கடல்வாழ் உயிரின வகை உணவுகள் என்றாலே நாக்கில் எச்சில் ஊறும். ருசியாக சாப்பிடுவதில் ஆர்வம் உள்ள ஒருவர் கேரளாவுக்குச் சென்றால், அதுவும் படகு வீட்டில் தங்கினால், கடல்வாழ் உயிரின உணவுகள் சந்தைக்கு படகுசவாரி செய்து கறி மீன், இறால் மீன்கள் உள்ளிட்டவற்றை தேர்ந்தெடுத்து படகு வீட்டிலேயே சுவையாக தயாரித்து சாப்பிடாமல் திரும்புவதில்லை.

கேரளத்தில் சைவ உணவு வகைகள் என்று எடுத்துக் கொண்டால் பாகற்காய் பொரியல் (கரேலா பொரியல்) என்றால் அதன் சுவையே தனி. வேம்புநாடு ஏரியில் படகில் அமைதியாகச் செல்லும் போது புதிதாக சமைக்கப்பட்ட உணவை சாப்பிடுவதற்கு முன் ஒரு கோப்பை பீர் சாப்பிட்டால் அதன் சுகமே தனி.

விதம் விதமான கேரள உணவு வகைகள் பற்றி மேலும் அறிந்துகொள்ள பாஜகம்-கேரள பாரம்பரிய உணவுகள் என்னும் சவீதா ராதாகிருஷ்ணன் எழுதிய சிறந்த புத்தகம் உள்ளது.

சிறந்த வடிவமைப்புடன் பல்வேறு தகவல்களுடன் இந்த புத்தகம் வெளி வந்துள்ளது. கேரளத்தின் பாரம்பரிய உணவுகளை நன்கு தொகுத்து வழங்கி யுள்ளார் சவீதா. கேரளத்தின் ஐந்து முக்கிய சமூகத்தினரின் பாரம்பரிய உணவு வகைகள், சமையல் குறிப்புகள் குறித்து சுருக்கமாக விளக்கியுள்ளார். இதில் சிரியன் கிறிஸ்தவர்கள், நாயர்கள், மாப்பிளாஸ், தியாஸ் மற்றும் நம்பூதிரிகள் உள்ளிட்ட சமூகத்தினரின் உணவு வகைகளும் இதில் அடங்கும். இவை தவிர கேரளத்தில் உள்ள அனைத்து சமூகத்தினருக்கும் பொதுவான உணவு வகைகளும் இருக்கின்றன.

### சிரியன் கிறிஸ்தவர்கள்

சிரியன் கிறிஸ்தவர்கள், கல் ஆப்பம், குழல் ஆப்பம் மற்றும் மாட்டு இறைச்சியால் தயாரிக்கப்படும் எறச்சி ஒலயாதி உள்ளிட்ட சுவையான உணவுகளை விரும்பி சாப்பிடுவார்கள். வறுத்த வாத்து அல்லது காட்டுப் பன்றியுடன் மசாலா சேர்க்கப்பட்ட உணவுகள் கிறிஸ்துமஸ் சமயத்தில் உணவாக பரிமாறப்படும். சிரியன் கிறிஸ்துவர்களின் உணவு என்பதே மீன், ஆட்டிறைச்சி, கோழிக்கறி அல்லது மாட்டிறைச்சியுடன் விருந்துபோலவே இருக்கும் என்கிறார் சவீதா. கேரள மக்களின் உணவுக் கலாசாரத்தை அறிந்து கொள்வதற்கும் அவர்கள் பயன்படுத்தும் மசாலாப் பொருள்களைத் தெரிந்துகொள்வதற்கும் நான் ஒருவருடம் கேரள உணவு வகைகளை சமைத்தேன். கேரள உணவுகள் என்னை மிகவும் கவர்ந்தன என்கிறார் சவீதா.

### மாப்பிளாஸ்/மோப்ளாஸ்

மோப்ளாஸ் என்று அழைக்கப்படும் மாப்பிளாஸ் தயாரிக்கும் பிரியாணிகளில் அரேபியர்களின் தாக்கம் தெரிகிறது. அராபியர்களின் பாரம்பரிய உணவான




ஆசிரியர்:
சபீதா ராதாகிருஷ்ணன்

வெளியீட்டாளர்:
ரோலி புக்ஸ்

பக்கங்கள்:
200

விலை:
ரூ.1,495



# மாம்பழ புளிச்சேரி

*பழுத்த மாம்பழம், தயிர், தேங்காய் நிறைந்த கிரேவி*
*பழுத்த மாம்பழம், தயிர் சேர்த்து தயாரிக்கப்படும் கறி. மாம்பழத்தின் இனிப்பு சுவையும், தயிரின் புளிப்பு சுவையும் சேர்ந்து ஒரு விநோதமான சுவையைத் தரும். மேலும் காஷ்மீர் மிளகாய்த்தூள் சிறிது சேர்ந்தால் அதன் சுவையே தனிதான்!*

**தேவையான பொருள்கள்:**

- 2 பெரிய மாம்பழம் அல்லது 4 சிறிய மாம்பழங்கள். (குறிப்பை பார்க்கவும்)
- 2 பச்சை மிளகாய்- நீளவாக்கில் கீறிக்கொள்ளவும்.
- ஒரு தேக்கரண்டி மஞ்சத்தூள்.
- ஒரு தேக்கரண்டி காஷ்மீர் மிளகாய்த்தூள்.
- ஒரு தேக்கரண்டி உப்பு அல்லது தேவையான அளவு.
- ஒரு கப் (240 கிராம்) புளித்த தயிர்.
- அரை கப் (40 கிராம்) துருவிய தேங்காய்.
- ஒரு தேக்கரண்டி சீரகம்.
- ஒரு சிறிய கட்டி வெல்லம்.


**பதப்படுத்துதல்**

- ஒரு டேபிள் ஸ்பூன் (15 மில்லி) தேங்காய் எண்ணெய் அல்லது உங்களுக்கு விருப்பமான எண்ணெய்.
- ஒரு தேக்கரண்டி கடுகு.
- அரை தேக்கரண்டி வெந்தயம்.
- 1 காய்ந்த சிவப்பு மிளகாய்.
- ஒரு கொத்து கருவேப்பிலை.

**செய்முறை:**

- மாம்பழத்தை சாறு வரும் வகையில் பிழியவும்.
- அதை ஒரு கடாயில் போட்டு பச்சை மிளகாய், மஞ்சள், மிளகாய்த்தூள், தேவையான அளவு உப்பு சேர்த்து கலக்கவும்.
- தேவைப்படும் அளவு தண்ணீர் சேர்க்கவும். மிதமான சூட்டில் கொதிக்க விடவும்.
- மாம்பழம் நன்கு கொதித்து மென்மையாகும் வரை அதை கிளறிவிட வேண்டும்.
- மிக்ஸி அல்லது அம்மியில் தயிர், தேங்காய் மற்றும் சீரகம் இவற்றை விழுதாக அரைத்துக் கொள்ளவும்.
- பின்னர் மாம்பழ கறியுடன் இந்த விழுதைச் சேர்த்து கிளறி விடவும். குழம்பு பதத்தில் வரும் அளவு தண்ணீர் சேர்க்கவும்.
- கறியின் இனிப்பு மற்றும் புளிப்புச்சுவைக்கு தகுந்தவாறு வெல்லம் சேர்த்து சிறிது கொதிக்கவிடவும்.
- பதத்திற்கு கொண்டுவர ஒரு சிறிய வாணலியில் மிதமான சூட்டில் தேங்காய் எண்ணெய்யை சூடாக்கவும். அத்துடன் கடுகு மற்றும் வெந்தயம் சேர்த்து வெடிக்கவிடவும்.
- பின் காய்ந்த மிளகாய் மற்றும் கருவேப்பிலையை அதில் போட்டு தாளிக்கவும்.
- பின் தாளிப்பு செய்தவற்றை. மாம்பழ கறி மேல் ஊற்றவும்.

**குறிப்பு:** சிறிய மாம்பழம் என்றால் அதன் தோலை எடுத்துவிட்டு சமைக்கவும். பெரிய மாம்பழம் என்றால் அதை சிறு துண்டுகளாக வெட்டிக் கொள்ளவும். நீங்கள் பயன்படுத்தும் மாங்காயின் சுவையைப் பொருத்து கறியின் சுவையும் மணமும் இருக்கும். கேரளத்தில் நாட்டு மாங்காயைத் தான் இதற்கு பயன்படுத்துவார்கள்.



*கன்னூர் சிக்கன் பிரியாணி*



ஹரீஸ்ஸை அடிப்படையாகக் கொண்டு கோதுமை, இறைச்சி மற்றும் உப்பு கொண்டு மாப்பிளா உணவு தயாரிக்கப்படுகிறது. ஏழாம் அல்லது எட்டாவது நூற்றாண்டுகளில் கேரளத்துக்கு வந்த அராபிய வர்த்தகர்கள் மூலம் இந்த உணவு வகை அறிமுகமாகியிருக்கலாம் என்று கருதப்படுகிறது. அவர்கள் கேரளப் பெண்களை மணந்து கொண்டதால் மாப்பிளா உணவில் அரேபியர்களின் தாக்கம் காணப்படுகிறது. மீன் பதிரி அரிசி சோறுகளுக்கு இடையில் வைக்கப்பட்டு வேகவைக்கப்பட்ட மீன் உணவு. அவர்களின் உணவில் அசாதாரணமான ஆனால், பிரபலமான ஒரு உணவாகும்.

**தியாக்கள்**

தியாக்கள் ஒரிஜனலாக கள் இறக்கும் சமூகத்தினர். கேரளத்தின் பிரபலமான ஆப்பம் மற்றும் சுண்டவைத்த குழம்பு இவர்களின் காலை உணவாகும். அசைவ உணவுகளை ஆப்பத்துடன் சேர்த்து சாப்பிடுவார்கள். மீன், தேங்காய் பால்,




மாங்காயுடன் சமைத்த அல்லது தேங்காய்ப்பாலுடன் சமைத்த மட்டன் இவர்களுக்கு பிடித்தமான உணவு.

**நாயர்கள்**

நாயர்கள் கேரளத்தில் போர் வீரர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களின் அசைவ உணவு சமையல் மிகவும் பிரபலமானது. அவர்கள் காலை உணவாக வெள்ளை ஆப்பம் அல்லது மூங்கிலில் வேகவைத்த புட்டு இவற்றுடன் இனிப்பான பால் சேர்த்து சாப்பிடுவார்கள். மேலும் வாழைப்பழம், முருங்கை, பீன்ஸ், முந்திரி இவைகளை தேங்காய்ப்பால், புளிப்பான தயிர் கலந்து சமைத்து சாப்பிடுவார்கள். தேங்காய் எண்ணெய் இவர்களின் சமையலில் கண்டிப்பாக இடம்பெறும்.

**நம்பூதிரிகள்**

நம்பூதிரிகள் கேரளத்தைச் சேர்ந்த பிராமணர்கள். இவர்கள் சைவ உணவை மட்டுமே உண்பார்கள். இட்லி, தோசை



*இறால் மீன் முருங்கைக்காய் குழம்பு*



# மீன் பொளிச்சது

*வாழை இலையில் சுற்றப்பட்ட மீன்*

*கேரள சமையலின் உன்னதமான உணவில் ஒன்று. மீனை தேங்காய் எண்ணெய்யில் வறுத்து சமைத்து பின்னர் அதை வாழை இலையில் சுற்றி ஆவியில் வேகவைப்பார்கள்.*

**தேவையான பொருள்கள்:**

- 250 கிராம் முத்து புள்ளி மீன், வாவல் மீன் அல்லது வஞ்சிரம் மீன் துண்டுகள்.
- ஒரு தேக்கரண்டி எலுமிச்சை சாறு.
- ஒரு தேக்கரண்டி உப்பு அல்லது தேவையான அளவு.
- ஒரு தேக்கரண்டி சிவப்பு மிளகாய்த்தூள்.
- அரை தேக்கரண்டி மஞ்சத்தூள்.
- ஒரு தேக்கரண்டி மிளகுத்தூள்.
- ஒரு தேக்கரண்டி மல்லித்தூள்.
- 3 அல்லது 4 தேக்கரண்டி (45 முதல் 60 மில்லி) தேங்காய் எண்ணெய் அல்லது நீங்கள் விரும்பும் எண்ணெய்.
- சின்ன வெங்காயம் 10.
- 3 பச்சை மிளகாய் நீளவாக்கில் கீறப்பட்டது.
- ஒரு தேக்கரண்டி புதிதாக, பொடியாக நறுக்கப்பட்ட இஞ்சி.
- ஒரு தேக்கரண்டி பொடியாக நறுக்கப்பட்ட பூண்டு.
- ஒரு கொத்து கருவேப்பிலை.
- தேவையான அளவு உப்பு.
- பொடியாக நறுக்கப்பட்ட ஒரு தக்காளி.
- அரை கப் (120 மில்லி) தேங்காய் பால்.
- அரை தேக்கரண்டி எலுமிச்சை சாறு.
- கழுவி, உலர வைக்கப்பட்ட வாழை இலை 1.

**செய்முறை:**

கறி மீன் அல்லது வாவல் மீனாக இருந்தால் அதை மூன்று இடங்களில் அரை அங்குல ஆழத்துக்கு வெட்டவும். ஒரு கிண்ணத்தில் எலுமிச்சை சாறு, உப்பு, மிளகாய்த்தூள் மற்றும் மஞ்சத்தூளை ஒன்றாக சேர்த்து கலக்கவும். பின் மீன் துண்டுகள் மீது அவற்றை தடவி ஒரு மணி நேரம் குளிர்பதனப் பெட்டியில் வைக்கவும்.

**மசாலா பேஸ்ட் செய்முறை:** ஒரு சிறிய கிண்ணத்தில் மிளகாய்த்தூள், மஞ்சத்தூள், மிளகுத்தூள், மல்லித்தூள் இவற்றை தேவையான அளவு எடுத்துக் கொண்டு சிறிது தண்ணீர் ஊற்றி பேஸ்ட் போல குழைத்துக் கொள்ளவும்.

- ஒரு வாணலியை அடுப்பில் மிதமான சூட்டில் வைத்து எண்ணெய் ஊற்றி சூடாக்கவும். அதில் மீன் துண்டு களைப் போட்டு இரண்டு பக்கமும் திருப்பிப் போட்டு ஐந்து நிமிடங்கள் வறுக்கவும். பின்னர் வாணலியிருந்து அவற்றை எடுத்து தனியே வைக்கவும்.
- வாணலியில் மீதமுள்ள எண்ணெய்யில் வெங்காயம், பச்சை மிளகாய், இஞ்சி. பூண்டு, கருவேப்பிலை ஆகியவற்றை பொன்னிறமாக வறுக்கவும்.
- பின் மசலா பொருள்கள் அரைத்த பேஸ்ட் மற்றும் தேவையான உப்பு சேர்ந்து கிளறவும்.
- பொடியாக நறுக்கிய தக்காளியைப் போட்டு வதக்கவும்.
- தேங்காய் பால் ஊற்றி அது கெட்டியான பதத்துக்கு வரும் வரை சுமார் 5 நிமிடங்கள் கிளறவும்.
- பின் அதன் மேல் எலுமிச்சை சாறை ஊற்றவும்.
- வாழை இலையில் பாதி மசாலா பேஸ்டை பரப்பி அதன் மேல் மீன்துண்டுகளை வைக்கவும். மீதமுள்ள மசாலா பேஸ்டை மீன் துண்டுகள் மீது தடவுங்கள். பின்னர் வாழை இலையை மடித்து பார்சல் செய்யவும். மிகவும் பாதுகாப்பாக அதை கட்டவும். வாழை இலை பார்சல் திறந்து கொள்ளாமல் இருக்க அலுமினிய தாளிலும் (ஃபோயில்) சுற்றலாம்.
- ஒரு வாணலி அல்லது தோசைக்கல்லில் (தவா) மிதமான சூட்டில் வாழை இலை மீன் பார்சலை வைத்து இரண்டு பக்கமும் 10 நிமிடங்கள் சமைக்கவும். நீங்கள் மைக்ரோவேவ் அடுப்பிலும் 3 நிமிடங்கள் மிதமாக சூடாக்கலாம். ஆனால், அலுமினியத் தாளை பயன்படுத்தக்கூடாது. தவாவிலிருந்து பார்சலை எடுத்து வாழை இலையை எடுத்துவிட்டு அப்படியே சூடாக பரிமாறலாம்.



நெய் பத்திரி

அல்லது புட்டு இவர்களின் காலை உணவாகும். அரிசி சோறுடன், கூட்டு, காலன் மற்றும் ஓலன் கலந்து மதிய உணவு சாப்பிடுவார்கள். சமையலில் பூண்டு சேர்க்க மாட்டார்கள். அவியல், மாம்பழ பச்சடி, தயிர் கலந்து வேகவைக்கப்பட்ட சாலட் இவர்களின் ஸ்பெஷாலிடி. கோடை காலத்தில் குளிர்ச்சிக்காக இவற்றை விரும்பி சாப்பிடுவார்கள்.

**கிளாஸிக் சமையல்**

கேரளத்தில் பல்வேறு சமூகத்தினர் பல்வேறு உணவு வகைகளை சமைத்து சாப்பிட்டாலும், அவர்களின் சமையலில் நிச்சயம் தேங்காய், தேங்காய் எண்ணெய் மற்றும் புளி இடம்பெறும் என்கிறார் நூலாசிரியர் சவீதா. கிளாஸிக் பேவரைட்ஸ் என்னும் இந்த புத்தகத்தில் கேரள மக்களின் சிறப்பான சமையலில் பொதுவான என்ன என்ன பொருள்கள் பயன்படுத்தப்படும் என்பது பற்றி தனி அத்தியாயத்தில் விளக்கிக் கூறப்பட்டுள்ளது. மரவள்ளிக் கிழங்கு, பலாப்பழம் மற்றும் பிரபலமான கறி மீன் இவை கேரள சமையலில் பயன்படுத்தப்படும் பொருள்களில் அடங்கும்.

இந்தப் பகுதியில் கேரளர்கள் அல்லாதவர் தயாரிக்கும் ஆப்பம், கல் ஆப்பம் மற்றும் பச்சைக் கோழி பிரியாணி பற்றிய சமையல் குறிப்புகளும் இடம் பெற்றுள்ளன.

வடிவமைப்பு:
S கிருஷ்ணப்ரதீஷ்

---

Rotary
PEOPLE OF ACTION

# தார்வாடில் 90 ஊனமுற்ற குழந்தைகளுக்குச் சக்கர நாற்காலிகள்

## ரோட்டரி செய்திக் குழு



ரோட்டரி இந்தியா மனிதத்தன்மை அறக்கட்டளை (RIHF) ஆதரவுடன், DG வெங்கடேஷ் தேஷ்பாண்டெ, தார்வாட் தொகுதிக் கல்வி அலுவலர் கிரீஷ் படகி முன்னிலையில் ஊனமுற்ற குழந்தைகளுடைய தாய்மார்களுக்கு 90 சக்கர நாற்காலிகளை வழங்கியது ரோட்டரி ஹூப்ளி தார்வாட் செயல் குழு, RID 3170.

இந்த நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்பாளர் PDG கணேஷ் பட். ஹூப்ளி, தார்வாடில் உள்ள 16 ரோட்டரி சங்கங்கள் சக்கர நாற்காலிகளைக் கொல்கத்தாவிலிருந்து அனுப்பும் செலவை ஏற்றுக்கொண்டன. சக்கர நாற்காலிகளை வழங்கும் விழாவில் AGகள் ஈஹா ரேணுகா சலுன்கெ, கிரீஷ் நல்வாடி, அப்துல் சாதிக், அசோக் படீல், கிரீஷ் ஹம்பிஹோலி, சங்கத் தலைவர்கள், செயலாளர்கள் பங்கேற்றார்கள்.■

# RC கொச்சி ஈஸ்டின் 50 ஆண்டுகளைக் குறிக்க ஒரு ஆதரவு சிகிச்சை மையம்

V முத்துகுமரன்

RC கொச்சின் ஈஸ்ட், RID 3201, அதன் பொன்விழா ஆண்டைக் குறிக்கும் வகையில், எர்ணாகுளத்தில் உள்ள இந்திரா காந்தி கூட்டுறவு மருத்துவமனையில் ரூ.50 லட்சம் செலவில் புற்றுநோயியல் வலி மற்றும் ஆதரவு சிகிச்சை மையத்தை அமைக்கவுள்ளது. முத்தூட் ஃபைனான்ஸ் நிறுவனத்தின் CSR அறக்கட்டளை இந்த மருத்துவ மையத்திற்கு முக்கிய நன்கொடை வழங்கியுள்ளது.

இந்திரா காந்தி மருத்துவமனையில் உள்ள நோயாளிகளுக்கு ஒவ்வொரு மாதமும் ரூ.20,000 நன்கொடை அளிக்கும் சங்கத்தின் திட்டத்திற்கு புற்றுநோயியல் துறையின் தலைவர் Dr V P கங்காதரன் ஒப்புதல் அளித்துள்ளார். நோயாளிகளின் மருத்துவ செலவுக்கு முழு மானியம் வழங்கப்படுகிறது. ப்ராஜெக்ட் கெல்கமோ, இரண்டு வருட திட்டம், ஏழை குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்கு காது கேட்கும் கருவிகளை வழங்குகிறது. செவித் திறன் குறைபாடுள்ளவர்களுக்கான சிறப்புப் பள்ளிகளை நாங்கள் கண்டறிந்து, மேலும் அவர்களது குடும்பங்களின் நிதித் திறனை மதிப்பீடு செய்துள்ளோம், என்று சங்கத்தின் செயலர் ஜெய சுப்ரமணியன் கூறினார்.

செவித்திறன் குறைபாடுள்ள குழந்தைகளின் பெற்றோருக்கு அவர்களின் குழந்தைகளுக்கு சரியான ஒலி சாதனங்கள் மற்றும் பிற ஆதரவுகள் வழங்கப்பட வேண்டும் என்று சங்கம் விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது மேலும் அவர்கள் சிறந்த வாழ்க்கையை வழிநடத்த உதவுகிறது.

முண்டம்வெளியில் உள்ள அகோஸ்டினோ விசினியின் சிறப்புப் பள்ளி மற்றும் மூவாட்டுப்புழா அசிசி காதுகேளாதோர் பள்ளி ஆகியவற்றில் சுமார் 165 மாணவர்கள் சங்கத்தில்

*முன்னாள் DRFC ஜெயசங்கர் ராகவா ஒரு பெண்ணிற்கு காது கேட்கும் கருவி வழங்குகிறார். உடன் AG சுப்ரமணியன் சீதாராமன் மற்றும் Dr குரியகோஸ் ஆன்டனி ஆகியோரும் உள்ளனர்.*



இருந்து காது கேட்கும் கருவிகளைப் பெற்றுள்ளனர். இத்திட்டம் நெக்ஸ்ட் எஜுக்கேஷன்னின் CSR பிரிவால் நிதியளிக்கப்பட்டுள்ளது. ப்ராஜெக்ட் கெல்கமோவின் தாக்கத்தை உணர்ந்து, சங்கம் அதன் உலகளாவிய கூட்டாளியான RC ரிபேராவ் பிரிட்டோ-ஜார்டிம் பாலிஸ்டா, RID 4540, பிரேசில் மூலம் 30,000 மதிப்புள்ள உலகளாவிய மானியத்திற்கு விண்ணப்பித்தது. திட்டத்தின் மொத்த செலவு சுமார் 75 லட்சம் ரூபாய் ஆகும்'' என்று ஜெயா கூறினார். 2017 முதல், 500 குழந்தைகளுக்கு காது கேட்கும் கருவிகள் வழங்கப்பட்டன. "அக்டோபரில் நிதி திரட்டுவதற்காக 'கொச்சி அங்காடி' என்ற இரண்டு நாள் பழைய பொருள் சந்தை நடத்தப்பட்டது, மேலும் ப்ராஜெக்ட் கெல்கமோவிற்கு $30,000 மதிப்புள்ள இரண்டாவது GGயும் விண்ணப்பித்தது'' என்று சங்கத்தலைவர் அருண் ரெட்டி கூறினார்.



*முன்னாள் சங்கத்தலைவர் குரியகோஸ் ஆன்டனி மற்றும் சங்கத்தினர் புற்றுநோயியல் வலி மற்றும் ஆதரவு சிகிச்சை மைய திறப்பு விழாவில். சங்கத் தலைவர் அருண் ரெட்டியும் (இடமிருந்து 2வது) உள்ளார்.*

### புகழ்பெற்ற தசாப்தங்கள்

ஜூன் 1972ல், கொச்சியில் மூன்றாவது பழமையான சங்கமாக 14 உறுப்பினர்களுடன் RC கொச்சின் ஈஸ்ட் உருவாக்கப் பட்டது. ஓய்வு பெற்ற கேப்டன் P K அலெக்சாண்டர் மற்றும் Dr தம்பி ஆகியோர் முறையே பட்டயத் தலைவர் மற்றும் செயலாளராக பதவியேற்றனர். இரண்டு ரோட்டரி யன்களும் RC கொச்சினில் இருந்து புதிய சங்கத்திற்கு அனுப்பப்பட்டனர்.

மேலும் கல்வி மற்றும் வர்த்தகம் செய்யும் நோக்கத்துடன், பர்மிங்காமில் நடந்த சர்வ தேச ரோட்டரி மாநாட்டில் சந்தித்த கனடா மற்றும் அமெரிக்காவிலிருந்து வந்திருந்த ரோட்டேரியன்களின் குழுவை சங்க உறுப்பினர்கள் ஈடுபடுத்தினர். வர்த்தக பள்ளி தொடங்குவதற்காக, RC ஹன்ட்ஸ்வில், RID 7010, கனடாவிடமிருந்து ரூ.1.75 லட்சம் மானியம் பெறப்பட்டது. "எங்கள் சங்கம் RC கொச்சின் ஈஸ்ட் மூலம் நிலம் வழங்கப்பட வேண்டும் என்று நிபந்தனை விதிக்கப்பட்டது. Rtn K வர்கீஸ் தனது மறைந்த தந்தை C K வர்கீஸின் நினைவாக 20 சென்ட் நிலத்தை நன்கொடையாக வழங்கினார்,'' என்று ஜெயா நினைவு கூர்ந்தார். 1982ல் வர்த்தகப்பள்ளி தொடங்கப்பட்டதைத் தொடர்ந்து, 30 பள்ளி இடைநிறுத்தப்பட்ட மாணவர்களுக்கு வயர்மேன் பாடத்தில் பயிற்சி அளிக்கப்பட்டது, இது கேரள மின்சார வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்டது.

சங்கம் அதன் சொந்த ரோட்டரி கூடத்தை கொண்டுள்ளது, அங்கு வாராந்திர கூட்டங்கள் மற்றும் பிற நிகழ்வுகள் நடத்தப்படுகின்றன. அதன் RCC அவுட்ரீச்சின் ஒரு பகுதியாக, சங்கம் கொச்சிக்கு அருகிலுள்ள நொச்சிமா கிராமத்தை தத்தெடுத்து, அங்கே மருத்துவ முகாம்களை நடத்தி, பல தசாப்தங்களாக பல நிலையான திட்டங்களின் மூலம் அந்த சமூகத்திற்கு சேவை செய்து வருகிறது. தொடர்ச்சியான முயற்சி களின் மூலம், நொச்சிமாவில் கழிப்பறை மற்றும் பிற சுகாதார வசதிகள் இல்லாத கீழ்நிலைப் பள்ளி, நவீன வசதிகளுடன் மின்னும் உயர்நிலைப் பள்ளியாக மாற்றப்பட்டது.

அதன் வெள்ளி விழா ஆண்டில் (1996–97), சங்கம் மகிளா சமாஜம் நூலகத்தையும், பேருந்து நிறுத்துமிடத்தையும் அமைத்தது. இது அந்த கிராமத்திற்கு மிகப்பெரிய மறுச்சீரமைப்பை கொடுத்தது. "அப்போதைய RCC தலைவரானஅமரர் பிரான்சிஸ் செய்த பணியால், நொச்சிமாவில் எங்களுக்கு நன்மதிப்பைப் பெற்றுத்தந்தது மற்றும் எங்கள் பொது தோற்றத்தை மேம்படுத்தியது'' என்று ஜெயா கூறினார்.

கடந்த ஐந்து தசாப்தங்களாக, சங்கம் இரண்டு ரோட்ராக்ட் சங்கங்கள், நான்கு இன்டராக்ட் சங்கங்கள் மற்றும் நான்கு ரோட்டரி சங்கங்களை RID 3201ல் பட்டயப்படுத்துவதில் முக்கிய பங்கு வகித்துள்ளது.

அமரர் PDG G விஸ்வநாதன் (2010–11), சங்க உறுப்பினர், அவரது பதவிக்காலத்தில் ஒரு எண்ட் போலியோ ரோட்ஷோவை நடத்தினார், அதற்காக அவர் இன்றும் நினைவுகூறப்படுகிறார். உறுப்பு தானம் அவருக்கு மிகவும் பிடித்த திட்டங்களில் ஒன்றாகும், மேலும் அவர் இறந்த பிறகு, அவரது உறுப்புகள் மாற்று அறுவை சிகிச்சைக்காக தானம் செய்யப்பட்டன.■

# ரோட்டரி ஆளுநர்



## ஜீதேந்திர அனேஜா

மருத்துவ உபகரணங்கள்,
RC பெங்களூர் ஜங்ஷன், RID 3190

### ஏரி புனரமைப்பு அவரது முன்னுரிமை

165 சங்கங்களில் 6,900 ரோட்டேரியன்களுடன் இருக்க, ஜீதேந்திர அனேஜா ''20 சதவீத உறுப்பினர் வளர்ச்சியை இலக்காகக் கொண்டுள்ளார், இதன் மூலம் உறுப்பினர்களின் எண்ணிக்கை 8,500 ஆக உயர்த்த திட்டமிட்டுள்ளார்.'' அவர் தனது பதவிக்காலத்தில் 25 புதிய சங்கங்களை பட்டயப்படுத்த விரும்புகிறார். தற்போதுள்ள 210 ரோட்ராக்ட் சங்கங்களுடன் 50 புதிய சங்கங்களைச் சேர்க்க அவர் விரும்புகிறார், மேலும் ''எங்கள் 10,000 ரோட்டராக்டர்களின் எண்ணிக்கையை தக்கவைத்து கொள்வதில் நான் மகிழ்ச்சியடைவேன்.'' என்கிறார்.

சுற்றுச்சூழல் பாதுகாப்பின் ஒரு பகுதியான ஏரி புனரமைப்பு அவரது முக்கிய திட்டப்பணிகளில் ஒன்றாகும். ஹோஸ்கோட்டே தாலுகாவில் உள்ள கோணனகுண்டே ஏரி புனரமைப்பு செய்யப்படும் (GG: ரூ.41 லட்சம்), ப்ராஜெக்ட் ஆரோக்யா, 500 மருத்துவ முகாம்கள் மூலம் இரண்டு லட்சம் பேர் பயனடைவர். CSR நிதி மற்றும் உறுப்பினர் நன்கொடைகளுடன் 300 ஹாப்பி பள்ளிகளை சங்கங்கள் நடத்துகின்றன. அவர் 2001ல் ரோட்டரி பெங்களூர் சவுத் பரேடில் சேர்ந்தார், பின்னர் 2011ல் தனது சொந்த சங்கத்தின் பட்டய உறுப்பினரானார். அவரின் TRFக்கு வழங்கும் இலக்கு 1.5 மில்லியன். "RID 3190ஐ இந்தியாவில் சிறப்பாக நிர்வகிக்கப்படும் ரோட்டரி மாவட்டங்களில் ஒன்றாக மாற்றுவதே எனது இலக்கு'' என்று அவர் மேலும் கூறினார்.■



## பவன் அகர்வால்

மின் பொறியாளர், RC காஷிபூர், RID 3110

### GG, CSR திட்டங்களில் கவனம்

ரோட்டேரியன்கள் சமூகத்தின் முன்னேற்றத்திற்காக நிதி ரீதியாக பங்களிக்க வல்லவர்கள். ஆனால் வளர்ச்சிக்காக சில பெரிய திட்டங்களைச் செய்ய நாம் நம் வளங்களைச் ஒன்று சேர்க்க வேண்டும்'' என்கிறார் பவன் அகர்வால். ஜூன் இறுதிக்குள் மாவட்டத்தில் 158ஆக உயர்த்தி, 325 புதிய உறுப்பினர்களை சேர்க்க விரும்புகிறார். இதுவரை 20 புதிய இன்டராக்ட் சங்கங்களைச் சேர்த்துள்ளேன். ரோட்டராக்டர்களின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்கி 1,200 ஆக்க விரும்புகிறோன்.

கல்வி மற்றும் சுகாதாரம் ஆகிய துறைகளில் 440,000 மதிப்புள்ள ஆறு CSR திட்டங்களுக்கு RISAO ஒப்புதல் அளித்துள்ளது. "$400,000 மதிப்புள்ள 10 GG திட்டங்களில் ஐந்து திட்டங்கள் TRFக்கு சமர்ப்பிக்கப்பட்டன,'' என்று அவர் கூறுகிறார். இதுவரை, அவர் TRFக்காக $450,000 இலக்குக்கு எதிராக $500,000 வசூலித்துள்ளார், "இப்போது இந்த ரோட்டரி ஆண்டின் இறுதியில் $1 மில்லியனை எட்டுவதை இலக்காகக் கொண்டுள்ளோம்.'' 1997 முதல் ரோட்டேரியனாக இருக்கும் அகர்வால் GG, CSR திட்டங்கள் மற்றும் அறக்கட்டளை இலக்குகளை அடைவதற்கு முக்கியத்துவம் அளித்து வருவதாக கூறுகிறார்.■

# களுடன் சந்திப்பு

V முத்துகுமரன்





## லலித் கண்ணா

பம்ப் ஏற்றுமதியாளர்
RC டெல்லி நார்த், RID 3012

### டெல்லியில் ஒரு புதிய மனநல மையம்

ரோட்டரி என்பது ஏழைகளுக்கு சேவை செய்வதற்கான ஒரு தளம் மட்டுமல்ல, சிறந்த உலகத்தை உருவாக்க ஒத்த எண்ணம் கொண்ட நிபுணர்களுடன் இணையும் சிறந்த வாய்ப்பையும் வழங்குகிறது என லலித் கண்ணா கூறுகிறார். அவர் TRFக்கு தனிப்பட்ட முறையில் $75,000 பங்களித்துள்ளார். அவர் தனது மாவட்டத்தில் உள்ள 150 சங்கங்களில், மேலும் எட்டு சங்கங்களைச் சேர்க்க விரும்புகிறார்; மேலும் உறுப்பினர் எண்ணிக்கையை 4,000க்கும் அதிகமாக உயரும். கண்ணா 300 புதிய ரோட்டராக்டர்களை சேர்க்க விரும்புகிறார்.

மனநோய்கள், மனச்சோர்வு மற்றும் மன அழுத்தத்திற்கு சிகிச்சை அளிப்பதற்காக உயர் தொழில்நுட்ப இயந்திரங்கள், நான்கு மருத்துவர்கள் மற்றும் 25 பணியாளர்களுடன் மனநல சிகிச்சை மையம் (GG: $150,000) அமைக்கப்படும். $250,000 மதிப்புள்ள GG மூலம் இரண்டு டயாலிசிஸ் மையங்கள் திறக்கப்படும். CSR மானியங்கள் மற்றும் சங்க பங்களிப்புகள் ($230,000) ஆகியவற்றின் மூலம், அரசுப் பள்ளிகளில் கணிப்பொறி பலகை விநியோகிக்கப்படும். இந்த ஆண்டு GG, CSR நிதி மற்றும் சங்க நன்கொடைகள் மூலம் ரூ.20 கோடி மதிப்பிலான திட்டங்களைச் செய்து வருகிறோம்.

அவரது TRF இலக்கு $2 மில்லியன் ஆகும். கண்ணா 1991ல் ரோட்டரியில் சேர்ந்தார், முன்னாள் இன்னர் வீல் 301 தலைவரான அவரது மனைவி நீலு அவரை ஆதரிக்கிறார்.■

## வெங்கடேஷ் H தேஷ்பாண்டே

வீடு கட்டுபவர், RC பெல்காம் சவுத், RID 3170

### பிறந்த குழந்தைகளுக்கான ICU

1990ல் அவர் இணைந்த தனது ரோட்டரி பயணத்தை நினைவு கூர்ந்த வெங்கடேஷ் தேஷ்பாண்டே, என் வாழ்க்கை ஒரு பெரிய மாற்றத்திற்கு உட்பட்டுள்ளது. நான் பல சேவைத் திட்டங்களைப் செயல்படுத்தி இருக்கிறேன், என்றார். சங்கங்கள் எண்ணிக்கையை 150 ஆக உயர்த்த விரும்புகிறார். 100 ரோட்ராக்ட் சங்கங்களில் 60 மட்டுமே செயல்படுகின்றன. மேலும் இந்த ஆண்டு 10 சங்கங்களை செயல்பாட்டிற்கு கொண்டு வந்தால் நான் மகிழ்ச்சியடைவேன். ரோட்டராக்டர் எண்ணிக்கையை 1,200 ஆக உயர்த்த உள்ளார்.

$40,000 மதிப்புள்ள GG மூலம் ரத்னகிரியில் அரசு மருத்துவமனையில் பிறந்த குழந்தைகளுக்கான ICU அமைக்கப்படும். ஐந்து ஹாப்பி பள்ளிகள் GGக்கள் மற்றும் மாவட்ட மானியங்கள் மூலம் பல்வேறு நிலைகளில் செயல்படுத்தப்படுகின்றன; GG மற்றும் சங்க பங்களிப்புகள் மூலம் 20 டயாலிசிஸ் இயந்திரங்கள் தாலுக்கா/அரசு மருத்துவமனைகளில் நிறுவப்படும். மாவட்டம் முழுவதும் GGக்கள் (ரூ.35–40 லட்சம்) மூலம் ஐந்து தடுப்பணைகள் கட்டப்படுகின்றன. TRFக்காக $1 மில்லியனுக்கு மேல் வசூலிக்க திட்டமிட்டுள்ளார்.■

வடிவமைப்பு: N கிருஷ்ணமூர்த்தி

# சங்கங்களின் மக்கள் நல திட்டங்கள்

ரோட்டரி செய்திக்குழு

### ஒரு கிராமத்திற்கு உதவி



சங்கத்தினர் தையல் இயந்திரம் வழங்கும் விழாவில்.

RC சிதம்பரம் சென்ட்ரல், RID 2981, சங்கத்தின் தத்தெடுக்கப்பட்ட கிராமமான மேலத்திருகழிபாளையத்தில் மூன்று தையல் இயந்திரங்கள், நான்கு ஆடுகள் மற்றும் மூன்று மாணவர்களுக்கு கல்வி உதவி ஆகியவற்றை வழங்கியது. கிராமத்தில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. இத்திட்டச் செலவு ரூ.90,000.■

### RID 3182க்கு ஆதரவு



RC அம்பாலா இன்டஸ்டிரியல் ஏரியா சங்கத்தினருடன் RID 3182 மோட்டர் சைக்கிள் ஓட்டுனர்கள்.

RC அம்பாலா இண்டஸ்ட்ரியல் ஏரியா, RC 3080, RID 3182யிலிருந்து 12 மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்கள் அடங்கிய ரோட்டேரியன் குழு ஆதரவற்ற நோயாளிகளின் இதய அறுவை சிகிச்சைக்கு பணம் திரட்டுவதற்காக அம்பாலாவில் நிறுத்தியபோது, அவர்களை வரவேற்றனர். ரோட்டரி கொடிகள் பரிமாறப்பட்டதுடன், குழுவினருக்கு காலை உணவு வழங்கப்பட்டது.■

### ரோட்டரி விருது பெற்ற தொழிலதிபர்



சஞ்சய் கிர்லோஸ்கர் அவர்களுக்கு DG அனில் பர்மார் விருது வழங்குகிறார். PDG தீபக் ஷிக்கார்பூர் உடன் உள்ளார்.

RID 3131, புனேவில் நடைபெற்ற அதன் சர்வதேச யுவன் மாநாட்டில், கிர்லோஸ்கர் குழுமத்தின் தலைவர் சஞ்சய் கிர்லோஸ்கருக்கு ரோட்டரி வக்கேஷனல் எக்ஸ்சலன்ஸ் விருதை வழங்கியது.■

### நீலகிரியில் நடமாடும் சிகிச்சையகம்



DG B இளங்குமரன் (இடதிலிருந்து 3வது) புதிய ஆம்புலன்ஸை பார்வையிடுகிறார்.

RC நீலகிரி, RID 3203, ரூ.30 லட்சம் செலவில் மேம்பட்ட உயிர்காக்கும் ஆம்புலன்ஸ் ஒன்றை மலைவாழ் மக்களுக்கு அர்ப்பணித்தது. இந்த திட்டம் கோடக் அசெட் மேனேஜ்மென்ட் நிறுவனத்துடன் இணைந்து செய்யப்பட்டது.■

# பவள விழா கொண்டாடிய ஹௌரா சங்கம்

ரோட்டரி செய்திக்குழு

RC ஹௌரா, RID 3291, அதன் பவள விழாவைக் கொண்டாட, தொடர்ச்சியான பலகலை நிகழ்வுகளை நடத்தியது.

முன்னாள் தலைவர் சாந்தனு பானர்ஜி தலைமையிலான குழு பவள விழா கமிட்டியை நடத்துகிறது. சில உயர்-தெரிவுத் திட்டங்களை செயல்படுத்தி RCCகள் மூலம் ஏழைக் குழந்தைகளுக்கு படுக்கைகள், பள்ளிப்பை, கதைப் புத்தகங்கள், தண்ணீர் பாட்டில், ஸ்டீல் தட்டு, குடை மற்றும் பிற அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்படும் என்று பானர்ஜி கூறினார்.



**இடமிருந்து:** *கோபா மண்டல், திட்டத் தலைவர் Dr மோனோசிஜ் தாரா, சங்க செயலாளர் சுப்ராங்ஷு தத்தா, பிப்லாப் தத்தா, முன்னாள் தலைவர்கள் மாயா பால் மற்றும் ஷிப்மத் தே கோவிட் தடுப்பூசி முகாமில்.*

PRIP சேகர் மேத்தாவின் 'ஒவ்வொருவரும் இன்னொரு வரை கொண்டு வாருங்கள்' என்ற மந்திரத்தை பின்பற்றி ஜூன் 2023க்குள் தற்போது இருக்கும் 36 உறுப்பினர்கள் 75ஆக உயர்த்தப்படும். இச்சங்கம் அதன் RCC ஒன்றால் பராமரிக்கப்படும் ஆரம்ப பள்ளியின் முதல் தளத்தை ஹௌராவிற்கு அருகிலுள்ள ஒரு சிறிய நகரமான அம்டாவில் கட்ட உள்ளது. அதன் சொந்த கட்டிடத்தில் முன்னாள் தலைவர்களின் காட்சி கூடத்தை நிறுவி, பவள விழா நினைவுப் பரிசை வெளியிட உள்ளது.

### ஒரு புகழ்பெற்ற கடந்த காலம்

PRIP N C லஹாரி மற்றும் சரோஜ் கோஷ் போன்ற RC கல்கத்தாவின் பிற உறுப்பினர்களின் ஊக்கத்துடன் சுகுமார்தாஸ் தலைமையில் கல்கத்தாவைச் சேர்ந்த ரோட்டேரியன்கள் குழு ஹௌராவில் ரோட்டரி சங்கத்திற்கான ஆரம்ப வேலைகளை செய்தது. முதல் கூட்டம் அக்டோபர் 3, 1947 இல் நடைபெற்றது மற்றும் 35 உறுப்பினர்களுடன் ஒரு தற்காலிக சங்கம் உருவாக்கப்பட்டது. மேற்கு வங்காளத்தில் அப்போதைய RID 53ல் இது மூன்றாவது சங்கமாக இருந்தது மற்றும் பாட்னாவைச் சேர்ந்த DG சிஃபோர்ட் அகர்வாலா பதவியில் இருந்த போது PRIP லஹாரி மூலம் ஜூன் 23, 1948 அன்று சாசனம் வழங்கப்பட்டது, என்று பானர்ஜி நினைவு கூர்ந்தார்.

ஒரு சிறந்த வழக்கறிஞர் மற்றும் கல்வியாளர், பங்கிம் சந்திர தத்தா, பட்டயத் தலைவராகவும், சுகுமார் தாஸ் பட்டயச் செயலாளராகவும் இருந்தனர்; மற்றும் சங்கம் அதன் முதல் ஆண்டில் 25 பட்டய உறுப்பினர்களைக் கொண்டிருந்தது.

1982ல் சங்கம் அதன் சொந்த ரோட்டரி சமூக கூடத்திற்கு மாறும் வரை, உறுப்பினர்கள் தங்கள் வழக்கமான கூட்டங்களை ரயில்வே ஐரோப்பிய நிறுவன கூடத்தில் நடத்தினர், இது இப்போது கிழக்கு ரயில்வே அதிகாரிகள் சங்கம் என்று அழைக்கப்படுகிறது. 1998ம் ஆண்டு அப்போதைய தலைவர் அமரர் மதன் தத்தாவின் கீழ் பொன்விழாவைக் கொண்டாடிய இந்தியாவின் 57வது சங்கம் RC ஹௌரா ஆகும். இது வரை, சங்கம் ஒரு இண்டராக்ட் மற்றும் ரோட்ராக்ட் சங்கம், ஐந்து RCCகள் மற்றும் இன்னர் வீல் கிளப் ஆகியவற்றை நிறுவியுள்ளது. சங்கத்தின் அறிக்கை தாள், தி பிரிட்ஜ். இது 1948ல் முதன்முதலில் வெளியிடப்பட்டு, இன்று வரை அதன் உறுப்பினர்களுக்கு பிணைப்பு மற்றும் கூட்டின் ஆதாரமாக உள்ளது.

### கோவிட் பூஸ்டர் தடுப்பூசி

ஹவுரா முனிசிபல் கார்ப்பரேஷனின் ஆதரவுடன் 18–59 வயதுக்குட்பட்டவர்களுக்காக கோவிட் பூஸ்டர் தடுப்பூசி முகாம் நடத்தப்பட்டது. சுமார் 180 பூஸ்டர் டோஸ்கள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன. Dr மோனோசிஜ் தாரா இந்த திட்டக் குழுவிற்கு தலைமை தாங்கினார்.■

# இளைஞர்களுக்கான புத்தக உலகம்

Wordsworld



சந்தியா ராவ்

இலக்கிய விழாக்கள் எழுத்தாளர்கள், சித்திரக்காரர்கள், மொழி பெயர்ப்பாளர்கள், பதிப்பாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் "வாசகர்கள்" என்ற சொல்லப்படும் ஒரு தீவிர கூட்டத்துடன் தொடர்புகொள்வதன் மூலம் புத்தகங்களை நோக்கி நம் கவனத்தைக் கொண்டுவருகின்றன! நீங்கள் வாசிப்புகளைக் கேட்கிறீர்கள், எழுதும் செயல்முறையை நெருங்குகிறீர்கள், படங்கள் எவ்வாறு படிக்கப்படுகின்றன மற்றும் வார்த்தைகள் எவ்வாறு படமாக்கப்படுகின்றன என்பதை நீங்கள் புரிந்துகொள்கிறீர்கள், ஒலிகள் ஒன்றிணைந்து வார்த்தைகளை உருவாகி நமது உணர்வுகளில் அர்த்தமான வாசனையாகுவதை நீங்கள் கேட்கிறீர்கள்... நீங்கள் புத்தகங்களுடன் நெருக்கமாக இருந்தால் நீங்கள் நம்ப முடியாத வற்றைப் பற்றிப் யோசிப்பீர்கள், இது ஒரு கடினமான நேரம். இருப்பினும், இதன் சிறந்த பகுதி, நீங்கள் போற்றும் எழுத்துகளை எழுதியவர்களை நேரில் சந்திப்பது.

நிகழ்வுகளுக்குப் பிறகு, என் மூளையில் ஒரு பூட்டு திடீரென்று திறக்கப்பட்டது. 'யங் அடல்ட்' என்று பெயரிடப்பட்ட புத்தகங்களின் வகை ஒன்று உள்ளது. அதன் நோக்கம் வாசகர்களை குழந்தை பருவத்தில் இருந்து இளமைப் பருவத்திற்கு கொண்டு செல்வதாகும். 'யங் அடல்ட்' புத்தகங்கள் 'வயது வந்தோருக்கான' கருப்பொருள்கள் மற்றும் கதைகளை வழங்குகின்றன, அவை கெட்ட வார்த்தைகள், பாலியல் பற்றிய கருத்துக்கள் மற்றும் சமூக-அரசியல் பிரச் சினைகள் போன்ற அம்சங்களை உள்ளடக்கியிருக்கலாம். இப்போது ஒளியால் என் மூளைக்குள் நுழைய முடிந்தது, நான் 'யங் அடல்ட்' எழுத்தை தீவிரமாகப் கவனிக்க ஆரம்பித்தேன். அவற்றில் சில நல்ல விஷயங்கள் இருந்தன, பெரியவர்களாலும் படிக்கப்படுவதற்கு தகுதியான வைகளாக இருந்தன. அவற்றில் சில இளைஞர்களின் கதைகளைச் சொன்னாலும், அவை சிறுபிள்ளைத் தனமாக இல்லை.

பின்னர் மற்றொரு ஒளி பிரகாசித்தது: 'முக்கியமானவர்கள்' இந்தியா அனுபவிக்கும் 'மக்கள் தொகை பிரிவை' தொடர்ந்து நமக்கு நினைவூட்டுகிறார்கள். நமது மக்கள்தொகையில் 67 சதவீதம் பேர் 15க்கும் 44க்கும் இடைப்பட்டவர்கள்; விரைவில், உலகின் மற்ற பகுதிகளில் பெரும்பாலும் 'வயதானவர்கள்' இருக்கும் போது, நாம் 'இளமையாக' இருப்போம். இந்த மாற்றத்திற்கு நாம் எவ்வளவு தயாராக இருக்கிறோம்? இளைஞர்களை வரவேற்க, அவர்களின் யோசனைகள், அவர்கள் எதிர் கொள்ளும் அழுத்தங்கள், உலகத்தைப் பற்றிய அவர்களின் பார்வை, அவர்களின் முன்னுரி மைகள்? குறைந்த பட்சம், அவர்களின் மனம் எவ்வாறு செயல் படுகிறது என்பதைப் புரிந்துகொள்ள நாம் தயாராக இருக்கிறோமா?

அதற்கு ஒரு வழி அவர்களைப் பற்றி படிக்க ஆரம்பிப்பது. இந்தச் சூழலில் தான் நான் யங் அடல்ட் புத்தகங்களையும், இந்தக் கட்டுரையில் இரண்டு எழுத்தாளர் களையும் குறிப்பிடுகிறேன்: அதிதி ராவ் மற்றும் தேவாஷிஷ் மகிஜா. அவர்களின் புத்தகங்கள் 'வளரும் குழந்தைகளுக்கு' மட்டுமல்ல, பெரியவர்களுக்கானது.

அதிதி ராவ் எழுதிய கேண்டிட் டேல்ஸ்: இந்தியா ஆன் எ மோட்டார் சைக்கிள் பற்றி முதலில் பார்க்கலாம். இது கர்நாடகாவின் ஹுப்பாலி என்ற நகரத்தை சேர்ந்த கேண்டிடா லூயிஸின் பயணங்களால் தூண்டப்பட்ட வேடிக்கை நிறைந்த, கற்பனையான கதை. 24 வயதில், பெங்களூருவில் ஒரு நாள் வேலையில் இருந்து ஐந்து மாதங்கள் விடுமுறை எடுத்துக் கொண்டு, தனியாக ராயல் என்ஃபீல்டு மோட்டார் பைக்கில் நாடு முழுவதும் பயணம் செய்தாள். அவள் குழந்தையாக இருந்த போது அவளது இடைவிடாத அழுகையை தடுக்க அவளுடைய பெற்றோர் அவளை பைக்கில் அழைத்துச் சென்றனர். ஏழு வயதில், அவள் அப்பாவுக்கு முன்னால் எரிபொருள் தொட்டியின் மீது அமர்ந்து கைப்பிடியை நகர்த்தும் போது அவருடைய கைகள் அவளது சிறிய கைகளை பிடித்து வழிநடத்தவில்லை. அவள் 13 வயதில் அவளுடைய நண்பன் அவனது தந்தையின் கடையில் இருந்து திருடிய பைக்கில் தனியாகப் புறப்பட்டாள். நிருபதுங்கா மலையில் ஒரு மரத்தில் அந்த சவாரி முடிந்தது, ஆனால் அவள் நண்பனிடம் சொன்னது 'பைக் பழுதுபார்ப் பதற்காக கேரேஜுக்கு வந்தது, இல்லையா? இப்போது கண்டிப்பாக பழுதுபார்க்க வேண்டியிருக்கும்.

இமாச்சல், ஜம்மு காஷ்மீர், கேரளா, ராஜஸ்தான், குஜராத், மகாராஷ்டிரா, கோவா, பாண்டிச்சேரி உள்ளிட்ட பல மாநிலங்களில் கேண்டிடாவின் பயணத்தை சிறந்த கற்பனை மற்றும் ஈடுபாட்டுடன் இணைக்கும் வேலையை அதிதி செய்திருக்கிறார். ஜம்மு காஷ்மீரில்

உள்ள குரைஸ் பள்ளத்தாக்கில் ஒரு பெண் சுமார் 40 கிலோ விறகை சுமந்து செல்வதைக் கண்டார். விசாரித்ததில், குளிர்காலத்தில் குடும்பங்களுக்கு ஒரு நாளைக்கு 80–90 கிலோ விறகு தேவைப் படுவதை அவள் அறிந்தாள். ஜோத்பூருக்குச் செல்லும் வழியில், ஓம் பன்னா என்ற சன்னதியில் அவள் நின்றாள் – அங்கே இருக்கும் தெய்வம் ஒரு மோட்டார் பைக்! அவள் வழியில் சில பேய்களை சந்தித்ததாகவும் கூறுகிறாள்!, அவள் தவிர்க்க முடியாத பல சங்கடமான சூழ்நிலைகளையும் சந்திக்க நேர்ந்தது. "தெரியாதவற்றை பற்றி பயப்பட வேண்டாம். பயணம் உங்கள் மனதை உற்சாகப்படுத்தும் மற்றும் அசாதாரணமான வழிகளில் உங்களை மாற்றும்." என ஹுப்பாலியில் உள்ள அனாதை இல்லத்தில் குழந்தைகளிடம் அவர் கூறினார்.

தேவாஷிஷ் மகிஜா முற்றிலும் வித்தியாசமான பயணத்தை பற்றி விவரிக்கிறார். ஆரம்பத்தில் ஒரு திரைப்படமாக தயாரிக்கப்பட்டு, அதன் பிறகு எழுதுவதற்கு ஏறக்குறைய 10 வருடங்கள் எடுத்துக் கொண்ட ஓங்கா, டோங்ரியா கோந்த் பழங்குடியினத்தைச் சேர்ந்த ஒரு இளம் ஆதிவாசி சிறுவனின் கதையைச் சொல்கிறது, அவன் தனது கிராமத்திலிருந்து தொலைதூர நகரத்திற்கு ஆபத்தான பயணத்தை மேற்கொண்டான், அங்கு ஒரு நாடகக் குழு 'சீதாஹரன்' என்ற நாடகத்தை நடத்துகிறது. அவனுக்கு அந்த நாடகத்தை பார்க்க வேண்டும், அவன் "ராமனாக' இருக்க விரும்பினான். இந்தப் பயணத்தில் ஆயுதமேந்திய நக்சலைட்டுகள், நக்சலைட்டுகளை மற்றும் சந்தேகத்திற்குரியதாகக் கருதும் வேறு யாரையும் வேட்டையாட இகீகஊபணியாளர்கள், ஆதிவாசி கள் மிகவும் புனிதமானதாகக் கருதி தங்கள் உயிரைக் கொண்டு காக்கும் நிலத்திலிருந்து பாக்சைட் வெட்டியெடுக்கும் கம்பெனிக் காரர்கள் ஆகியவர்களை சந்திக்கிறான். அவன் தனது வன வீட்டிற்குத் திரும்பும் போது, ஓங்கா உண்மையில் 'ராமனாக' மாறுகிறான். அது எப்படி நடந்தது என்பதை அறிய, நான் இந்த வரிகளை எழுதும் போதும், உலகில் நிஜம், நடப்பது என எல்லாவற்றிலிருந்தும் பிறந்த மெய்சிலிர்க்க வைக்கும் புனைகதையின் படைப்பான புத்தகத்தை நீங்கள் படிக்க வேண்டும். திரைப்படத் படைப் பாளியின் கூர்மையான பார்வை கதையை இறுக்கமான மற்றும் சில சமயங்களில் பயமுறுத்தும் உரைநடையில் உயிர்ப்பிக்கிறது.

புத்தகத்தில் உள்ள கதாபாத்திரங்களில் ஒன்றான ஹேம்லா, மாவோயிஸ்டுகளுடன் தொடர்புடையதாகக் குற்றம் சாட்டப்பட்ட சத்தீஸ்கரைச் சேர்ந்த ஒரு ஆதிவாசி பள்ளி ஆசிரியை சோனி சோரி என்ற ஆர்வலர்/அரசியல்வாதியை மாதிரியாகக் கொண்டது. சிறைவாசத்தின் போது சித்திரவதை செய்யப்பட்டு பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகி, இறுதியில் அவள் விடுதலை செய்யப்பட்டாள். ஆக்ஷன் எய்டின் உள்ளூர் தலைவர் தன்னுடன் பகிர்ந்து கொண்ட ஒரு கதையையும் தேவாஷிஷ் கூறுகிறார். பத்திரிக்கையாளர் ஷில்பி சிங்குக்கு அளித்த பேட்டியில் அவர் கூறுகையில் அவதாரின் டப்பிங் பதிப்பைப் பார்க்க ஆதிவாசிகளின் குழுவை எப்படி அவர்அழைத்துச் சென்றார் என்று என்னிடம் சொன்னார். போர் காட்சிகளின் போது நவிகளை தங்கள் சக பழங் குடியினரைப் போல அவர்கள் ஆரவாரம் செய்து உற்சாகப் படுத்தினர். இது அவர்களின் கதை, அதை உணர்வு பூர்வமாக ரசித்தார்கள், ஆனால் படம் மகிழ்ச்சியாக முடிந்ததும் அதிர்ச்சி யடைந்தனர். இங்கு ஆதி வாசிகள் அதே போர்களில் ஈடுபட்டு தோற்றுக் கொண்டிருக்கின்றனர். அது அவதார் திரைபடத்தில் பிரதிபலிக்கபடவில்லை, அது அவர்களுக்கு மன உளைச்சலை ஏற்படுத்தியது.




பழங்குடியினரின் மொழி கற்றல் தளமான திரிலிங்கோவின் நிறுவனர் ஹெர்குலிஸ் சிங் முண்டாவுடனான சிந்தனையைத் தூண்டும் உரையாடலில், தேவாஷிஷ், வடக்கு ஆந்திரா மற்றும் தெற்கு ஒடிசாவில் தனது பயணத்தின் போது பார்த்தது மற்றும் கேட்டது 'என் இதயத்தை சிறு துண்டுகளாக உடைத்து விட்டது' என்று கூறுகிறார். அந்த கதைகளை அவர் கூறுகையில் 'நான் அந்த வாழ்க்கையை வாழவில்லை,' என்று தேவாஷிஷ் தெளிவுபடுத்துகிறார், '... அதனால் என் அனுபவம் இரண்டாம் கட்ட அனுபவமாக இருக்கிறது'. இந்த தெளிவுபடுத்தலுக்கு ஒரு சூழல் உள்ளது, ஏனெனில் மற்றவர்களின் கதைகளைச் சொல்வது ஒரு சிக்கலான பிரச்சினையாகவே உள்ளது. இது குறித்து அவரிடம் அடிக்கடி கேள்வி எழுப்பப்பட்டதாக அவர் கூறுகிறார். ஆனால் அவர் ஒரு பாலம் மட்டுமே என்றும் எப்போதும் அந்த மக்களின் சொந்தக் குரலில் கதைகளைக் கேட்க வேண்டும் என்பதை முதலில் ஒப்புக்கொள்பவரும் அவரே.

இருப்பினும், ஓங்கா விதி விலக்கானது, இந்த புத்தகத்துடன், ஆதிவாசிகள் தங்களை தொடர்புபடுத்திக் கொள்வார்கள் என்று ஹெர்குலிஸ் முண்டா கூறுகிறார் . இதைவிட பெரிய பாராட்டு இருக்க முடியாது.

*கட்டுரையாளர் குழந்தைகள் எழுத்தாளர் மற்றும் மூத்த பத்திரிகையாளர்.*

# பிலாஸ்பூரில் ஒரு ரோட்டரி பசுமைப் பாதை

ரோட்டரி செய்திக் குழு

RC பிலாஸ்பூர், RID 3261, தன்னுடைய பொன்விழா ஆண்டில் (2021–22) ரோட்டரி மார்க்-கில் ஆக்ஸிஜோன் பாதை என்ற பசுமைத் திட்டத்துக்கு அடிக்கல் நாட்டியது. இந்த விழாவில் PRIP சேகர் மேத்தா, மாநிலங்களவை MP மற்றும் PDG விவேக் தன்கா, RI இயக்குநர் மகேஷ் கோட்பாகி, PRID கமல் சங்வி, IPDG சுனில் பதக் பங்கேற்றனர்.

ரோட்டரி மார்க் என்னும் இந்தப் பரபரப்பான வழி, ரூ.1.5 கோடி பன்னாட்டு நல்கையின் மூலம் நிதி பெற்று 2002ல் ரோஸ்மேரி திட்டம் என்ற பெயரில் இந்தச் சங்கத்தால் கட்டப்பட்ட 4.5 கிமீ நீளமுள்ள ஜ்வாலி நல்லா என்ற கால்வாயின்மீது அமைக்கப்பட்டுள்ளது. “இந்தக் கால்வாய்த் திட்டத்துக்கான மொத்தச் செலவு ரூ.2.5 கோடி” என்றார் இந்தச் சங்கத்தின் முன்னாள் தலைவர் (2021–22) ஆஷிஷ் ஸ்ரீவஸ்தவா. மழை நாட்களில் இந்தக் கால்வாய் ஒட்டு மொத்த நகரத்தையும் வெள்ளத்திலிருந்து காத்தது.

அகில் பாரதீய விக்லங் சேதனா பரிஷத், அக்ரவால் மகாசபா (பிலாஸ்பூர்) ஆதரவுடன், RC ஜாம்நகரைச் சேர்ந்த Rtn ஷரத் சேத் தலைமையிலான குழுவின் வழிகாட்டுதலுடன் IPDG பதக் மற்றும் DGN அகில் மிஷ்ரா முன்னிலையில் நடைபெற்ற LN-4 செயற்கைக் கை பொருத்தும் முகாம் 12 மாநிலங்களைச் சேர்ந்த, கை, கால் இழந்த 174 பேருக்கு நன்மை அளித்தது.

இந்தச் சங்கம் தன்னுடைய மைல்கல் ஆண்டில் ஆண்டுமுழுவதும் நடைபெறும் மர நடு திட்டத்தைத் தொடங்கியுள்ளது; ஜோன்கி கிராமத்தில் ஓர் RCC அமைக்கப் பட்டது; குளிர் காலத்தின் போது கிராமப்புறக் குடும்பங்களுக்கு 500க்கும் மேற்பட்ட போர்வைகள் வழங்கப்பட்டன; பதிவு நாள் கொண்டாட்டத்தின் போது பதிவுத் தலைவர் Dr ரியாஜுத்தீன் (94) மற்றும் அவருடைய குழுவினர் பெருமைப்படுத்தப்பட்டார்கள்.■




**மேலே:** RC *பிலாஸ்பூர் தலைவர் ஹமீதா சித்திக்கி மற்றும் முன்னாள் தலைவர் ஆஷிஷ் ஸ்ரீவஸ்தவா* PRIP *சேகர் மேத்தா மற்றும் அவர் மனைவி ராஷி ஆகியோரை கௌரவிக்கின்றனர்.* **கீழே:** DGN *அகில் மிஷ்ரா (இடதிலிருந்து 2வது) ஸ்ரீவஸ்தவா மற்றும்* PDG *சுனில் ஃபதக் (வலமிருந்து 3வது)* LN-4 *முகாமில்.*



# அலிகர் பெண்களுக்கு மிதிவண்டிகள்

ரோட்டரி செய்திக் குழு



RC அலிகர் ஐகான், RID 3110, "கன்யாஸ்ரீ மிதிவண்டி நன்கொடைத்" திட்டத்தின் கீழ் 22 பெண்கள் தங்களுடைய கல்வியைத் தொடர்வதற்கு மிதிவண்டிகளை வழங்கியது. ரூ.1 லட்சம் மதிப்புள்ள மிதிவண்டிகளை 21 சங்க உறுப்பினர்கள் ஆதரித்தார்கள் என்றார் சங்கச் செயலாளர் அலோக் சதுர்வேதி. DG பவன் அகர்வால், DGN நீரவ் நிமேஷ் அகர்வால், தலைவர் ராகுல் வர்மா பள்ளிக் குழந்தைகளுக்கு மிதிவண்டிகளை வழங்கினார்கள்.■

*DG பவன் அகர்வால் மற்றும் சங்கத்தினர் பெண்களுக்கு மிதிவண்டிகளை அளித்தபின்.*

---

# சிறுவர் புற்றுநோய்ப் பராமரிப்புக்கு ரோட்டரியின் ஆதரவு

ரோட்டரி செய்திக் குழு

குழந்தைகளுக்கான தொடக்க நிலைப்புற்றுநோய் ஆதரவுத் திட்டமாகிய புன்னகைப் பரிசு ரோட்டரி புற்றுநோய் மற்றும் ஆராய்ச்சி அறக்கட்டளையால் உருவாக்கப்பட்டுள்ளது. இதற்கு RC மெட்ராஸ் மிட்-டவுன், RID 3232, கோலாலம்பூரைச் சேர்ந்த RC மெலவாடி, RID 3300, மலேசியா இணைந்து வழங்கிய $40,000 மதிப்புள்ள பன்னாட்டு நல்கையின் உதவியுடன் இது தொடங்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின்கீழ், குறைந்த வருவாய் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்த, குழந்தைகள் புற்றுநோயின் மிகப் பொதுவான வடிவங்களாகிய தொடக்க நிலை லூகாமியா, லிம்ஃபோமா இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ள 25 குழந்தைகளுக்கு ரூ 1 லட்சம் வரையிலான நிதி உதவி வழங்கப்படும். "இந்தக் குழந்தைகளுக்கு அடையாறு புற்றுநோய் மருத்துவமனை முழுச் சிகிச்சை வழங்கும். கூடுதல் நிதி தேவைப்பட்டால், இந்த அமைப்பு பிற தொண்டு ஆதரவைப் பெறும்" என்றார் RCRF மேலாண்மை அறங்காவலர் சங்கர் துரைசுவாமி. குழந்தைகளுக்குச் சிகிச்சைக்குப் பிந்தைய மருந்து மற்றும் ஊட்டச் சத்து ஆதரவு தொடரும், தேவைப் படும் இடங்களிலெல்லாம் RCRF உதவும். புன்னகைப் பரிசு திட்டம் RCRFன் மிகப் பெரிய ஒரு திட்டத்தின் தொடக்கம்தான். இதன்மூலம் விழிப்புணர்வு உண்டாக்குவது, அறிவுறுத்தல்/ஆதரவு அளிப்பது, தங்கள் சமூகத்தில் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட மக்களைக் கவனித்துக்கொள்ளும் மக்களுக்குப் பயிற்சி அளிப்பது போன்றவை முன்னிறுத்தப்படும்.■



# இளவயதில் பசுமையைக் கற்றுக்கொடுங்கள்

ப்ரீதி மேஹரா

7 முதல் 16 வயதுள்ள குழந்தைகளுக்கு வீடியோ விளையாட்டுகளை விளையாடுவதற்குப்பதில் உண்மையான விளையாட்டுகள், இசை அல்லது நடனப் பாடங்களுக்கு நேரம் ஒதுக்கவேண்டும் என்று கற்றுத் தருவது எப்படி? முதலில், கிரிக்கெட், டென்னிஸ் விளையாடுவது அல்லது கீபோர்ட் வாசிப்பது அவர்கள் மகிழ்ந்து செய்யக்கூடிய ஓர் ஓய்வு நேர வேலை என்று அவர்களுக்குக் கற்றுத்தரலாம். அதன்பிறகு, அவர்கள் ஒரு மகிழ்ச்சியான, நலத்தைத் தரும் செயல்பாட்டைத் தேர்ந்தெடுப்பார்கள், படிப்புச் சோர்வுக்கு நடுவில் இது ஒரு நல்ல இடைவேளை என்று அவர்கள் ஆவலுடன் எதிர்பார்ப்பதை நீங்கள் காண்பீர்கள். வளரும் வயதில் ஒருவர் படிப்புக்கு வெளியில் செய்கிற செயல்பாடுகள் அவருடைய ஆளுமை மேம்பாட்டில் ஒரு முக்கியப் பங்கு வகிக்கின்றன என்று சொல்லப்படுவது உண்மை.

உங்கள் குழந்தைகளுக்குச் சுற்றுச்சூழல் விழிப்புணர்வை உண்டாக்கவும் இதே தொடக்கச் செயல்முறையைப் பின்பற்றலாம். நீங்கள் நினைப்பதுபோல் அது அத்தனை கடினம் இல்லை. இதற்கு நீங்கள் அவர்களிடம் காலநிலை மாற்றத்தைப்பற்றி நீளமாகப் பேச வேண்டியதில்லை, முக்கியமாக, பசுமைச் செயல்பாடுகளை ஒரு சுமையான வேலையாக ஆக்கிவிடக்கூடாது. அது அவர்கள் பங்கேற்கும் ஒரு மகிழ்ச்சி செயல்பாடாக இருக்கவேண்டும். அதன் மூலம், எந்தச் சலிப்பான வேலையிலும் ஈடுபடாமல் அவர்கள் பொறுப்புள்ளவர்களாக ஆவார்கள்.




சுற்றுச்சூழலுக்கு இதமான வாழ்க்கை முறையும் அப்படிதான், அதைத் திணித்துக் களைப்பாக்கக் கூடாது. அப்படியானால், இந்தச் செயல்முறையை மகிழ்ச்சியாக ஆக்குவது எப்படி? அதற்கு ஒரு வழி, மறுசுழற்சியை ஒரு சிறப்பு வேலையாக ஆக்காமல் வீட்டின் இயற்கையான ஒரு செயலாக ஆக்குவது.

பதின்பருவத்துக்கு முந்தைய ஆண்டுகளில் இதை ஒரு மகிழ்ச்சியான செயல்பாட்டுடன் தொடங்கலாம்: பயன் படுத்தப்பட்ட அட்டைப் பெட்டிகளுக்கு வானவில் வண்ணங்களைத் தீட்டி அதில் குழந்தைகளுடைய பொம்மைகளைப் போட்டு வைக்கலாம். அல்லது, தூக்கி எறியப்பட்ட அல்லது வீணான மரத் துண்டுகளைக் கொண்டு அவர்கள் தங்களுடைய சொந்த, புதுமைச் சிந்தனையுள்ள புத்தக அலமாரியை வடிவமைத்து உருவாக்கலாம், அதில் ஒரு தச்சுக் கலைஞர் அவர்களுக்கு உதவலாம். அல்லது, விடுமுறைகளின் போது, வீணான துணிகளைக் கொண்டு பை தைத்து, அதில் காலணிகளைப் போட்டு வைக்கலாம். அல்லது, அழகான வடிவமைப்பில் துண்டுத் துணிப் பை தைத்து அதில் பரிசுகளைப் போட்டு வழங்கலாம். இப்படி நேரம் செலளவிட்டுச் சிந்தித்தால் நிறைய

யோசனைகள் வரும், அதில் குழந்தைகளை ஈடுபடுத்தலாம்.

இந்த யோசனைகள் வீட்டுப் பொருட்களுக்கானவை. இதேபோல், மீதமாகும் உணவுப் பொருட்களை மறுசுழற்சி செய்கிற பழக்கத்தையும் எளிதில் கற்றுத்தரலாம். எடுத்துக் காட்டாக, வீட்டில் மீதமுள்ள கேக்குகள், பிஸ்கட்களைக் கொண்டு புட்டிங் தயாரிக்கலாம், அதில் குழந்தைகளை ஈடுபடுத்தலாம். அல்லது, அவர்களுக்குப் பிடித்த ஓர் இறைச்சி அல்லது காய்கறி உணவின் மீதமுள்ள பகுதிகளை டோஸ்ட்களுக்குள் நிரப்பிச் சாப்பிடக் கற்றுத்தரலாம். டோஸ்ட்களுடன் சிறிது சீஸ், ஒரிகானோ, ஒரு கிண்ணம் சூப் சேர்த்துவிட்டால் போதும், அது எல்லாருக்கும் பிடித்த இரவு உணவாகிவிடும். அல்லது, வீட்டில் மீதமுள்ள ரொட்டிகளில் சுவையான உட்பொருட் களை வைத்துச் சுற்றிச் சாப்பிடக் கொடுக்கலாம். இப்படி இன்னும் பல யோசனைகள் உள்ளன, உங்கள் கற்பனையைத் தூண்டிவிடுங்கள். இதன்மூலம், குழந்தையின் புதுமைச் சிந்தனை, பரிசோதனை செய்கிற திறன் இன்னும் கூர்மையாகும்.

உணவைப்போல் தண்ணீரை வீணடிக்கக்கூடாது என்றும் உங்கள் குழந்தைக்குக் கற்றுக்கொடுப்பது முக்கியம். எடுத்துக்காட்டாக, சிறு வயதில் அவர்கள் பல் தேய்க்கும் போது குழாயை மூடும் பழக்கத்தைக் கற்றுக்கொடுங்கள். கை கழுவும்போது, பல் தேய்க்கும் போது, தலைக்கு ஷாம்பூ போடும்போது குழாயை மூடும் பழக்கம் தானாக வரவேண்டும். இதேபோல், குளிக்கும் போதும் தண்ணீரைச் சேமிக்க வேண்டும்.

பள்ளியிலும் நீங்கள் இப்படி ஒரு போக்கைத் தொடங்கலாம், இந்த யோசனையை ஆசிரியர் களுக்கும் சொல்லலாம். ஒவ்வோர் ஆண்டும் தூய்மையான பழைய பாடப் புத்தகங்களை வாங்கும் படி குழந்தைகளை ஊக்குவித்தால், தாளும் அச்சிடும் மையும் சேமிக்கப்படும். வீட்டில் பயன் படுத்தப்படாமல் கிடக்கும் டின்கள் அல்லது பெட்டி களைக் கொண்டு தங்களுடைய சொந்தப் பென்சில் பெட்டிகளை உருவாக்கும்படி குழந்தைகளை ஊக்குவிக்கலாம். குழந்தைகளின் சீருடைகள் சிறிதாகி விட்டால் அவற்றை வீணடிக்க வேண்டாம், வயதில் சிறிய மற்ற குழந்தைகளுக்குக் கொடுக்கலாம். அல்லது, குழந்தைகள் உதவியுடன் அவற்றைப் பைகளாக மாற்றித் துவைக்கும் துணிகளைப் போட்டு வைக்கலாம், பொருள் வாங்கக் கொண்டுசெல்லலாம். இது ஒரு பள்ளிச் செயல்பாடாக மாறினால், ஒரு பொருளின் வாழ்க்கைச் சுழலில் மறுசுழற்சி செய்தல் ஓர் இயல்பான படிநிலை என்று குழந்தைகள் புரிந்துகொள்வார்கள்.

வீணாகும் பொருட்களைப் பிரிக்கும் முக்கியப் பணியைப் பதின்பருவத்தினரிடம் கொடுக்கலாம், அதற்கு அவர்களுக்குச் சிறிது ஊக்கத்தொகையும் கொடுத்தால் இன்னும் நல்லது. இதன்மூலம் அவர்கள் மகிழ்ச்சியாக உணர்வார்கள். அத்துடன், மறுசுழற்சியின்மூலம் சுற்றுச்சூழலில் நாம் சேர்க்கிற குப்பையின் அளவு குறிப்பிடக்கூடிய அளவு குறைகிறது, குறிப்பாக, மட்காத குப்பை குறைகிறது.

குப்பைகளைப் பிரிப்பதுடன், ஈரக் குப்பையைக் கொண்டு கூட்டெரு தயாரிப்பதில் அவர்களை ஈடுபடுத்தினால், அது அவர்களுக்கு இன்னொரு வாழ்க்கைப் பாடமாக இருக்கும். இங்கு, அவர்கள் மண்ணுடன் விளையாடி மகிழலாம், அதே நேரம் இயற்கையின் ரகசியங் களைக் கற்கலாம், சில மரங்களையும் நடலாம். அவர்கள் பார்க்கிற திரைப் படங்கள், TV நிகழ்ச்சிகள், படிக்கிற புத்தகங்கள் இந்த மதிப்பீடுகளை வலியுறுத்தினால், இந்த மதிப்பீடுகள் இயல்பாக மாறுவது கண்டிப்பாக நடக்கும்.

இதனிடையில், குழந்தைகளைப் பசுமைபற்றிச் சிந்திக்கச் செய்வதற்குப் பெற்றோராகிய நீங்களும் அதைச் செய்யவேண்டும். எடுத்துக்காட்டாக, விடுமுறையைத் திட்டமிடும்போது, காட்டு விலங்குகள் காப்பகம், இயற்கைப் பூங்கா, காட்டுக்குள் மரங்களின் நடுவில் உள்ள ஒரு பகுதி போன்றவற்றைத் தேர்ந்தெடுக்கலாம். இன்றைக்குப் பலர் தேர்ந்தெடுக்கிற ஐந்து நட்சத்திர விடுதிகளைவிட இவை சிறந்தவை. குழந்தைகள் இயற்கைக்கு அருகில் இருக்கும்போது, வாழ்க்கையை இன்னும் ரசிக்கிறார்கள், காற்று, சூரியன், பனி, மரங்கள், காடுகள், மலைகள், ஆறுகள், கடல்கள் போன்ற இயற்கை அம்சங்களுடன் தொடர்பில் இருக்கிறார்கள். சிறு இடைவேளைகளின்போதுகூட, நல்ல வானிலை கொண்ட இடங்களுக்குச் செல்ல முயலுங்கள், மிதிவண்டி ஓட்டுதல், முகாம் அமைத்தல், ஆற்றில் மீன் பிடித்தல், நீச்சல் அடித்தல் அல்லது எளிய பாதை ஒன்றில் நெடுநேரம் நடத்தல் போன்ற செயல்பாடுகளில் ஈடுபட முயலுங்கள். மகிழ்ச்சியளிக்கும் இந்தச் செயல்பாடுகளில் ஈடுபடுவதற்கு நீங்கள் உங்கள் குழந்தைகளுக்குக் கற்றுத்தராவிட்டால், அவர்கள் எப்போதும் இவற்றில் ஈடுபட மாட்டார்கள். நீங்கள் போதுமான அளவு முயற்சி எடுத்தால், குழந்தைகள் வெளியிடங்களை மகிழ்ச்சியாகக் கருதுவார்கள். இதன் மூலம், அவர்கள் இயற்கையின் மீது நலமான மதிப்புடன் வளர்வார்கள், சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் பழக்கங் களைப் பின்பற்றுவார்கள். எடுத்துக் காட்டாக, சிறு தொலைவுகளுக்குத் தொல்பொருள் எரிபொருளைப் பயன்படுத்திக் காற்றை மாசு படுத்தாமல் நடந்து செல்வது அல்லது மிதிவண்டியில் செல்வது.

குழந்தைகள் காருக்கு வெளியில் அல்லது குப்பைத் தொட்டிக்கு வெளியில் குப்பையை எறிவது ஏன் என்று எப்போதாவது சிந்தித் திருக்கிறீர்களா? ஏனெனில், அவர்களுடைய குடும்ப உறுப்பினர்கள் அப்படிச் செய் கிறார்கள். அதனால், பசுமை வாழ்க்கையும் சுற்றுச்சூழலுக்கு இதமான பழக்கங்களை வளர்த்துக் கொள்வதும் ஒரு பொறுப்பான, மகிழ்ச்சியான செயல் என்று நாம் கற்றுத்தரவேண்டும். ஒரு குடும்பம் சுற்றுச்சூழல் விழிப்புணர்வுடன் இருந்தால், குழந்தைகளும் அந்த வழியில் நடப்பார்கள்.

எழுத்தாளர் மூத்த இதழாளர் சுற்றுச்சூழல் பிரச்சனைகளைப்பற்றி எழுதி வருகிறார்.

# பள்ளிக் குழந்தைகளுக்கு டிஜிட்டல் எழுத்தறிவு

## ரோட்டரி செய்திக்குழு

RC கல்கத்தா, RID 3291, ஜூலையில் ரோட்டரி ஆண்டைத் தொடங்கியபோது, 'சிக்ஷா லாப்' என்ற தன்னுடைய திட்டத்தின் கீழ் கொல்கத்தா, அதைச் சுற்றியுள்ள அரசு/அரசு உதவி பெறுகிற மற்றும் RCC பள்ளிகளில் படிக்கும் 10,000 குழந்தைகளுக்கு டிஜிட்டல் எழுத்தறிவு வழங்கும் திட்டத்தை முன்வைத்தது. இந்தச் சங்கத்தின் சமூக சேவைக் குழு. ஆறாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்புவரை பயிலும் குழந்தைகள் அடையாளம் காணப்பட்டு அவர்களுக்கு MS வேர்ட், எக்சல், பவர்பாயின்ட் போன்ற அடிப்படைக் கணினிக் கல்வி கற்றுத்தரப்பட்டது.

ஜூலை 18 அன்று PRIP சேகர் மேத்தா, RIDE அனிருதா ராய்சௌத்ரி ஆகியோர் கமலாபூர் பாலிகா வித்யாபீத் பள்ளியில் இந்தத் திட்டத்தைத் தொடங்கி வைத்தனர். 350 மாணவர்கள் இதில் இணைந்தார்கள். "நாங்கள் நவம்பர் 14க்குள் இந்தத் திட்டத்தை முழுமைசெய்ய எண்ணியிருந்தோம். ஆனால், செப்டம்பரிலேயே 11 பள்ளிகளிலிருந்து 9,800 மாணவர்கள் கணினிக் கல்வியில் சேர்ந்துவிட்டார்கள்" என்கிறார் சமூக சேவைக் குழுத் தலைவர் அரிந்தம் ராய் சௌத்ரி. இந்தத் திட்டத்துக்கான முழு நிதியையும் சங்க உறுப்பினர்கள் வழங்கியுள்ளார்கள். இந்த 11 பள்ளிகளில் ரூ.14 லட்சம் மொத்தச் செலவில் 100 கணினிகள், அச்சிடும் இயந்திரங்கள், UPS போன்ற துணைப் பொருட்கள் நிறுவப்பட்டுள்ளன.■



*அரிந்தம் ராய்சவுத்ரி மற்றும் RC கொல்கத்தா உறுப்பினர்கள் ஒரு பள்ளியில் சங்கம் நிறுவியுள்ள சிக்ஷா லாப் வகுப்பறையில்.*

---

2023 மாநாடு

# சிறந்த சுற்றுலா

## VA ரெமிஜன்-டோபா



மே 27 முதல் 31 வரை 2023 ரோட்டரி பன்னாட்டு மாநாட்டுக்காக நீங்கள் மெல்பர்ன் வரும்போது, இந்த ஊரைச் சுற்றிப்பார்க்கக் கால்கள், டிராம், படகு, தண்ணீர்பைக் எனப் பல வழிகள் உண்டு. இந்த முறைகள் ஒவ்வொன்றும் இந்த நகரின் கட்டுமானக் கலை, பண்பாடு, வரலாறு, மறைந்திருக்கும் இடங்களைத் தனித்துவமாகக் காண்பிக்கின்றன.


உங்களுக்கு நடக்க விருப்பம் என்றால் மெல்பர்னின் நடைப் பயணங்களில் ஒன்றை முயலுங்கள். "I"ம் ஃப்ரீ டூர்ஸ்" என்ற நிறுவனம் உள்ளூர்க் கலைஞர்கள், இசைக் கலைஞர்கள், பயண ஆர்வலர்களுடைய வழிகாட்டுதலில் இலவச நடைப் பயணங்களை வழங்குகிறது. இவர்களுடைய பயணம் இந்த நகரின் கட்டு மானக்கலை, தோட்டங்கள், ரகசியங்கள், இன்னும் பலவற்றைக் காண்பிக்கிறது.

இந்த நகரத்தைப் பார்க்க இன்னொரு பார்வை மையம், டௌன்டவுனின் நடுவில் ஓடுகிற Yarra ஆறு. Southbankல் ஒரு படகுப் பயணத்தைத் தொடங்குங்கள். இடங்களைப் பார்த்தல், புகைப்படம் எடுத்தல், காக்டெயில், இரவு உணவு, சூரியன் மறையும் காட்சி என பல வகை ரசனைகளுக்கு ஏற்ற பயணங்கள் உள்ளன. அல்லது, தண்ணீர்பைக்கில் நீங்கள் ஆற்றைச் சுற்றலாம். கடற்கரைப் படகுப் பயணங்களில் நீங்கள் நகரத்தை, கடற்கரைகளை, சிறுகுடாக்களை, பாறை உருவாக்கங்களை, டால்ஃபின்கள், சீல்கள் உள்ளிட்ட காட்டு விலங்குகளைப் பார்க்கலாம்.

மெல்பர்ன் தொழில் மாவட்டத்தின் "சிட்டி சர்க்கிள் டிராம்" சுற்றுலாப் பயணிகளிடையில் புகழ் பெற்ற இலவச வண்டியாகும். இது சுமார் இரண்டு டஜன் இடங்களில் நிற்கும், எங்கும் எளிதில் ஏறி இறங்கலாம். இதில் பார்க்கவேண்டிய முக்கிய இடங்கள், வரலாற்றுச் சிறப்பு மிக்க Flinders Street ரயில் நிலையம், State Library Victoria மற்றும் மெல்பர்ன் பண்பாட்டு, இயற்கை வரலாற்று அருங்காட்சியகம். இந்த டிராம் ஒவ்வோர் இடத்தின் முக்கியத்துவம், பின்னணியைப்பற்றி ஒலி வடிவில் விளக்குகிறது.

மேலும் அறிய, பதிவு செய்ய: convention.rotary.org காணவும்.

## Advertise in Rotary News




| Tariff | |
|---|---|
| Back cover | ₹1,00,000 |
| Inner Front Cover | ₹60,000 |
| Inner Back Cover | ₹60,000 |
| Inside Full Page | ₹30,000 |
| Half Page | ₹20,000 |
| **Specifications** | |
| 17 x 25 cm | Full page |
| 17 x 12 cm | Half page |

**Advertisements in colour only**

**Phone: 044 42145666**
**e-mail: rotarynews@rosaonline.org**

# FIND A CLUB

ANYWHERE IN THE WORLD!



Use Rotary's free Club Locator and find a meeting wherever you go!

www.rotary.org/clublocator


## District Wise TRF Contributions as on Sept 2022–23 (interim results)

(in US Dollars)

| District Number | Annual Fund | PolioPlus Fund | Endowment Fund | Other Funds | Total Contribution |
|---|---|---|---|---|---|
| **India** | | | | | |
| 2981 | 10,428 | 127 | 0 | 625 | 11,180 |
| 2982 | 5,995 | 1,369 | 2,001 | 28,789 | 38,154 |
| 3000 | 6,305 | 1,361 | 0 | 0 | 7,666 |
| 3011 | 11,878 | 1,470 | 127 | 120,718 | 134,193 |
| 3012 | 794 | 100 | 60,235 | 22,284 | 83,413 |
| 3020 | 13,709 | 160 | 30,000 | 0 | 43,869 |
| 3030 | 8,724 | 43 | 0 | 1,150 | 9,918 |
| 3040 | 6,647 | 359 | 0 | 11,816 | 18,822 |
| 3053 | 19,606 | 0 | 0 | 0 | 19,606 |
| 3054 | 3,484 | 0 | 0 | 0 | 3,484 |
| 3060 | 21,514 | 200 | 0 | 60,476 | 82,191 |
| 3070 | 21,378 | 201 | 11,469 | 6,980 | 40,029 |
| 3080 | 5,390 | 1,787 | 0 | 0 | 7,178 |
| 3090 | 1,798 | 0 | 2,190 | 0 | 3,988 |
| 3100 | 23,149 | 400 | 1,000 | 0 | 24,549 |
| 3110 | 8,760 | 354 | 1,013 | 301,329 | 311,456 |
| 3120 | 5,671 | 0 | 0 | 0 | 5,671 |
| 3131 | 92,435 | 656 | 29,035 | 113,016 | 235,143 |
| 3132 | 9,508 | 1,121 | 25,000 | 500 | 36,129 |
| 3141 | 323,759 | 27,363 | 76,000 | 144,264 | 571,385 |
| 3142 | 100,554 | 2,596 | 0 | 25 | 103,176 |
| 3150 | 13,299 | 1,121 | 3,000 | 313 | 17,733 |
| 3160 | 1,134 | 2,313 | 0 | 0 | 3,448 |
| 3170 | 29,621 | 14,991 | 1,006 | 275 | 45,893 |
| 3181 | 31,311 | 31 | 25 | 399 | 31,766 |
| 3182 | 14,657 | 253 | 0 | 0 | 14,910 |
| 3190 | 13,650 | 1,520 | 0 | 985 | 16,155 |
| 3201 | 53,116 | 2,024 | 0 | 251,245 | 306,384 |
| 3203 | 1,077 | 447 | 0 | 26,479 | 28,002 |
| 3204 | 3,825 | 0 | 0 | 152 | 3,977 |
| 3211 | 54,687 | 0 | 0 | 1,049 | 55,737 |
| 3212 | 27,815 | 11,356 | 0 | 31,646 | 70,817 |
| 3231 | 44,302 | 19,645 | 32,025 | 569 | 96,541 |
| 3232 | 33,951 | 4,824 | 0 | 16,439 | 55,214 |
| 3240 | 14,641 | 6,738 | 1,000 | 0 | 22,379 |
| 3250 | 4,442 | 100 | 0 | 10,500 | 15,042 |
| 3261 | 8,471 | 13 | 0 | 200 | 8,684 |
| 3262 | 830 | 33 | 0 | 27,471 | 28,333 |
| 3291 | 20,609 | 223 | 15,033 | 0 | 35,864 |
| **India Total** | **1,072,925** | **105,299** | **290,159** | **1,179,694** | **2,648,077** |
| 3220 **Sri Lanka** | 11,011 | 861 | 0 | 0 | 11,872 |
| 3271 **Pakistan** | 876 | 1,025 | 0 | 250 | 2,151 |
| 3272 **Pakistan** | 305 | 0 | 0 | 5,000 | 5,305 |
| 3281 **Bangladesh** | 35,140 | 446 | 20,000 | 17,259 | 72,845 |
| 3282 **Bangladesh** | 2,785 | 1,100 | 0 | 2,806 | 6,691 |
| 3292 **Nepal** | 22,953 | 2,818 | 0 | 10,368 | 36,139 |
| **South Asia Total** | **1,145,995** | **111,549** | **310,159** | **1,215,378** | **2,783,081** |

Annual Fund (AF) includes SHARE, Areas of Focus, World Fund and Disaster Response.

**Source:** RI South Asia Office

# குளிர்ந்த மனமும் சுறுசுறுப்பான உடலும் அதிசயங்களைச் செய்யும்

பரத் — ஷலன் சவூர்

பண்டிகைக் காலம் பல பாடல்கள் மற்றும் நடனம், சிரிப்பு மற்றும் காதல் ஆகியவற்றில் திளைக்கிறது. ஆனால் ஒற்றைத் தலைவலியால் அவதிப்படுபவர்கள் தங்களைத் தாங்களே உறுதியாகப் பார்த்து கொள்ளவேண்டும். உங்களை கட்டாயப்படுத்தும் மக்களைச் நீங்கள் சந்திக்கக்கூடும், அவர்கள் “சுவா, ஒரு சிறிய முந்திரி பருப்பு பர்பி உன்னைக் ஒன்றும் செய்யாது!” என்று கூறி, அதை உங்கள் மீது திணிப்பர். இது நல்லெண்ணத்துடன் செய்யப்படுகிறது, ஆனால் நீங்கள் தான் கவனித்துக் கொள்ளவேண்டும்.

சுருக்கமாக கூறினால், இராஜதந்திரத்துடன், பொறுமையாக, விழிப்புடன் இருங்கள். அவர்களிடம் கோபம் கொள்ளாதீர்கள். கடுமையான தலைவலி இல்லாதவர்களுக்கு ஒற்றைத் தலைவலியைப் புரிந்து கொள்ளமுடியாது. சில சமயங்களில், நாம் உடல், மனது அல்லது ஆவி ஆகியவற்றில் அதிக உணர்திறன் கொண்டவர்களா என்று எனக்கு தோன்றுகிறது. 100க்கு 60 பேருக்கு தலையின் ஒரு பக்கத்தில் திடீரென ஏற்படும் வலியை வேறு என்ன திருப்திகரமாக விளக்குகிறது?

இது சற்று விசித்திரமானது, ஆனால் பிரகாசமான விளக்குகளால் கண் கூசுவதும், ஒலி மற்றும் வாசனைக்கு சகிப்புத்தன்மை இல்லாதிருப்பதும், குமட்டல் மற்றும் வாந்தியால் நடுக்கம் மற்றும் சில நேரங்களில் தலைச்சுற்றல் ஏற்படும். இது உங்களை பதட்டப்படுத்தலாம். ஒற்றைத் தலைவலிக்கு அறிகுறிகளும் உள்ளன – மங்கலான பார்வை, மிதக்கும் காட்சி படங்கள், பிரகாசமான ஒளிகள், வளைந்து நெளியும் வடிவங்கள் அல்லது 20 நிமிடங்கள் நீடிக்கும் குறைந்த பார்வை.

விழாக்களின் ஆரவாரம் மற்றும் ஆட்டத்தின் நடுவில் நாம் எவ்வாறு பயணிப்பது? உங்களுக்கு உதவும் சில அற்புதமான குறிப்புகள் இங்கே:

### பச்சைக்கு மாறுங்கள்

உங்கள் சுற்றுச்சூழலை ஒளிரும் விளக்குகளால் அலங்கரிக்கா தீர்கள். நிலையானவற்றைப் பயன்படுத்தவும், பச்சை விளக்குகளுக்கும் முன்னுரிமை வழங்குங்கள். நீல மற்றும் சிவப்பு விளக்குகள் விழித்திரை மற்றும் மூளையின் புறணியில் மிகப்பெரிய சமிக்ஞைகளை உருவாக்குகின்றன.

### எங்கேயும் எப்போதும் தண்ணீர்

உங்களால் முடிந்தவரை பட்டாசு வெடிக்காமல் இருக்கவும். வெளியே சென்றால், முகமூடியை அணியுங்கள். மதுபானத்தால் ஏற்படும் நீரிழப்புக்கு எதிராக பாதுகாப்பாக இருக்கவும். மது ஒற்றைத் தலைவலியைத் தூண்டும் – எனவே முயற்சி செய்து அவற்றை தவிர்க்கவும். உங்கள் பையில் ஒரு பாட்டில் தண்ணீரை வைத்துக் கொள்ளுங்கள்.

### அளவை மீறாதீர்கள்

எந்த உணவுகள் உங்கள் ஒற்றைத் தலைவலியைத் தூண்டும் என்பதை நீங்கள் ஏற்கனவே அறிந்திருந்தால் மிகவும் நல்லது. பெரும்பாலும், அவை சீஸ், சாக்லேட், கடலைகள், வெந்தய இலைகள், சோளம் ஆகியவைகளாகும். எனவே, பீட்சாக்கள், மிட்டாய்கள், மேத்தி பராத்தா, வேகவைத்த உணவுகள், பாஸ்தாக்கள், MSG கொண்ட உணவுகள் ஆகியவற்றைத் தவிர்க்கவும். உணவை அதிகமாகச் சாப்பிடாதீர்கள் அல்லது அறவே தவிர்க்காதீர்கள். எப்போதும் அளவாக சாப்பிடுங்கள். வெறும் வயிற்றில் வாழைப்பழம் சாப்பிடுவதையோ அல்லது நிறைய தண்ணீர் குடிப்பதையோ தவிர்க்கவும். அவை அசிடிட்டி மற்றும் தலை துடிப்பை ஏற்படுத்தி, ஒற்றைத் தலைவலியை தொடங்கும்.

ஒற்றைத் தலைவலி சாதாரண தலைவலி போன்றது அல்ல – அவை தானாகவே போய்விடாது. உங்கள் சூழ்நிலையைப் பொறுத்து, இந்த இரண்டு விஷயங்களில் ஒன்றை நீங்கள் செய்யலாம்: சமூகக் கூட்டத்தில் இருந்தால், அழற்சி எதிர்ப்பு மாத்திரையை எடுத்துக்



கொள்ளுங்கள். அது வேலை செய்ய சுமார் 20 நிமிடங்கள் ஆகும். இதற்கிடையில், தனிமையான இடத்திற்கு நழுவி விடுங்கள். அதிகமாக சிரித்து பேசுவதும் தலையசைப்பதும் துடிப்பை மோசமாக்குகிறது. ஆரம்பக் கட்டத்தில் கோலாவை பருகுவது ஒரு நல்ல யோசனையாகும், அதில் உள்ள கஃபெய்ன் துடிப்பை குறைக்கும்.

நீங்கள் வீட்டில் இருந்தால், உங்கள் நெற்றி, உச்சந்தலையில் மற்றும் கழுத்து ஆகியவற்றில் மென்மையான இடங்களை தேடுங்கள். மூன்று முதல் நான்கு இடங்களை கண்டறியலாம். உங்கள் ஆள்காட்டி மற்றும் நடு விரல்களால் இடைவிடாமல் ஒவ்வொன்றையும் மசாஜ் செய்யவும். பெரும்பாலும், வலி குறைந்து விடும். ஒரு சூடான பை கொண்டு முயற்சிக்கவும் அல்லது சூடான ஷவர் கீழே நிற்கவும். நீர் அழுத்தம் மற்றும் வெப்பம் நரம்புகள் மற்றும் தசைகளை தளர்த்தி உங்களை தூங்கச்செய்யும்.

மைக்ரேன் மூளை மாற்றத்தை விரும்பாது என்று வலி நிபுணர்கள் எச்சரிக்கின்றனர். அது அதன் வழக்கத்தை விரும்பும். எனவே, பண்டிகைக் காலமோ அல்லது பண்டிகைக் அல்லாத காலமோ உங்கள் வழக்கத்தை கடைபிடிக்கவும் - லேசான உணவுடனான வழக்கமான உணவு நேரம்; வழக்கமான தூக்கம் மற்றும் விழித்திருக்கும் நேரம். உங்கள் உணவை விழுங்க வேண்டாம். அவசரம் எதுவும் இல்லை.

இரவு உணவுக்கும் உறக்கத்திற்கும் இடையே குறைந்தது இரண்டு மணிநேர இடைவெளியை கொடுங்கள். படுத்திருப்பது ஆசிட்-ரிஃப்ளக்ஸை ஏற்படுத்தும், இதை ஒற்றைத் தலைவலியால் பாதிக்கப்பட்ட ஒவ்வொருவரும் கவனிக்க வேண்டும். உங்கள் தோள்களும் தலையும் படிப் படியாக சாய்ந்திருக்கும் வகையில் இரண்டு தலையணைகளை வைத்து தூங்குங்கள்.

அதிக தூக்கம் வேண்டாம். நீங்கள் சீக்கிரம் எழுந்ததும், படுக்கையை விட்டு எழுந்திருங்கள். நீங்கள் கடிகாரத்தைப் பார்த்துவிட்டு மீண்டும் தூங்கினால், பயங்கரமான தலைவலியுடன் எழுந்திருப்பீர்கள்.



சிறு தூக்கம் தசைகளை சுருக்கி வலியை ஏற்படுத்துகிறது. காலை 7 மணிக்கு மேல் தூங்க வேண்டாம். முதலில் ஒரு கப் வெதுவெதுப்பான நீரைப் பருகி, அதைத் தொடர்ந்து உங்களுக்குப் பிடித்த பானத்தைப் பருகி அந்த நாளை தொடங்குங்கள்.

ஒற்றைத் தலைவலியால் பாதிக்கப்பட்டவர் பெரும் பாலானவர்களை விட அதிக உணர்திறன் உடையவராகத் தெரிவர், அது ஒலி மற்றும் ஒளிக்கு மட்டுமல்ல, மன அழுத்தத்திற்கும் கூட. அதிக கவலை, அதிக சிந்தனை, ஒரு சூழ்நிலையை பெரிதுபடுத்துதல் ஆகியவற்றை விட்டுவிடுங்கள். நாம் விழித்திருக்கும் போது, நாம் பீட்டா நிலையில் இருக்கிறோம்; தூக்கம் வரும்போது, நம் மூளை அமைதியான, டிரான்ஸ் போன்ற ஆல்பா நிலைக்கு செல்கிறது. நல்ல செய்தி என்னவென்றால், மன அழுத்தம் தொடர்பான பதற்றத்திற்கு டிரான்ஸ் சாதகமாக பதிலளிக்கிறது. எனவே, யோகா நித்ரா தியானத்தை ஒரு நாளைக்கு 2–3 முறை செய்யவும். இரண்டு, எதிர்பார்ப்புக்குப் பதிலாக நன்றியுணர்வுடன் உங்கள் வாழ்க்கையை நகர்த்துங்கள். எங்கோ நாய் குரைக்கிறது என்று ஏன் கிளர்ந்தெழ வேண்டும்? உங்கள் வருமானம் ஒரு லட்சமாக இருக்கும் போது, உங்களிடம் 100 ரூபாய் அதிகமாக வசூலித்ததாக ஏன் வருத்தப்படுகிறீர்கள்? அளவான உணர்வை வைத் திருப்பது வாழ்க்கையை எளிதாக்குகிறது. பச்சாதா பத்தில் கவனம் செலுத்துங்கள் - ஒருவேளை நாய் பசியுடன் இருக்கலாம். ஒரு லட்சம் மற்றும் பல விஷயங்களுக்கு நன்றி கூறுவதில் கவனம் செலுத்துங்கள். உங்கள் ஆரோக்கியம், மகிழ்ச்சி, நகைச்சுவை ஆகியவற்றை வளருங்கள்.

கட்டுரை ஆசிரியர்கள் இருவரும் Fitness for Life மற்றும் Simply Spritiual — You Are Naturally Divine என்ற ஆங்கில நூல்களின் எழுத்தாளர்கள்.

RC **நாகப்பட்டினம்** — RID 2981



கடலோரப் பகுதியில் மரம் நடும் பணியை DSP K ஜவஹர் தொடங்கி வைத்தார். ரோட்ராக்டர்களும் தன்னார்வலர்களாக பங்கேற்றனர்.

RC **போர்பந்தர்** — RID 3060

ஹீமோகுளோபின் பரிசோதனை மற்றும் புற்றுநோய் விழிப்புணர்வு முகாமில் 4,500 பள்ளி மற்றும் கல்லூரி மாணவிகள் பயனடைந்தனர்.



RC **புதுக்கோட்டை சிட்டி** — RID 3000



ஆலங்குடி புனித அற்புத மாதா நடுநிலைப் பள்ளியில் அப்பல்லோ மருத்துவமனையின் ஆதரவுடன் நடத்தப்பட்ட இதயப் பரிசோதனை முகாமில் 100க்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு பரிசோதனை செய்யப்பட்டது.

RC **அமிர்ஸ்டர் ஈஸ்ட்** — RID 3070

பக்தன்வாலா அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 50க்கும் மேற்பட்ட மரக்கன்றுகளை சங்க உறுப்பினர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவிகள் நட்டனர்.



RC **நாசிக் கோதாவரி** — RID 3030



ஏக் சோட்டி சி ஆஷா திட்டத்தின் கீழ் பெண்களுக்கு சுயதொழில் செய்ய நிதியளிப்பதற்காக வட்டியில்லா சிறு கடன்கள் வழங்கப்பட்டன.

RC **பாட்டியாலா மிட் டவுன்** — RID 3090

மொஹாலியில் உள்ள ஃபோர்டிஸ் மருத்துவ மனை ஆதரவுடன் பாட்டியாலா ஓமினி மருத்துவமனையில் மருத்துவ முகாம் நடைபெற்றது.



# செய்திகள்

## RC **மொராதாபாத்** — RID 3100



ஒரு குடிசை குடியிருப்பில் குழந்தைகளுக்கு எழுது பொருட்கள் வழங்கப்பட்டன, மேலும் 250 நோயாளிகள் சுகாதார முகாமில் பரிசோதிக்கப்பட்டனர்.

## RC **பரேலி மெட்ரோ** — RID 3110



மருத்துவ முகாமில் சுமார் 90 பேருக்கு பரிசோதனை செய்யப்பட்டு அனைத்து நோயாளி களுக்கும் மருந்துகள் வழங்கப் பட்டன.

## RC **குஷிநகர்** — RID 3120



காந்தி ஜெயந்தியை முன்னிட்டு 10 ஏழை பெண்களுக்கு தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன.

## RC **புனே லக்ஷ்மி ரோட்** — RID 3131

மஹாலுங்கே மத்யமிக் வித்தியாலயா மின் கற்றல் கருவி, நூலக அலமாரிகள், இன்வெர்ட்டர், மேடை மற்றும் தளபாடங்கள் கொண்ட ஹாப்பி பள்ளியாக மாற்றப்பட்டது.



## RC **லத்தூர் சென்ட்ரல்** — RID 3132

ஜன்வால் கிராமத்தில் செல்லப்பிராணிகளுக்கு ரேபிஸ் தடுப்பூசி மற்றும் சுகாதார பரிசோதனை முகாம் நடத்தப் பட்டது. பாஷ்மி கேரவனில் நாய்களுக்கான மருந்துகள் வழங்கப்பட்டன.



## RC **டோம்பிவ்லி டைமன்ட்ஸ்** — RID 3142

சங்கத்தின் சுகாதார முகாமால் 100 திருநங்கைகள் பயனடைந்தனர். கின்னார் அஸ்மிதா கரிமாவில் தங்கியிருக்கும் திருநங்கைகளுக் காக Wi-Fi-வசதி யுடன் கணினி வழங்கப்பட்டது.



## RC **குண்டூர் விகாஸ்** — RID 3150




மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு ரூ.30,000 மதிப்புள்ள அரிசிப் பைகள் மற்றும் புத்தகங்களை சங்கம் வழங்கியது.

## RC **பெங்களூரு ஹார்மனி** — RID 3190

குப்பலாலா அரசுப் பள்ளியில் நடந்த சுகாதார முகாமில் 250 குழந்தைகளுக்கு பரிசோதனை செய்யப்பட்டது. கண்ணாடி மற்றும் மருந்துகள் வழங்கப்பட்டது.



## RC **வீட்டா சிட்டி** — RID 3170




12 சிறுமிகளுக்கு சைக்கிள்கள் வழங்கப் பட்டன. மேலும், உடல் ஊனமுற் றோருக்கு ஐந்து சக்கர நாற்காலிகள் வழங்கப் பட்டன.

## RC **கோயம்புத்தூர் வடவள்ளி** — RID 3201

மருதமலை தேவஸ்தான உயர்நிலைப் பள்ளியில் 9-ம் வகுப்பு மாணவர் களுக்கான ஆங்கில பேச்சுத் திறனை மேம்படுத்த ஆங்கிலக் சங்கம் தொடங்கப்பட்டது.



## RC **கோட்டா சிட்டி** — RID 3182



மக்கள் நிரந்தர வருமானம் ஈட்ட உதவும் வகையில், 1.3 லட்சம் ரூபாய் மதிப்பிலான 13 தையல் இயந்திரங் களை இரண்டு மாதங்களில் சங்கம் வழங்கியது.

## RC **காரமடை** — RID 3203

பெரியமாடம்பாளையம் கிராமத்தில் உள்ள அரசுப் பள்ளிக்கு RC திருப்பூர் குமரன் உடன் இணைந்து ஸ்மார்ட் டிவி மற்றும் புத்தகங்களை சங்கம் வழங்கியது.



# செய்திகள்

## RC **அலப்பி கிரேட்டர்** — RID 3211



அமிர்தம் திட்டத்தின் கீழ் ஆலப்பி லூத்தரன் பள்ளியில் மாணவர்களுக்கு கண் பரிசோதனை முகாம் நடத்தப்பட்டது. சங்கத்தலைவர் விஜயகுமார் முன்னிலையில் AG கிரீசன் முகாமை துவக்கி வைத்தார்.

## RI **மாவட்டம்** 3232

2,000 அரசுப்பள்ளி மாணவர்களுக்கான “ரோட்டரி சென்னை ஒலிம்பியாட்” போட்டியை DG நந்தகுமார் தொடங்கி வைத்தார்.



## RC **சிவகாசி** — RID 3212



இன்னர் வீல் கிளப் மற்றும் சிவகாசி மளிகை வணிகர் மகாமாயி நிதியும் இணைந்து கண், இதயம் மற்றும் பல் மருத்துவ பரிசோதனைக்கான மருத்துவ முகாம் ரோட்டரி பள்ளியில் நடத்தப்பட்டது.

## RC **கயா சிட்டி** — RID 3250

பித்ருபக்ஷ மேளாவிற்கு வரும் ஊனமுற்ற யாத்ரீகர்களுக்கு உதவுவதற்காக கயா ரயில் நிலையத்திற்கு நான்கு சக்கர நாற்காலிகள் வழங்கப்பட்டன.



## RC **வேலூர் நார்த்** — RID 3231



கழிஞ்சூர் கிராமத்தில் சோழவந்தான் ஏரியை சுற்றிலும், சங்கத்தலைவர் ரவீந்திரன், உறுப்பினர்கள் மற்றும் ஏராளமான கிராம மக்கள் கலந்து கொள்ள மரக்கன்றுகள் நடப்பட்டது.

## RC **ராஜ்தானி புவனேஸ்வர்** — RID 3262

மணலால் செய்யப்பட்ட ரோட்டரி லோகோவை SBI கிளையில் DG பிரபுதத்தா சுபுதி திறந்து வைத்தார். Rtn சுபலா மோஹரனா என்பவரால் உருவாக்கப்பட்டது.



ஒருங்கிணைப்பு: V முத்துகுமரன்

# எரிச்சலூட்டும் உரிமை கோரல்!

**TCA ஸ்ரீனிவாச ராகவன்**

இந்தியர்கள் பலர் ஒரு விநோதமான தவறைச் செய்கிறார்கள். அந்தஸ்து காரணமாகவோ, பரம்பரை அல்லது அதிகாரம் பெற்றதன் மூலமாகவோ உள்ள உரிமையை நான் குறிப்பிடுகிறேன். என்னைப் போல ஒரு அதிகாரியின் குடும்பத் தினராகவோ அல்லது அதிகாரிகள் நிறைந்த குடும்பத்தினரிடமோ நான் இதை பார்த்திருக்கிறேன். அடிப்படையில், இந்த உரிமை உணர்வு பல வழிகளில் வெளிப்படுகிறது. தெரியாத ஒருவரிடம், குறிப்பாக மற்றவர்களிடம் பேசும்போது அவர்களை தங்களுக்கு கீழானவர் களாக நினைத்துக் கொண்டு பேசு கின்றனர். ‘தயவுசெய்து’ அல்லது ‘நன்றி’ என்றோ குறிப்பிடுவதில்லை.

இப்படி ‘ப்ளீஸ்’ என்றோ ‘தாங்க் யூ’ என்று சொல்ல இயலாதது, அவர்கள் மற்றவர்களை மதிப்பதில்லை என்பதையே காட்டுகிறது. நான் ஒரு முறை என் தந்தையிடம் இது பற்றி குறிப்பிட்டு, ஏன் அப்படி? என்று கேட்டேன். 23 அல்லது 24 வயதில் ஒருவர் யு.பி.எஸ்.சி. தேர்வு எழுதி தகுதியான வேலைக்குச் சேர்வதிலிருந்தோ, அடுத்த 35 அல்லது 37 ஆண்டுகளுக்கு, அல்லது வேலையிலிருந்து நீக்கப் படும் வரை தங்களைத் தாங்களே பெரிய மனிதர்களாக நினைத்துக் கொள்கின்றனர். தங்களது மூத்த அதிகாரிகளைத் தவிர மற்றவர்களை கீழானவர்களாகவே பார்க்கின்றனர். அவர்களின் முரட்டுத்தனமான நடத்தை மட்டுமல்ல, அதிகாரிகள் என்பதால் எழும் உரிமை உணர்வும் இதற்கு காரணமாகும்.

ஆனால், வெளிநாடு வாழ் இந்தியர்களும் ஏன் அப்படி இருக்கிறார்கள் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. எனது குடும்பத்தையே எடுத்துக் கொள்ளுங்கள். கடந்த 30 ஆண்டுகளில் பலர் வெளிநாடுகளில் பணிபுரியச் சென்றார்கள். இதில் எனது மகனும் ஒருவர் என்பதை நான் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். இவர்கள் இந்தியாவுக்கு வெளியே வாழ்கிறார்கள் என்பதற்காக தங்களை உயர்ந்தவர்களாக நினைக்கிறார்கள். அவர்களின் மனோபாவம் என்னவென்றால், நாங்கள் வெளிநாட்டில் இருந்தபோது எங்களை யாரும் மதிப்பாக நடத்த வில்லை. இப்போது நாங்கள் திரும்ப இந்தியாவுக்கு வந்துவிட்ட நிலையில் எங்களுக்கு மரியாதையும் முன்னுரிமையும் தர வேண்டும் என்று நினைக்கின்றனர். நன்கு படித்த, பரவலான அறிமுகம் உள்ள வெளிநாடு வாழ் இந்தியர்கள் பெரும்பாலானவர்களிடம் இந்த உணர்வை அதிகம் காணலாம்.

நமது குடும்பத்தைச் சேர்ந்தவர்களே அதாவது, மகனாகவோ அல்லது மகளாகவோ இருக்கலாம். அவர்கள் வெளிநாடு களில் இருக்கும்போதும் சரி, இந்தியாவுக்கு வந்தாலும் சரி தங்களை மரியாதையுடன் சிறப்பாக நடத்த வேண்டும் என்று நினைக்கின்றனர். நமது குடும்பத்துக்குள்ளேயே இந்த விசித்திரமான வெளிப்பாடு தெரிகிறது. அவர்கள் வெளிநாடு களிலிருந்து இங்கு வந்தால், அம்மாதான் தங்களுக்கு சமைத்துப் போட வேண்டும் என்று நினைப் பதாக பல பெற்றோர்கள் புகார் செய்வதை நான் கேட்டிருக்கிறேன். அம்மா கையால் சமைக்கும் வீட்டுச் சாப்பாடு தான் எங்களுக்கு வேண்டும் என்பார்கள். அவ்வளவுதான்! அவர்கள் இங்கு தங்கியிருக்கும் காலம் வரை அம்மாதான் மூன்று வேளையும் அவர்களுக்கு சமைத்து சாப்பாடு போட வேண்டும்.

வெளிநாடுகளிலிருந்து மகனோ அல்லது மகளோ குழந்தைகளுடன் இங்கு வந்தால், இங்கே பாருங்க நாங்கள் வெளிநாட்டில் கஷ்டப்பட்டு வேலை செய்வதுடன், வீட்டு வேலைகளையும் நாங்களே செய்ய வேண்டியுள்ளது. இங்கே வந்தால்தான் எங்களுக்கு சற்று ஓய்வு கிடைக்கும். இங்கே நாங்கள் எதுவும் செய்யமாட்டோம். வெளியில் சுற்றிவிட்டு வருவோம். எங்களை அதைச் செய் இதைச் செய் என்று தொந்தரவு செய்யாதீர்கள் என்று உரிமையுடன் கூறுவார்கள். அப்போது தாய்தான் சமைப் பதிலிருந்து எல்லா வேலைகளையும் அவர்களுக்காகச் செய்ய வேண்டியிருக்கும்.

என்னை தவறாக நினைக்க வேண்டாம். உங்கள் பிள்ளைகள் இந்தியாவில் இருந்தாலும் சரி வெளிநாட்டில் இருந்தாலும் சரி அவர்களுக்காக சில வேலைகளைச் செய்வது மகிழ்ச்சியாகத்தான் இருக்கிறது. அதில் எந்த பிரச்னையும் இல்லை. பிரச்னை உரிமை உணர்வு தான். குழந்தைகளுக்குச் செய்ய வேண்டியதை நாங்கள் கடமையாகச் செய்கிறோம். எஞ்சியுள்ள உங்கள் தேவைகளை நீங்கள்தான் பூர்த்தி செய்து கொள்ள வேண்டும். எங்களை சிறப்பாக நடத்துங்கள் என்று அவர்கள் கூறுவது எப்போது எரிச்சலூட்டுகிறது தெரியுமா? அவர்கள் வெளி நாட்டுச் சேவையில் இருக்கும் போது. அவர்கள் அப்போது தங்களை வெளிநாட்டு விவகாரங்கள் துறையில் வேலை செய்பவர்களாக மட்டுமல்லாமல், அடிக்கடி வெளிநாடு செல்வதால், தாங்களும் வெளிநாடு வாழ் இந்தியர்கள் என்ற நினைப்பில் இருக்கிறார்கள். ஆனால், இந்தியாவில் வரிசெலுத்துவோரின் முழு உதவியுடன். இது ஒவ்வொரு வருக்கும் மூன்று விதமான எரிச்சலூட்டும் பின்னடைவு.■

# செய்தித் துளிகள்

### இந்தியாவின் முதல் சூரிய ஒளிக் கிராமம்



*அழகிய சூரியக் கோயிலுக்குப் புகழ் பெற்ற குஜராத்தில் உள்ள மெஹ்சனா மாவட்டத்தில் இருக்கும் மொதெரா என்ற கிராமம் இந்தியாவில் 24x7 சூரிய ஒளி ஆற்றல் பெறும் முதல் கிராமமாகியுள்ளது. தரையில், வீடுகள், அரசுக் கட்டடங்களின் கூரைகளின் மீது என 1000க்கும் மேற்பட்ட சூரிய ஒளி ஆலைகள் நிறுவப்பட்டு, 15Mwh மின்கலன் ஆற்றல் சேமிப்பு அமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளன.*



### வெப்ப ஆற்றல் நடன மேடை

*ஸ்காட்லாந்தைச் சேர்ந்த இரவு விடுதியான SWG3ல் உள்ள நடன மேடை நடனக் கலைஞர்களுடைய உடல் வெப்பத்தை வாங்கி அதை வெப்ப ஆற்றலாக மாற்றுகிறது. இசையின் தீவிரத்தைப் பொறுத்து இது 250 முதல் 600 வாட்வரை இருக்கலாம். இந்த ஆற்றல் ஏந்திச்செல்லும் நீர்மம் ஒன்றின் வழியாக 650 அடி ஆழமுள்ள துளைக் கிணற்றுக்குக் கொண்டு செல்லப்படுகிறது, அங்கு அது மின்னேற்றப்பட்டு விடுதிக்கு வெப்பம்/குளிர்ச்சியை வழங்க அனுப்பப்படுகிறது.*

### ‘மா’ என்னும் இயந்திர மனிதர்



*கோவாவைச் சேர்ந்த தினக்கூலித் தொழிலாளர் பிபின் கடம் தன்னுடைய சிறப்புக் குழந்தை மகளுக்கு உணவு ஊட்டுவதற்கு இயந்திர மனிதர் ஒருவரை உருவாக்கியிருக்கிறார். இதில் ஒரு கிண்ணம் உள்ளது, இதன் கையுடன் ஒரு ஸ்பூன் இணைக்கப்பட்டுள்ளது, அதன்மூலம் இது உணவு ஊட்டுகிறது. இந்த இயந்திர மனிதரை மேலும் மேம்படுத்தத் தேவையான நிதி உதவியைக் கோவா புதுமைச் சிந்தனை அவை வழங்கும்.*

### பேரிச்சையைக் காப்போம்



*பேரிச்சை மரத்தைத் தத்தெடுப்போம் என்ற முன்னெடுப்பின் கீழ் ஈராக் குடும்பங்கள் ஈராக்கின் பேரிச்சை மரங்களைக் காத்துப் பேரிச்சம் பழத் தொழில் துறையை மேம்படுத்த முயல்கின்றன. பாக்தாத், கர்பாலா, நஜாஃப், தெற்கு ஈராக்கின் பிற பகுதிகளில் 70,000க்கும் மேற்பட்ட பேரிச்சை மரங்கள் நடப்பட்டுள்ளன. குடும்பங்கள் தங்களுடைய மரங்களைத் தத்துக்கு வழங்குகின்றன, பதிலுக்குப் பேரிச்சம்பழ அறுவடையைப் பெறுகின்றன.*



### உக்ரைனைச் சரிசெய்யும் நடன நிகழ்ச்சிகள்

*உக்ரைனில் “சேர்ந்து பழுதுபார்ப்போம்” என்ற முன்னெடுப்பின் கீழ் DJக்கள் நடன நிகழ்ச்சிகளையும் குண்டு தாக்கிய கட்டடங்களைச் சரிசெய்வதையும் இணைக்கிறார்கள். சமீபத்திய நிகழ்வு ஒன்றில் க்யிவ்-க்கு வடகிழக்கில் உள்ள யஹிட்னெ கிராமத்தில் குண்டு தாக்கிய சேதங்களுக்கிடையில் 200 பேர் நடனம் ஆடினார்கள். இந்த நிகழ்ச்சி இதுவரை 3 கிராமங்களில் 9 நிகழ்ச்சிகளை நடத்திச் சேதமடைந்த வீடுகளைப் பழுது பார்த்துள்ளது.*

*ஒருங்கிணைப்பு: கிரண் ஜெஹரா; வடிவமைப்பு: S கிருஷ்ணப்ரதீஷ்*

Registered No. TN/CCN/677/2022-2024
Licensed to post WPP No.TN/PMG(CCR)/WPP-611/2022-24
Total number of pages in this monthly issue, including cover, 84. Price: ₹40
Registered with Registrar of News Papers for India TNTAM/2018/76372 Rotary News Tamil Published on the first week of every month

ADVT.

